விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.



பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆனி 01 வெள்ளிக்கிழமை (15.06.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 178

## ஞானசார தேரருக்கு கடூழியச்சிறை நீதிமன்றம் நேற்று அதிரடித் தீர்ப்பு

(கொழும்பு)
மதவாதக் கருத்துக்களால் தொடர் சர்ச்சைகளை ஏற்படுத்தி வந்த பொது பல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு ஒரு வருடம் கடூழிய சிறைத்தண்டனை விதிக்க ப்பட்டுள்ளது.


ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தால் நேற்று வியாழக்கிழமை குறித்த அதிரடி தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது.



அதன்படி, ஞானசாரருக்கு ஆறு மாதங்களில் நிறைவடையும் வகையில் ஒரு வருட கடூழிய சிறை த்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலி 24

## நுண்நிதிக் கடன் தொல்லையிலிருந்து மக்களை மீட்க கவனயீர்ப்புப் பேரணி



நுண்நிதிக் கடனில் சிக்கியிருக்கும் மக்களை விடுவிக்க கோரி வடக்கில் நேற்று நான்கு மாவட்டங்களில் கவனயீர்ப்பு பேரணி இடம்பெற்றது. (விரிவான செய்திகள் 8,9-ம் பக்கங்களில்)

## பனையிலிருந்து குதித்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
பனை மரத்தில் இருந்து கீழே குதித்த குடும்பஸ்தர் படுகாயங்களுக்குள்ளாகி உயிரிழந்த சம்பவம் உடுப்பிட்டி பகுதியில் இடம்பெற்றது.

உடுப்பிட்டி இமையாணன் பகுதியை சேர்ந்த மூன்று 24

## தனியார் கல்வி நிறுவனம் தீக்கிரை

(யாழ்ப்பாணம்)
வட்டுக்கோட்டைப் பகுதியில் தனியார் கல்வி நிறுவனம் இனந் தெரியாத நபர்களால் நேற்று முன்தினம் இரவு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. 24

## விடுதிக் கழிவறையில் மாணவனின் சடலம்

(யாழ்ப்பாணம்)
வேலணை மத்திய கல்லூரி விடுதியில் தங்கியிருந்து தரம் 8 இல் கல்வி கற்று வந்த மாணவன் ஒருவன் விடுதியின் கழிவறையில் இருந்து நேற்று இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி கோணா 24

# இந்து விவகார அமைச்சிலிருந்து மஸ்தான் இராஜினாமா!

## மைத்திரியுடன் கலந்துரையாடிய பின் முடிபு

(கொழும்பு) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பையடுத்து இந்து விவகார பிரதி அமைச்சர் பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான கே.கே.மஸ்தான் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று ஜனாதிபதியுடன் சந்தித்து பிரதி அமைச்சர் பதவியை பெற்ற பின் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் கலந்துரையாடியிருந்தேன். நான் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கின் அபிவிருத்தி மற்றும் இந்து விவகார பிரதி அமைச்சினை ஏற்றுக் கொண்ட நிலையில் இந்து விவகார பிரதி அமைச்சராக நான் நியமிக்கப்பட்டதற்கு எதிராக அரசியல் நோக்கம் கருதி திட்டமிட்டு எனக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் மதங்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்காகவும், பொது அமைப்புக்கள் சில கேட்டுக் கொண்டதற்கு இணங்கவும் நானாக முன்வந்து இந்து விவகார பிரதி அமைச்சர் பதவியை இராஜினாமா செய்துள்ளதுடன் ஏனைய அமைச் 24

## யாழில் 23 இளைஞர்கள் கைது; தடுத்துவைத்து தீவிர விசாரணை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் 23 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில நாட்களில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு வன்முறை சம்பவங்கள் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் குறித்த 23 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் உள்ள பொலிஸ் அதிகாரிகளினால் குறித்த 23 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கூர்மையான ஆயுதத்தினால் தாக்கியமை, காயமேற்படுத்தியமை மற்றும் வன்முறை செயற்பாடுகளில் ஈடுபட்டமை போன்ற குற்றச்சாட்டின் பெயரில் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர் 24

## கல்விப் பணிப்பாளர் நியமனம்
## மேலதிக நடவடிக்கையை நிறுத்துமாறு பிரதம செயலாளருக்கு மன்று கட்டளை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்காக வடக்கு மாகாண பிரதம செயலாளரால் விடுக்கப்பட்ட விண்ணப்பம் கோரலின் அடிப்படையில் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களை வைத்து மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதை நிறுத்தி வைக்குமாறு யாழ். மேல் நீதிமன்றம் நேற்று கட்டளை வழங்கியது.

அத்துடன் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் மனுவில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்படும் அதிகாரி மன்றில் தோன்றுவது அவசியம் என்றும் மன்றின் அனுமதி பெற்று பிரதிநிதி ஒருவரை 24

## ஜனாதிபதியின் புதிய திட்டம் வேடிக்கையானது
- சிறீதரன் எம்.பி -

(கிளிநொச்சி)
தமிழ் அரசியல் கைதி ஆனந்த சுதாகரனை விடுதலை செய்து அவருடைய பிள்ளைகளைக் காப்பாற்ற இயலாத ஜனாதிபதி ஆரம்பிக்கும் புதிய திட்டம் மிகவும் வேடிக்கையானது எனத் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நாடாளு 23

## சிங்கள ராவய எச்சரிக்கை

(கொழும்பு)
ஞானசார தேரரின் தண்டனை குறித்து ஜனாதிபதியும் பிரதமரும் கண்டுகொள்ளவில்லையென்றால், ஒட்டுமொத்த பௌத்தர்களையும் வீதியில் இறக்கி போராட தயாராக உள்ளதாக சிங்கள ராவய அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஹோமாகம நீதிமன்றத்திற்கு முன்னால் நேற்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் 23

## சட்டச் சிக்கல் இல்லையென்றால் மகிந்தவே ஜனாதிபதி வேட்பாளர்
தம்பி பசில் தெரிவிப்பு

(கொழும்பு)
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களுடனும் தான் எவ்வித பேச்சுவார்த்தையும் மேற்கொள்ளவில்லை என்றும் அவ்வாறான குழுக்களை ஏற்றுக் கொள்ள தயாரில்லை என்றும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். 24



## மன்னார் புதைகுழி தடய பொருட்கள் அனைத்தும் நீதிமன்றப் பாதுகாப்பில்

(மன்னார்)
மன்னார் நகர நுழைவாயிலில் அமைந்திருந்த சதொச விற்பனை நிலையம் உடைக்கப்பட்டு புதிய கட்டிடம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் அந்த லங்கா சதொச விற்பனை நிலைய வளாகத்தில் இருந்து அகழ்வு செய்யப்பட்ட மண்ணில் அதிகளவிலான மனித எச்சங்கள் மற்றும் சந்தேகத்திற்கு இடமான அநேக தடய பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

மேற்படி தடய பொருட்கள் அனைத்தும் மிகவும் முக்கியமானவை எனவும் குறித்த பொருட்கள் விசாரணைகள் மற்றும் காலத்தை கணிக்கும் செயற்பாட்டுகளில் பாரிய செல்வாக்கு செலுத்த கூடியதாக இருப்பதனால் பாதுகாப்பு காரணங்களுக்காக அவ் தடயப்பொருட்களை நீதிமன்ற பாதுகா 23

**வாசனா சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 1496 திகதி 2018/06/14
J F G
வெற்றி இலக்கங்கள் 25 27 59 68 போனஸ் இலக்கம் 68
தேசிய லொத்தர் சபை

**மஹஜன சம்பத**
திகதி 2018/06/14
சீட்டிழுப்பு இலக்கம் 3679
ஆங்கில எழுத்து N வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 5 0 0 9 1
தேசிய லொத்தர் சபை

**கொவிசெத**
திகதி 2018.06.14
சீட்டிழுப்பு இலக்கம் 1790
ஆங்கில எழுத்து U வெல்லப்பட்ட இலக்கங்கள் 05 53 59 61
தேசிய லொத்தர் சபை

**நீரோகா**
திகதி 2018/06/14
சீட்டிழுப்பு இலக்கம் 407
லக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 10 38 50 58 33
தேசிய லொத்தர் சபை


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## சுன்னாகம்

**2018ம் ஆண்டுக்கான பகிரங்க கேள்வி அறிவித்தல்**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலக எல்லைக்குட்பட்ட புதிதாக அமைக்கப்பட்ட இறைச்சிக்கடைகளை 2018.07.01ஆம் திகதி தொடக்கம் 2018.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 18.06.2018 - 25.06.2018 பி.ப 1.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 25.06.2018 பி.ப 1.30 மணி
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 25.06.2018 பி.ப 2.00 மணி

| தொ இல. | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| 01. | மயிலங்காடு ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 25000.00 | 250.00 |
| 02. | மயிலங்காடு கோழிக் கடை | 500.00 | 2000.00 | 32500.00 | 250.00 |

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

க.தர்ஷன்
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.
15.06.2018

(C-2926)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

**விற்பனைக்கு**
சுன்னாகம் AGA Office வீதியில் ஒரு பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:
0761619517
(4444)

**வேலைக்கு ஆட்கள் தேவை**
டிசைனிங் மற்றும் நிர்வாக வேலைக்கு ஆட்கள் தேவை.
தொடர்பு :
ஆர்க் பிறிண்டிங் சொலுசன், யாழ்ப்பாணம்.
021 222 2828

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-2901)

SB TRAVELS AND TOURS (Pvt) Ltd
(நேரடி முகவர்)
இந்தியா வீசா விண்ணப்பப்படிவம்-150/-
இந்திய வீசாவிற்கான போட்டோ-150/-
வீசா விண்ணப்பப் படிவம் + போட்டோ 300/-
இந்தியாவிற்கான வீசாவினை நேரடியாக எமது நிறுவனத்தினூடாகவே பெற்றுக்கொள்ளலாம். இடைத்தரகர்கள் தேவையில்லை. நேரடியாக தொடர்பு கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:0212229555/ 0212227666/0766911080, 81, 82, 83
இல.160, கோவில் வீதி, யாழ்ப்பாணம்
(C-2869)


# மரண அறிவித்தல்



## திருமதி
## கந்தையா நாகம்மா

கோப்பாய் தெற்கு, கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா நாகம்மா அவர்கள் நேற்று முன்தினம் (13.06.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-தங்கம்மா அவர்களின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற ஆறுமுகம் கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், அமரர் முத்தையா (ஆசிரியர்), நவரத்தினம் (இலங்கை மின்சார சபை), இராசம்மா மற்றும் திருஞானபூங்கோதை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகன் (தபாலதிபர்), தங்கமலர், அமரர் தங்கராஜா (பொறியியலாளர்), கனகலிங்கம், கலாநிதி மனோகரன், அமரர் செல்வநாயகம், அமரர் இராசமலர், தவமணி (கணக்காளர்), க.சுரேஷ் பிரேமச்சந்திரன் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்), கலாநிதி சர்வேஸ்வரன் (கல்வி அமைச்சர்-வட மாகாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாக்கியம், அமரர் தியாகராஜா, சற்குணமலர், வசுமதி, சுசி, கமலநாதன், சிவராஜா, கோகிலகுமாரி, சுபாஷினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சந்திரமோகன், சாந்தினி, முகுந்தினி, தியாகமலர், தியாகவேணி, தியாகரூபன், தியாகசொரூபன், தியாகவதனி, சுதர்ஷன், நிருஜா, ஆனந்த முருகன், குன்றக்குமரன், ஆரணி, பார்த்தசாரதி, செல்வனா, வேலவன், சந்திரன், நாகம்மா, தாரகா, மேனகா, சொரூபிகா, பவித்ரா, கான்டீபன், பிரியங்கா, அபர்னா, விக்னேஸ்வர், நிஷா, கீதப்பிரியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யதுபரன், சாத்விகா, நிவேதிதா, கஜன், அர்ச்சுனா, ராகுல், துளசி, ஹரிகரன், பூஜா, ஆர்த்தி, அஸ்வினி, ஓவியா, இனியா, இலக்கியா, நிவேதன், நிஷாதன், ஸ்ருதி, ஆகஷன், குறிஞ்சி, அரண், அவிரா, மியா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15/06/2018) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:க.சுரேஷ் பிரேமச்சந்திரன்**
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
**கலாநிதி க.சர்வேஸ்வரன்**
(கல்வி அமைச்சர்-வட மாகாணம்)
**0212230363, 0777362481, 0777184410**

(சி-2924)

## வர்த்தக நிலையத்தில் தீ விபத்து
# ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று பெண்கள் மரணம்

(பதுளை)

நேற்று அதிகாலை, பதுளை-பசறை நகரில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பாரிய தீப்பரவல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதன்போது ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று பெண்கள் பலியானதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. உயிரிழந்தவர்கள் வர்த்தக நிலையத்தில் தங்கியிருந்த உரிமையாளர், அவருடைய சகோதரி மற்றும் அவரின் சித்தி ஆகியோர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீயினால் குறித்த வர்த்தக நிலையம் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன், குறித்த தீ பரவலுக்கான காரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## கோத்தபாய ராஜபக்ஷவுடன் சு.கவின் 16எம்.பிக்கள் சந்திப்பு



(கொழும்பு)

தேசிய அரசாங்கத்திலிருந்து விலகிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 16 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவின் வீட்டில் நேற்று முன்தினம் இரவு இந்த சந்திப்பு இடம்பெற்றது.

முன்னதாக இவ்வாறு ஒரு சந்திப்பு இடம்பெறவுள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்த போதிலும், அவ்வாறானதொரு சந்திப்பிற்கான வேண்டுகோள் தன்னிடம் முன்வைக்கப்படவில்லை என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

புற்றுநோய் மற்றும் கட்டிகளுக்கான சிகிச்சை
Cancer & Tumor Prevention & Rehabilitation Therapy
புற்று நோய், மற்றும் கட்டிகளால் பாதிக்கப்படும் வாய்,தொண்டை (Oral Cancer:Lip, Tongue, Cheek, Throat) மார்பகம், கருப்பை, குடல் போன்ற உறுப்புகளில் ஏற்படும் தீங்கானகட்டிகள், தீங்கற்றகட்டிகள் (Benign & Malignant Tumor)கதிர்வீச்சு,ஹீமோ சிகிச்சையின் பின்னர்(Radiation & Chemotherapy) ஏற்படும் தொந்தரவுகளுக்கும், வாய்ப்புண் (Persistent Mouth Sore) விழுங்க முடியாமை, தாடையில் வலி, முரசுவலி, வீக்கம், உமிழ்நீர்ச்சுரப்பி வீக்கம் (Lump or Thickeninig in the cheek) முரசில் இரத்தக்கசிவு, உண்ணும் போது வேதனை,பலவீனம் உடம்பில் எரிச்சல் போன்ற பிரச்சினைக்கு ஆயுள்வேத சிகிச்சை பெறலாம்.
சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொண்ட பின் வரவும்
Dr.R.LAKSHMANA IYER D A M (Cey), D M G (ind)
Reg-7966, (Dep Ayu-6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி உள்ளே) நல்லூர் - யாழ்ப்பாணம்.
Tel:- 0212054066 / 0778725251
(4510)

# ஐம்பதுக்கு ஐம்பதா? 60:40? பாராளுமன்றமே முடிவெடுக்கும்

## மகிந்த தேசப்பிரிய விளக்கம்



(கொழும்பு)

புதிய கலப்பு முறையின் பிரகாரம் மாகாண சபைத் தேர்தலை ஐம்பதுக்கு ஐம்பது வீதம் நடத்துவதா? அல்லது அறுபதுக்கு நாற்பது வீதம் நடத்துவதா? என்பதனை பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தெனியாய தேசிய பாடசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

நாட்டில் தேர்தல்கள் தாமதமாகின்றன. உரிய நேரத்தில் தேர்தல் நடத்தாவிடின் நாட்டிலும் அரச நிறுவனங்களிலும் பல குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புள்ளன.

ஆகவே தேர்தலை உடன் நடத்த வேண்டும். இல்லையேல் ஜனநாயகத்திற்கு அது பெரும் அச்சுறுத்தலாக அமையும்.

இதனால் ஜனநாயகமும் அபிவிருத்தியும் அதள பாதாளத்திற்கு தள்ளப்பட்டு விடும். சாதாரண சங்கம் என்றாலும் இடைக்கிடையே தேர்தல் நடத்தப்பட்டு புதியவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

அதேபோன்றே மாகாண சபைகளுக்கு உரிய நேரத்தில் புதியவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

மாகாண சபைக்கு புதிய தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி தற்போதைக்கு ஐம்பது வீதம் விகிதாசார முறைமையில் இருந்தும் ஐம்பது வீதம் தொகுதி வாரி முறைமையில் இருந்தும் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதே புதிய முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எனினும் அதனை விட 60 வீதம் தொகுதி வாரியாகவும் 40 வீதம் விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்ய வேண்டும் என பலர் கோருகின்றனர்.

இந்நிலையில் தற்போது எல்லை நிர்ணய அறிக்கை பாராளுமன்றத்திலுள்ள நிலையில் அதனை பாராளுமன்றம் நிறைவேற்றி தந்தால் மாத்திரமே எனக்கு தேர்தலை நடத்த முடியும்.

ஐம்பதுக்கு ஐம்பதா அல்லது அறுபதுக்கு நாற்பதா என்ற தீர்மானத்தை பாராளுமன்றமே எடுக்க வேண்டும். அதுமாத்திரமின்றி தொகுதிகளின் எண்ணிக்கையை குறைப்பதனாலும் அதனையும் பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும். இதற்கு அப்பால் பழைய முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவதாக இருந்தால் அதனையும் பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நிலக்கரி மோசடிக்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அவசியம்

(கொழும்பு)

நிலக்கரி மோசடி விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்றினை அமைக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென, அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். “2009 முதல் 2016 ஆம் காலப் பகுதியில் நிலக்கரி கொள்வனவில் மோசடி இடம்பெற்றுள்ளது. இந்த மோசடி மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி விவகாரத்தினை காட்டிலும் மிகவும் பாரிய அளவிலான மோசடியாகும். இதில் பலர் பயனடைந்துள்ளனர்.

இந்தச் செயற்பாட்டின் காரணமாக மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. இதனால் 2 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

மேலும் ஊழல் இடம்பெற்றமைக்கான ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் என்னிடம் உள்ளது. அதனை ஜனாதிபதி ஆணைக்குழு முன் என்னால் வெளிப்படுத்த முடியும். மேலும் 2009 முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஒரே நிறுவனத்துக்கு நிலக்கரி டெண்டர் வழங்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்” எனவும் சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# அமெரிக்கா எமக்கு உத்தரவிட முடியாது

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிடுவதையோ, அவர் ஜனாதிபதியாவதையோ அமெரிக்கா அனுமதிக்காது என்று அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஷாப் தம்மிடம் கூறிய தாக வெளியான செய்திகளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை தடுப்பது பற்றி, அதுல் கெஷாப் புடனான சந்திப்பின் போது, எந்தக் கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை.

அமெரிக்கா எமக்கு உத்தரவிட முடியாது. இலங்கையை விட்டு வெளியேறும் அமெரிக்கத் தூதுவருடனான சந்திப்பு மரியாதை நிமித்தமாகவே இடம்பெற்றது” என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7)

# வரணியில் வீடொன்றில் பெற்றோல்குண்டு வீச்சு



(வரணி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இடைக்குறிச்சி மேற்கு வரணியில் அமைந்துள்ள வீடு ஒன்றின் மீது நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 11 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் கொண்ட இனந்தெரியாத கும்பல் ஒன்று 5 பெற்றோல் குண்டுகளை வீசியெறிந்துள்ளது.

இத் தாக்குதலில் ஜன்னல் மற்றும் கதவு, சேலை, கதிரை போன்றவற்றில் தீப்பற்றி எரிந்துள்ளன.

அதுமட்டுமன்றி அந்தக் கும்பல் வீட்டுக் கதவினையும் வாளினால் வெட்டி சேதப்படுத்தியுள்ளது. வீட்டில் இருந்தோர் அறையினுள் தூக்கத்தில் இருந்தமையால் அவர்களுக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லை. அவர்கள் சத்தம் கேட்டு விழித்து மின் விளக்குகளை எரிய விட்டதும் அந்தக் கும்பல் தப்பியோடி விட்டது.

கடந்த வாரமும் இதே பகுதியில் ஒரு வீட்டின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலமாக வரணிப்பகுதியில் சமூகவிரோதச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. இதனால் பொது மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

எனவே இச்சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என மக்கள் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-103)

# பிபா உலகக் கிண்ண கால்பந்து 2018

# வண்ணமயமாக நேற்று ரஷ்யாவில் ஆரம்பம்

உலக கிண்ண கால்பந்து தொடர் ரஷ்யாவில் நேற்று கோலாகலமாக தொடங்கியது. ரஷ்ய அதிபர் புடின், 'பிபா' தலைவர் இன்பான்டினோ பங்கேற்றனர்.

சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு சார்பில் (பிபா) உலக கிண்ண கால்பந்து தொடர் நடத்தப்படுகிறது. 32 அணிகள் பங்கேற்கும் இதன் 21 ஆவது தொடர் ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் நேற்று தொடங்கியது. லுஜ்னிகி மைதானத்தில் தொடக்க விழா நடந்தது.

முதலில் ஸ்பெயினின் இகர கேசிலாஸ் உலக கிண்ணத்தை மைதானத்துக்குள் எடுத்து வந்து அறிமுகம் செய்தார். இலங்கை நேரப்படி இரவு 8.00 மணிக்குத் தொடங்கியது.

80,000 ரசிகர்கள் மைதானத்தில் திரண்டிருந்தனர். பிரேசிலின் ரொனால்டோ மைதானத்துக்கு முதல் நபராக வந்தார். அவரைத் தொடர்ந்து இங்கிலாந்தின் பிரபல பாடகர் ராபியே வில்லியம்ஸ், மைதானத்தில் இருந்த ராட்சத வடிவிலான கால்பந்து மேடையில் இசை நிகழ்ச்சி நடத்தினார்.

**ரொனால்டோ ஆட்டம்**

ரஷ்ய பாடகி அய்டா கரிபுல்லினா, பறவை போல வந்து, ராபியேவுடன் இணைந்து பாடினார். பிறகு உலக கிண்ணத் தொடரில் பங்கேற்கும் 32 அணிகளின் தேசிய



ரொனால்டோ



அய்டா, ராபியே வில்லியம்ஸ்

கொடிகள் மைதானத்துக்குள் கொண்டு வரப்பட்டன. தொடரின் அதிகாரப்பூர்வ தூதர், பிரபல மொடல் அழகி விக்டோரியா லோபிரிவா கால்பந்தை கொண்டு வந்தார். ரொனால்டோ, அதிகாரப்பூர்வ சின்னம் 'ஜபிவாகா' ஓநாய் வேடம் அணிந்தவருடன் இணைந்து கால்பந்து விளையாடினார். அடுத்து பெரியளவிலான கால்பந்தின் மீது நின்ற ஒருவர், ஐந்து கால்பந்துகளை மேல் நோக்கி எறிந்து மாறி மாறி பிடித்து 'ஜக்லிங்' செய்தது ரசிகர்களை கவர்ந்தது.

**புடின் மகிழ்ச்சி**

பிறகு ரஷ்ய ஜனாதிபதி புடின், உலக கிண்ண கால்பந்து தொடரை முறைப்படி ஆரம்பித்து வைத்தார்.

அவர் கூறுகையில்,'' ரஷ்யாவில் அதிகாரப்பூர்வ முதல் கால்பந்து போட்டி 1897ல் நடந்தது. அன்று முதல் இன்று வரையிலும் கால்பந்து இம் மண்ணில் அதிகம் நேசிக்கப்படுகிறது. ரஷ்யா எல்லோருக்கும் நட்பு நாடு. இங்கு வந்துள்ள அனைவருக்கும் சிறப்பான விருந்தோம்பல் காத்திருக்கிறது. கால்பந்து அனைவரையும் ஒரு அணியாக இணைத்துள்ளது'' என்றார்.

# இலகுவாக வென்றது ரஷ்யா

## கோல் மழை பொழிந்து அசத்தல்

உலக கோப்பை கால்பந்து தொடரை ரஷ்ய அணி வெற்றியுடன் ஆரம்பித்தது. லீக் போட்டியில் 5-0 என்ற கோல் கணக்கில் சவுதி அரேபியாவை தோற்கடித்தது.

ரஷ்யாவில், 21ஆவது 'பிபா' உலக கிண்ண கால்பந்து தொடர் நேற்று தொடங்கியது. மொஸ்கோவில் நடந்த முதல் லீக் போட்டியில் 'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ள, உலகின் 'நம்பர் 70' ரஷ்ய அணி, 67ஆவது இடத்தில் உள்ள சவுதி அரேபியாவை எதிர்கொண்டது.

ஆரம்பத்தில் இருந்து ரஷ்ய வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர். ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் ரஷ்ய அணிக்கு கிடைத்த 'கார்னர்' வாய்ப்பில் அலெக்சாண்டர் கோலோவின் தூக்கி அடித்த பந்தை யூரி காஜின்ஸ்கி தலையால் முட்டி கோலடித்தார். இதன்மூலம் இத் தொடரின் முதல் கோல் அடித்தவர் என்ற பெருமை பெற்றார்.

**ஆலன் காயம்**

பின், 14ஆவது நிமிடத்தில் ரஷ்யாவுக்கு கோலடிக்க கிடைத்த வாய்ப்பு தடுக்கப்பட்டது. ஆட்டத்தின் 22ஆவது நிமிடத்தில் ரஷ்ய வீரர் ஆலன், தொடையின் பின் பகுதியில் ஏற்பட்ட காயத்தால் வெளியேறினார். இவருக்கு மாற்றாக டெனிஸ் செரிஷேவ் களமிறங்கினார். ஆட்டத்தின் 31வது நிமிடத்தில் சவுதி அரேபியாவுக்கு கிடைத்த 'பிரீ கிக்' வாய்ப்பு வீணானது. தொடர்ந்து அசத்திய ரஷ்ய அணிக்கு 43 ஆவது நிமிடத்தில் ரோமன் ஜோப்னின் 'பாஸ்' செய்த பந்தை செரிஷேவ் கோலாக மாற்றினார். முதல் பாதி முடிவில் ரஷ்ய அணி 2-0 என, முன்னிலை வகித்திருந்தது.

**கோல் மழை**

இரண்டாவது பாதியிலும் ரஷ்யாவின் ஆதிக்கம் மேலோங்கி இருந்தது. ஆட்டத்தின் 52ஆவது நிமிடத்தில் ரஷ்ய வீரர் சமேடோவ், பந்தை 'கோல் போஸ்ட்டுக்கு' மேலே தூக்கி அடித்து கோலடிக்கும் வாய்ப்பை வீணடித்தார். பின், 71ஆவது நிமிடத்தில் கோலோவின் தூக்கி அடித்த பந்தை ரஷ்யாவின் ஆர்டம் டிஜியுபா தலையால் முட்டி கோலடித்தார். 'ஸ்டாப்பேஜ்' நேரத்தில் ரஷ்யாவின் செரிஷேவ் (90+1), கோலோவின் (90+4) தலா ஒரு கோலடித்து கைகொடுத்தனர். கடைசி நிமிடம் வரை போராடிய சவுதி அரேபிய அணியினரால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் ரஷ்ய அணி 5-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# சாதிப்பாரா ரொனால்டோ?

உலக கிண்ண கால்பந்து தொடரில் இன்று போர்த்துக்கல், ஸ்பெயின் அணிகள் மோதுகின்றன.

ரஷ்யாவில் 21ஆவது 'பிபா' உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது. இன்று சோச்சியில் நடக்கும் 'பி' பிரிவு லீக் போட்டியில் பலம் வாய்ந்த போர்த்துக்கல், ஸ்பெயின் அணிகள் மோதுகின்றன.

போர்த்துக்கல் அணி என்றாலே அணித் தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோதான் நினைவுக்கு வருவார்.

ரியல் மட்ரிட் கழக அணிக்காக எண்ணற்ற கிண்ணத்தை வசமாக்க உதவியுள்ளார். ஆனால், போர்த்துக்கல் அணிக்காக உலக கிண்ணத்தில் ஜொலிக்க தவறுகிறார். இதுவரை, 3 தொடரில் 13 போட்டியில் 3 கோல் மட்டுமே அடித்துள்ளார்.

**கடைசி தொடர்**

தனது 33ஆவது வயதில் களமிறங்கும் ரொனால்டோவுக்கு இது கடைசி உலக கிண்ணத் தொடராக இருக்க வாய்ப்பு அதிகம். இதனால், போர்த்துக்கல் அணிக்கு முதல் பட்டம் வென்று தர



முயற்சிக்கலாம். இளம் வீரர்களான கான் காலோ, பெர்னார்டோ, ஜெல்சன் உள்ளிட்டோர் 'இருப்பது பலம்.

**அனுபவ கூட்டணி**

ஸ்பெயின் அணியை பொறுத்தவரை கடந்த 2010ல் கிண்ணம் வென்றது. இவர்களின் பலமே அனுபவம்தான். ஜெரார்ட் பிக்கே (31 வயது), ரமோஸ் (32), இனியஸ்டா (34) என கைதேர்ந்தவர்கள் இருப்பதால், எளிதாக வெற்றியை விட்டுத்தர வாய்ப்பில்லை. அதே நேரம், போட்டி தொடங்கும் ஒரு நாளுக்கு முன், திடீரென பயிற்சியாளரை நீக்கியது நெருக்கடியை தரலாம். புதிய பயிற்சியாளரின் வியூகம், வீரர்களை களமிறக்கும் திட்டம் போன்றவற்றில் ஏற்படும் மாற்றம் கைகொடுக்குமா எனத் தெரியவில்லை. ஐரோப்பாவின் பலம் வாய்ந்த இரு அணிகள் மோதுவதால் விறுவிறுப்பான ஆட்டத்தை ரசிகர்கள் காணலாம்.

**இதுவரை...**

சர்வதேச அளவில் இரு அணிகளும் இதுவரை 36 போட்டிகளில் மோதி உள்ளன. இதில் ஸ்பெயின் 17, போர்த்துக்கல் 6 போட்டியில் வென்றுள்ளன. 13 போட்டி 'டிரா' ஆனது. உலக கிண்ண அரங்கில் ஒரு முறை மட்டுமே (தென்னாபிரிக்கா, 2010) சந்தித்துள்ளன. இதில் ஸ்பெயின் 1-0 என வெற்றி பெற்றது.

# ஆப்கானின் கன்னி டெஸ்ட்

# தவான் சாதனை சதம், விஜய் அபாரம்

பெங்களூரு டெஸ்டில் அசத்திய ஷிகர் தவான், டெஸ்ட் அரங்கில் உணவு இடைவேளைக்கு முன் சதம் அடித்த முதல் இந்திய வீரர் என்ற சாதனை படைத்தார். முரளி விஜய் தன் பங்கிற்கு சதம் அடித்து அசத்தினார்.

இந்தியா, ஆப்கானிஸ்தான் அணிகள் மோதும் டெஸ்ட் பெங்களூருவில் நேற்று ஆரம்பமானது.

டெஸ்ட் அந்தஸ்து பெற்ற பின் ஆப்கானிஸ்தான் அணி களமிறங்கும் முதல் போட்டி இது. நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணியின் பொறுப்புத் தலைவர் ரகானே துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**புதிய சாதனை**

இந்திய அணிக்கு ஷிகர் தவான், முரளி விஜய் ஜோடி சுப்பர் ஆரம்பம் கொடுத்தது. டெஸ்ட் அரங்கில் ஆப்கானிஸ்தான்' அணிக்காக முதல் பந்தை வீசினார் யாமின் அகமத்ஜாய். முரளி விஜய் ஒருபுறம் நிதானத்தை வெளிப்படுத்த தவான் வழக்கம் போல ருத்ரதாண்டவம் ஆடினார். பவுண்டரி மழை பொழிந்த இவர், மொஹமட் நபி பந்தில் சிக்சர் விளாசினார்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ரஷிட் கான் வீசிய முதல் ஓவரில், மூன்று பவுண்டரிகள் அடித்தார் தவான். 47 பந்தில் அரைச்சதம் எட்டினார். முஜீப் அர் ரஹ்மான் 'சுழலில்' 4 பவுண்டரிகள் அடித்த இவர், உணவு இடைவேளைக்கு முன் 87ஆவது பந்தில் சதம் அடித்தார்.

**மழை தொல்லை**

முதல் விக்கெட்டுக்காக 28.4 ஓவரில் 168 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், 96 பந்தில் 107 ஓட்டங்கள் எடுத்த தவான் (19 பவுண்டரி, 3 சிக்சர்) ஆட்டமிழந்தார். முரளி விஜய் 16ஆவது அரைச்சதம் எட்டினார்.

இந்திய அணி முதல் இன்னிங்சில் ஒரு விக்கெட்டுக்கு 248 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழையால் போட்டி நிறுத்தப்பட்டது. ஒரு மணி நேரம், 15 நிமிடத்துக்குப் பின் மீண்டும் போட்டி தொடங்கியது. கூடுதலாக 16 ஓட்டங்கள் மட்டும் சேர்த்த போது மீண்டும் மழை குறுக்கிட சிறிது தாமதம் ஆனது.

**திடீர் சரிவு**

வஃபதார் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய முரளி விஜய் சதம் கடந்தார். இந்திய மண்ணில் தொடர்ந்து அடித்த மூன்றாவது சதம் இது. ராகுல் 11ஆவது அரைச் சதம் அடித்தார். இந்நிலையில் முரளி விஜய் (105), ராகுல் (54) சிறிய இடைவெளியில் திரும்பினர். அடுத்து ரகானே (10), புஜாரா (35) ஆட்டமிழக்க, தினேஷ் கார்த்திக் (4) துரதிர்ஷ்டவசமாக ரன் அவுட்டானார்.

ஒரு விக்கெட் இழப்புக்கு 280 ஓட்டங்கள் என வலுவாக இருந்த இந்திய அணி, அடுத்து 67 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 5 விக்கெட்டுகளை இழந்தது. முதல் நாள் முடிவில் இந்திய அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட்டுக்கு 347 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பாண்ட்யா (10), அஷ்வின் (7) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**17 வயது, 78 நாட்கள்**

தேசத்துக்கான அறிமுக டெஸ்டில் களமிறங்கிய இளம் வீரர் என்ற பெருமை பெற்றார் ஆப்கானிஸ்தானின் முஜீப் அர் ரஹ்மான். 66 ஆண்டுக்கு முன் பாகிஸ்தான் அறிமுக டெஸ்டில் (1952) ஹனீப் மொஹமட், 17 வயது 300வது நாளில் களமிறங்கினார்.

**முதல் இந்தியர்**

டெஸ்ட் அரங்கில் உணவு இடைவேளைக்கு முன் சதம் அடித்த முதல் இந்திய வீரர் ஆனார் ஷிகர் தவான். இதற்கு முன் சேவாக், 99 ஓட்., எடுத்ததே (2006, செயின்ட் லூசியா, மே.தீவுகள்) அதிகம்.

சர்வதேச அளவில் இந்த இலக்கை எட்டிய 6வது வீரர் ஆனார் தவான். ஆஸியின் டிரம்பர் (1902), மகார்ட்னே (1921), பிரட்மன் (1930), மஜித் கான் (பாக்., 1976), வோரன் (ஆஸி., 2017) முதல் 5 இடத்தில் உள்ளனர்.

**பிரதமர் மோடி வாழ்த்து**

முதல் டெஸ்டில் பங்கேற்ற ஆப்கானிஸ்தான் அணிக்கு வாழ்த்து தெரிவித்து பிரதமர் மோடி வெளியிட்ட 'டுவிட்டர்' செய்தியில், 'இந்தியாவுடன் வரலாற்று சிறப்பு வாய்ந்த முதல் போட்டியை விளையாடுவது மகிழ்ச்சி. இரு அணி வீரர்களுக்கும் வாழ்த்துக்கள்,' என தெரிவித்தார்.



# அரசின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் மௌனமாக இருப்பது ஏன்?

## சரத் வீரசேகர கேள்வி



(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து இராணுவத்தை சர்வதேசத்திற்கு காட்டிக்கொடுத்து அவர்களை தண்டிக்கும் நோக்கத்துடன் செயற்பட்டு வருவதாக ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற எளிய அமைப்பின் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கூறி யுள்ளார்.

இராணுவம் இழைக்காத யுத்தக்குற்ற விடயங்களை அடியொற்றி உருவாக்கப்பட்ட 30/1 பிரேரணையில் குறிப் பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை ஒவ்வொன்றாக செயற்படுத்தும் பணிகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

மேலும், வலிந்து காணாமல் ஆக்கப்படுதலை தடுப்ப தற்கான பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் காணாமற்போனோர் தொடர்பிலான அலுவலகத்தை உருவாக்கியுள்ளது.

எமது நாட்டின் இராணுவத்தை சிறையில் அடைக்கின்றார்கள். இராணுவத்தை சர்வதேசத்திடம் காட்டிக் கொடுக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் மௌனமாக இருப்பது ஏன் என்று எமக்கு புரிய வில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (6 வருடங்களுக்கு முன்பு விவாகரத்துப் பெற்றவர்) வயது 48, மிக வசதியான நற்பண்புடைய மணமகனுக்கு நற்குணமுள்ள அழகான 40 வயதிற்கு குறைவான பெண்ணை அவரது தாயார் தேடுகின்றார். ஜாதகம் சீதனம் தேவையில்லை. மணமகன் சொந்தத் தொழில் செய்பவர்.

தொடர்புகளுக்கு: 077 711 1256, 077 711 1257 (சி-2914)



குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

மனவளக்கலை யோகாப்பயிற்சிகள் ஆரம்பமாகிறது.

- ✓ எளியமுறை உடற்பயிற்சிகள்
- ✓ எளியமுறை குண்டலினி தியானப் பயிற்சிகள்
- ✓ சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் கற்றுக் கொடுக்கப்படும்.

மாணவர்கள் உயர் புள்ளிகள் பெற
உடல் சோர்வின்றி உழைத்திட
நோய் எதிர்ப்பு சக்தி பெற்று ஆற்றல் பெருகிட
குடும்பத்தில் அமைதி நிலவ அனைவரும் வந்து பயன்பெறுவீர்...

பயிற்சி வழங்குபவர்கள்:
அறிமுகவுரை: பேராசிரியர். சி.முருகானந்தவேல்
பயிற்சி வழங்குபவர்: துணைப்பேராசிரியர். T. நந்தகுமார்

காலம்: 16.06.2018 தொடக்கம் 22.06.2018 வரை
நேரம்: மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணிவரை

இடம்: யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 222 2772

(4523)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி.
நளாயினி வசந்தன்
B.Sc (Agri), PGDE, MED, SLEAS III

எமது கல்லூரி ஆசிரியர் திருமதி. நளாயினி வசந்தன் அவர்கள் கிளிநொச்சி கல்வி வலயத்திற்கு தொழில்நுட்ப பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். அவர் மேலும் பல உயர்வுகளைப் பெற்று மென்மேலும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் கழகம், யா/இந்து மகளிர் கல்லூரி.

(4524)


## தேர்தல் ஆணைக்குழு

**2019 ஆம் ஆண்டில் பாடசாலைகளுக்கு முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை உட்சேர்ப்பதற்காக தேருநர் இடாப்புக்களைப் பரீட்சித்துப் பார்த்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.**

முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை உட்சேர்ப்பதற்காக வதிவை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, உடன் முன்னரான 05 ஆண்டு காலப்பகுதியில் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பான தகவல்களை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கு மேலதிகமாக பிரதேச செயலகங்களிலும் கிராம அலுவலர் அலுவலகங்களிலும் பரீட்சித்துப் பார்க்க முடியுமெனவும் வருடாந்த தேருநர் கணக்கெடுப்புப் படிவத்துடன் (BC படிவம்) கிராம அலுவலர்களால் வழங்கப்படுகின்ற BC பற்றுச்சீட்டில் காணப்படும் தகவல்களுக்கிணங்கவும் இத் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கின்றோம்.

தேர்தல் ஆணைக்குழு
2018.06.15

(சி/195)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வேந்தரின் பேருரைக்கு அழைப்பு

**"இலங்கைத் தமிழரின் தோற்றமும் மறைந்த வரலாறும்"**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மதிப்பிற்குரிய தகைசார் வேந்தர் பேராசிரியர் எஸ். பத்மநாதன் அவர்கள் வழங்கும் சிறப்புக் கருத்துரை**
**18.06.2018 (திங்கட்கிழமை) பி.ப.3.00 மணி**

**"இலங்கைத்தமிழரின் தோற்றமும், மறைந்த வரலாறும்"** என்ற விடயம் தொடர்பாக சிறப்புக் கருத்துரை வழங்கும் நிகழ்வு ஒன்று **இம்மாதம் 18 ஆம் திகதி** (திங்கட்கிழமை) அன்று **யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில், பிற்பகல் 3 மணிக்கு** இடம்பெற இருக்கிறது. இந் நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் மதிப்பிற்குரிய தகைசார் **பேராசிரியர். எஸ்.பத்மநாதன்** அவர்கள் கருத்துரை வழங்க உள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக பேராசிரியர் அவர்கள் கொண்டிருக்கும் புலமைசார் மற்றும் ஆய்வுசார் கருத்துக்கள் யாழ்ப்பாண சமூகத்தினரின் குறிப்பாக பல்கலைக்கழக சமூகத்தினரின் சிந்தனையைத் தூண்டுவதாகவும்,பழைய கண்ணோட்டங்களை மாற்ற உதவுவதாகவும் அமைவதுடன் மிகவும் பயனுறுதி வாய்ந்ததாகவும் அமையப் பெறுவதனால், மேற்படி சிறப்புக் கருத்துரை வழங்கும் நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு துணைவேந்தர் கேட்டுக்கொள்கின்றார்.

(சி/2925)

பதிவாளர்


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 1ஆம் பாதம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/Lபிரான்ஸ் PR<br>எதிர்பார்ப்பு: இந்தியா வந்து திருமணம் செய்வார்<br>தொ.இ: B/8671 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4 ஆம் பாதம்<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'4'<br>தகைமை/தொழில்: BSc கனடா குடியுரிமை<br>தொ.இ: G/7976 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2ஆம் பாதம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: தரம் 10 தனியார் தொழில்<br>தொ.இ: B/8674 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: சூரிசெவ் 1 இல்<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/7979 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1ஆம்பாதம்<br>கி.பா: 47 செவ் 4 இல்<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்: Elect. & Tele Eng. Dip Drive TestEng. Doha<br>எதிர்பார்ப்பு: திருமணம் முடிந்து இலங்கையில் வசிப்பதற்கு விருப்பம்<br>தொ.இ: B/8676 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 56 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA தனியார் தொழில்<br>தொ.இ: G/7985 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி1ஆம் பாதம்<br>கி.பா: 18 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BSc அரச தொழில்<br>தொ.இ: B/8677 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1 ஆம்பாதம்<br>கி.பா: 27<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: I.C.T பட்டதாரி அரச தொழில்<br>தொ.இ: G/7989 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சைவம் தந்த சிவத்தமிழ்ச் செல்வி



சிவபெருமானை முழு முதற்கடவுளாக கொண்டது சைவசமயம். இறைவன் என சிவனை போற்றி வணங்கியவர் காரைக்காலம் மையார். அவர் இறைவனை இயற்கை வடிவிலே கண்டவர். அக்காட்சியை எல்லோரும் என்றும் கண்டு மகிழப் பாடல்களிலே சொல்லோவியமாக வரைந்து வைத்தவர். தமது முன்னோர் வழிபாட்டு மரபைப் பேணி அதைப் பின்னோர் அறிய வைத்தவர்.

அவரை அடுத்துத் திலகவதியார் சைவசம யத்தை ஒரு சிறந்த வாழ்வியல் நடைமுறையாகப் பேண வழி காட்டினார். மனித வாழ்க்கையில் இடர்கள் வரும் போது அவற்றைக் களைய கோவில் வழிபாடே உறுதுணையாகும் என உணர்த்தியவர். துன்பத்தால் துவண்டு சைவவழிபாட்டைத் துறந்து பிற சமயங்களைத் தழுவுவோரை நெறிப்படுத்தியவர் திலகவதியார் எனில் மிகையாகாது. தனது தம்பி நாவுக்கரசனை அவ்வாறு மீட்டு வந்து மீண்டும் சைவ வாழ்வியலைத் தொடரச் செய்தவர். காரைக்காலம் மையார் பாடிய தேவாரப் பாடல் மரபை நாவுக்கரசரும் பாடித் தொண்டு செய்ய வைத்தவர்.

திலகவதியாருடையநெறிப்படுத்தலைச் சிறப்பாக மேற்கொண்டவர். ஈழத்துச் சைவ மரபிலே தோன்றிய செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி தமிழாசிரியராகப் பணி செய்யும் போது சமய நெறியைக் கற்பிப்பதோடு மட்டும் நின்றுவிடாது அதை வாழ்வியலோடு இணைக்க வேண்டி பணி செய்தவர். இல்லறம் துறந்து திருக்கோயில் பணியிலே முழுமையாக ஈடுபட்டவர். இலுப்பை மரங்களின் இடையே இருந்த துர்க்கையம்மனுக்கு பெருங்கோயில் கட்டி எல்லோரும் அவளை நேரில் வழிபட வகை செய்தவர்.

திருக்கோயில் பணியில் திளைத்திருப்பதே நிறைவான சைவ வாழ்வியலென்பதை எல்லோருக்கும் உணர்த்தியவர். துன்பத்தால் நலிந்து துணையின்றி அல்லற்பட்ட பெண்களுக்குத் தெல்லிப்பழை துர்க்காபுரம் ஆறுதல் தரும் வாழிடமாக அமையப் பெருமுயற்சி செய்தவர்.

திருக்கோயில் வழிபாட்டில் பெண்களின் பங்கைச் சிறப்பாகத் திட்டமிட்டுச் செயலாற்றியவர். திருக்கோயிலின் பணிகளுக்குப் பொறுப்பாகத் தலைமைத்துவத்தை ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் அவர் செய்தபணி சைவ சமய வரலாற்றில் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியாக துர்க்கா துரந்தரியாகப் பதிவு செய்ய வழி சமைத்தது. ஆணின்துறவு வாழ்க்கை தன்னல மானது.

ஆனால், பெண்ணின்துறவு அவள் எல்லோருக்கும் அன்னையாக, உற்ற துணையாக உடனிருக்க வல்லது என்பதை உலகம் அறிய வைத்தவர் சிவத்தமிழ்ச் செல்வி. ஈழத்தில் மட்டும் முடங்கியிருக்காமல் மலேசியா, இந்தியா, சிங்கப்பூர், பிரித்தானியா போன்ற பிற நாடுகளுக்கும் சென்று துர்க்கை அம்மன் திருக்கோயில்பணிகளுக்கான பொருட் கொடையைப் பெற்றவர்.

அவரது இனிய குரலால் ஆற்று ஒழுக்குப் போன்ற பேச்சால் எல்லோரையும் சைவ வழிபாட்டில் மனங் கொள்ளச் செய்தவர். ஈழத்துத் திருக்கோயில்களில் அவரோடு இணைந்துசமயச்சொற்பொழிவு ஆற்றும் வாய்ப்பு இற்றைக்கு 45 ஆண்டுகளுக்கு முன்னரேயே எனக்கு கிடைத்தது. அப்பணி இன்றுவரை தொடர வழி காட்டி நிற்கிறது.

அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் தொலைநோக்கான சமயப்பணிகளிலே இன்றியமையாதது பெண்களின் இல்லமாகும். காலத்தின் கோலத்தாலும் இயற்கையின் சீற்றத்தாலும் உறவுகளையும் பெற்றோரையும் பிரிந்த பெண்குழந்தைகள் வாழ்வுக்கு வழிகாட்டத் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை அமைத்துத் திறம்பட நடத்தினார். அவர் அக்குழந்தைகளின் அன்னையாக இருந்து வாழ்ந்த வாழ்வு மனித விழுமியப் பண்பாட்டின் ஓர் அடையாளமாக உள்ளது.

எதிர்காலத்திலும், தான் செய்த சைவப்பணி சிறப்பாகத் தொடர வேண்டும் என எண்ணிச் செயற்பட்டவர். இன்று துர்க்காபுரம் தருமபரிபாலன சபைத்தலைவராக இருந்து அறப்பணி செய்யும் ஆறு.திருமுருகனை உருவாக்கியவர் சிவத்தமிழ்ச் செல்வியே. 14 ஆண்டுகள் அவரிடம் சைவப் பணியாற்றும் பயிற்சியைப் பெற்ற ஆறு.திருமுருகன் அவர் வழிநின்று அரிய பணி செய்கிறார். எல்லா நாடுகளுக்கும் சிவத்தமிழ்ச் செல்வியைப் போல சென்று சமயப் சொற்பொழிவு செய்து அறப்பணிகளுக்கான பொருளீட்டி வருகிறார். அவர் இல்லறம் துறந்த நம்பியாக இருப்பதும் இதற்கு வாய்ப்பாக உள்ளது. சைவசமய வரலாற்றில் பெரிய புராணம் காரைக்காலம்மையாரையும் திலகவதியாரையும் பதிவு செய்து வைத்துள்ளது. எங்கள் அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் சைவவாழ்வியல் வரலாறு விரிவாகஎழுதப்பட்டுநூலாக வெளிவர வேண்டும்.

நாம் அவர் காலத்திலே அவரோடுவாழ்ந்துபெருமை பெற்றோம். எமது தலைமுறையினர் அவர் வரலாற்றைப்படித்துஅவரதுநீங்கா நினைவுகளோடு சைவ வாழ்வியல்வாழ வேண்டும். இது காலத்தின் குரலாகும்.

**முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்**

# கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பக் கல்லூரியின் 2018 ஆம் ஆண்டிற்கான ஆறு மாத குறுங்கால கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் பணிப்பாளர், தொழில் நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். விண்ணப்பங்களையும் மேலதிக விபரங்களையும் தொழில் நுட்பவியல் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம். (தொ.இல 0212212403)

குறுங்கால கற்கை நெறிகளாவன,

1.தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர் (Information Communication Technology) NVQ IV

2.கணனி வன் பொருளுக்கான கற்கை நெறி (Computer Hardware) NVQ IV

3.கணனி வலையமைப்புக்கான கற்கைநெறி (Computer Networking) NVQ IV

4.கணிய அளவை உதவியாளர் (Assistant Quantity Surveying) NVQ IV

5.மோட்டார்சைக்கிள் பழுது பார்த்தல் கற்கை நெறி (Motor Cycle & Scooter Repairing) NVQ III

6.வீட்டுப்பாவனை மின் உபகரணங்கள் திருத்துதல் (House Hold Electrical Equipment repairing) NVQ III என்பனவாகும். (இ)

# அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயத்தில்வெற்றிடமாகவுள்ள யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயத்தின் (வகை-II) அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கீழ் வரும் தகைமையுடைய அதிபர்கள் குறித்த பாடசாலைக்கான அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. இலங்கை அதிபர் சேவையில் தரம் 2,3 தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

2.இலங்கைஅதிபர்சேவையில் அதிபராக கடமையாற்றாதவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். (இவர்களுக்கு பிரிவு 4 பொருத்தமாகாது)

3.வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்.

4.விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல் வேண்டும்.

5.விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்றக் கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.

6.இலங்கை அதிபர் சேவை தரம் 2 ஐ சேர்ந்தவர்களது பொருத்தமான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத பட்சத்தில் மாத்திரம் தரம் 3 ஐச் சேர்ந்தவர்களது விண்ணபங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

7.விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 29.06.2018 ஆகும்.

8.விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்விற்கு தோற்றுதல் வேண்டும்.

9. விண்ணப்பப்படிவங்களை வலயக்கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும் என வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-7)

# நிர்வாகத்தில் ஒரு புதுப் பரிமாணம்...

**நீத்தார் நயப்புரை**



"செயற்கரிய செய்வர் பெரியர்" என்னும் கூற்றிற்கு அமைய கந்தையா கணேசு மறைந்து ஒரு மாத காலம், எனினும் பலராலும் இன்னமும் அதனை நம்ப முடியாது உள்ளது. மாவட்டத்தில் மிகச் சிறந்த நிர்வாக ஆளுமை, தூர நோக்குடன் மாவட்டத்தின் அபிவிருத்தி என்பதனை கடந்து இனத்தின் இருப்பையும் தமிழர்தம் தேவைகளையும் நன்குணர்ந்து சிறப்பான சேவையாற்றியமையில் என்றும் அனைவராலும் நினைவு கூரப்படும் பெருந்தகை.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் யாழ். மாவட்ட பொறுப்புகளை ஏற்றுக் கொண்டவர். அனர்த்தத்தின் பின்னர் மீள கட்டியெழுப்பும் பெரும் பொறுப்புடன் யுத்த அனர்த்தத்தினையும் அத்தாக்கத்தினையும் எதிர்கொண்டு மாவட்டத்தை வழிநடத்தியவர்.

இவரது காலத்தில் பல்வேறு சவால்கள் இருந்த போதிலும் அவற்றையெல்லாம் மிக இலகுவாகக் கையாண்டார். மக்களே அரச சேவையின் பிரதான இலக்கு என்னும் இலட்சியத்தை புரிந்து கொண்டவர். இன்று பல்வேறு மாவட்டங்களிலும் மாவட்ட பிரதேச மட்டங்களில் கடமையாற்றும் இளைய தலைமுறை உத்தியோகத்தர்களை வழிகாட்டி அவர்களின் அபிவிருத்தி மற்றும் மாவட்ட அபிவிருத்திகளை முன்னோக்கி நகர்த்திய செயற்பாடு இன்னும் நினைவுகூரப்படுகின்றது.

நேரம் தவறாத கடமையே கண்ணான இவரது செயற்பாடு தனது உடல் நிலைமையையும் கருத்தில் கொள்ளாது இரவு பகலாக மாவட்ட செயலகம் துடிப்புடன் கடமையாற்ற வழிவகுத்தது. ஊரடங்கு நேரத்திலும் அவசரத்தின் நிமித்தம் மக்கள் வருகை தந்த போதெல்லாம் முடியாது என்ற வார்த்தையை பயன்படுத்தாது பயணத்திற்கான அனுமதியையோ அல்லது பொருட்களுக்கான முன் அனுமதியையோ மற்றும் திணைக்களத் தேவைகள் என எல்லாவற்றையும் குறைந்த வளத்துடன் செயற்படுத்தினார்.

மாவட்ட நிர்வாக செயற்பாட்டில் இருந்து ஓய்வு பெற்றும் பல்வேறு நிர்வாகம் சார் விடயங்களிலும் ஆலோசனை வழங்கும் ஒரு நம்பகமான ஆலோசகராகவும் இளைய நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு கற்பிக்கும் ஆசானாகவும் வழிகாட்டியாகவும்செயற்பட்டார்.

பல்வேறு நிறுவனங்கள் இவருக்கு ஓய்வு நிலையில் பொறுப்புக்கள் வழங்கத் தயாராக இருந்த போதிலும் அவற்றைப் புறந்தள்ளி JICA நிறுவனத்திற்கு ஆலோசகராகச் செயற்பட்டுஅதன்மூலம்மாவட்டத்திற்கு மேலும் பல்வேறு உதவிகளை வழங்கினார். அன்னாரின் இழப்பு அவரது குடும்பத்திற்கும் மாவட்டத்திற்கும் ஒரு பேரிழப்பாகும்.

வாழ்வாங்கு வாழ்ந்த இப் பெருந்தகையின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன், அனைவரும் அவரது வழியில் நேர்மை, கடமை, அர்ப்பணிப்புடன் மக்கள் சேவை முன்னெடுப்பதே அவருக்கு ஆற்றும் அளப்பரிய கைங்கரியமாகும்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார் இறைவன் அடி சேராதார்-குறள்"

**இரா.சர்வானந்தா**

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய நிறுவுநர் தினமும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் ம.மகேந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜா, சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கணனித்துறை, பொறியியல் துறை, சிரேஷ்ட விரிவுரையாளர் ம.சியாமளன் யாழ். சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய ஓய்வுநிலை ஆசிரியர் ஜெகசோதி இராசரத்தினம், கௌரவ விருந்தினர்களாக பாடசாலை நலன் விரும்பி பே.திருவாதவூரர், ஓய்வு நிலை ஆசிரியர் சி.திசை வீரசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கைதடி நுணாவில் கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் தலைவராக சிவசுப்பிரமணியம் லோகதாஸ், செயலாளராக லோகேஸ்வரன் சிவகௌரி, பொருளாளராக திருநாவுக்கரசு மதி ஆகியோருடன் நிர்வாக சபை உறுப்பினர்கள் 5 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ)



வடக்கு மாகாண தனியார் போக்குவரத்துச் சேவைகளுக்கான நிரந்தர வழி அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு யாழ்.கிறீன் கிறாஸ் விடுதியில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண முதலமைச்சரும் போக்குவரத்து அமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் நிரந்தர வழி அனுமதிப் பத்திரங்களை வழங்கி வைத்தார். வடமாகாண போக்குவரத்து அதிகார சபையின் தலைவரும் முன்னாள் மன்னார் மாவட்ட அரச அதிபருமான நீக்கிலஸ் பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் போக்குவரத்து அதிகாரசபையின் உறுப்பினர்கள், போக்குவரத்துச் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் பேருந்து உரிமையாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:உ.சாளின்)

# அஞ்சல் உத்தியோகத்தர் சங்கத்தினரின் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்கிறது



(யாழ்ப்பாணம்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அஞ்சல் உத்தியோகத்தர் சங்கத்தின் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று 11 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து கடந்த 3 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி தொடக்கம் தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்தப் போராட்டம் தொடர்வதால் நாட்டில் உள்ள அஞ்சல்சேவைகள் அனைத்தும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன. இந்தப் போராட்டம் யாழ்ப்பாணத்திலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஐந்து வருடங்களாக நீடித்து வரும் அஞ்சல் சேவை தரம் 11 உத்தியோகத்தர்களின் நியமனங்களை உடனடியாக உறுதி செய்தல், அஞ்சல் சேவைப்பிரச்சினைகளுக்கான தீர்வாக உறுதி செய்த அமைச்சரவைப் பத்திரத்துக்குத் தாமதமின்றி ஒப்புதல் வழங்குதல் போன்ற பல கோரிக்கைகளை முன் வைத்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த தொழிற்சங்கம், குறித்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தி கோரிக்கைகளை வென்றெடுக்க சங்க உறுப்பினர்களை ஒன்றிணையுமாறும் கோரியுள்ளது. இதே வேளை ஒன்றிணைந்த தபால்தொழிற்சங்க கூட்டமைப்பும் பல முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 12 ஆம் திகதி முதல் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது.

அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர் சங்கம், இலங்கைத் தபால், தந்தி ஊழியர் சங்கம், தேசிய தபால் தொலைத்தொடர்பு ஊழியர் சங்கம், இலங்கைத் தபால் தந்தி ஊழியர் சங்கம், இலங்கை கனிஷ்ட தபால் தரம் பிரிக்கும் உத்தியோகத்தர் சங்கம், அகில இலங்கை உப தபால் அதிபர்கள் சங்கம் என்பன மேற்படி தொழிற்சங்க கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன. இவை அனைத்துமே போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. அஞ்சல் யாப்பு மறு சீரமைக்கப்படாமை, 6/2006 சுற்றறிக்கைகள் தொடர்பில் தீர்வு வழங்கப்படாமை, 2 வருடங்களாக நிகழும் அஞ்சல் சேவைப் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு வழங்கு,

5 வருடங்கள் கடந்த 2 ஆம் வகுப்பு நியமனங்களை உடனடியாக உறுதி செய்

கணனி தொழில்நுட்பக் கோளாறுகளைச் சீர்செய், ஜனவரி 10ஆம் திகதி வாக்குறுதியளித்த அமைச்சரவைப் பத்திரிகைக்கு அனுமதி வழங்கி தீர்வைப் பெற்றுக் கொடு, 2012 பொறுப்புப் பரீட்சையை (Charge Exam) நடைமுறைப்படுத்து, பொறுப்புக் கொடுப்பனவை ( Incharge Duty Allowance) உடனடியாக வழங்கு.

விரிவுரையாளர் சம்பளத்தை புதிய சம்பளத்துக்கு பெற்றுக் கொடு, பொறுப்புப் பரீட்சையில் சித்தியடைந்த 1ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கு எம்.என். (MN) 7 வேதன மட்டத்தைப் பெற்றுக் கொடு, வெற்றிடங்கள் நிரப்பப்படாமை போன்ற பிரச்சினைகள் தொடர்பில் கோரிக்கைகள் முன்வைத்தே தொடர் வேலை நிறுத்தப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-4)


## தவறிவிட்டது

கொக்குவிலைச் சேர்ந்த சூசை டேவிற் கிறிஸ்ரி சுரேஸ் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை(851592253V) சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்களுடன் கூடிய பேர்ஸ் யாழ்.நகரப் பகுதியில் தவறிவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் 077 945 0904 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (4526)


யாழ்.பல்கலை. ஊடகக் கற்கைகள் நடத்தும்

# ஒளிப்படக் கண்காட்சியும் விவரணப்படங்கள் திரையிடலும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் நடத்தும் 'இருளென்பது குறைந்த ஒளி' என்னும் கருப்பொருளிலான ஒளிப்படக்கண்காட்சியும், விவரணப்படங்கள் திரையிடலும் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ். பல்கலைக் கழகத்தில் இடம்பெறவுள்ளன.

ஊடகக் கற்கைகள் மாணவர்களது தேர்வுசெய்யப்பட்ட நூற்றுக்கும் அதிகமான ஒளிப்படங்கள் இந்தக் கண்காட்சியில் இடம்பெறவுள்ளன. இந்த ஒளிப்படங்கள் யாவும் இயற்கை ஒளியமைப்பைப் பயன்படுத்தியே பதிவுசெய்யப்பட்டவை என்பதுடன், மக்களின் பண்பாடு, பொருளியல், சமூக வாழ்க்கை, சுற்றுச்சூழல் என்பவை இவற்றின் வழி வெளிக் கொண்டுவரப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, கடந்த இரண்டு ஆண்டுகளாக ஊடகக் கற்கைகள் மாணவர்களால் உருவாக்கப்பட்ட விவரணப் படங்களும் இந்த நிகழ்வில் திரையிடப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தின் ஒரே யொரு நன்னீர்ஆறென அமைந்திருக்கும் வழுக்கையாறு, யாழ். சமூகத்தில் மூன்றாம் பாலினத்தவர்களின் சவால்களை அடையாளம் காட்டும் நாங்களும் இருக்கிறம், போரின் பாதிப்புக்களில் இருந்து மீண்டெழும் இரு கால் களும் இழந்த குடும்பஸ்தர் ஒருவரின் கதையைச் சொல்லும் முனை, மீள்குடியமர்வு கிராமம் ஒன்றை வியரிக்கும் ஏ-9, பார்த்தீனியம் என்கின்ற விஷச்செடியின் அபரிதமான பரவுகை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் களைச் செடி, கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தை எதிர்த்து கடற்றொழிலை மேற்கொள்ளும் மக்களும், கரையோரப் பகுதியில் வாழக்கூடிய மக்களும் இணைந்து முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தின் அடிப்படையில் உருவான கடலே எங்கள் மூச்சு, யாழ்ப்பாணத்திலுள்ள யாசகம் பெறுவோரை மையப்படுத்திய மாற்றத்தைத் தேடி, மக்களை மீளக் குடியேற்றம் செய்த தன் பின்னர் அவர்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான உதவிகள் சரிவரக் கிடைக்கப் பெறாமையால் சிரமப்படும்வயதான கணவன்மனைவியை மையப்படுத்திய ஏதிலி ஆகிய விபரணப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர். ஆர். விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக கலைப் பீடாதிபதி கலாநிதி. கே. சுதாகரும் கலந்துகொள்ளவுள்ளனர். இந்த நிகழ்வின் இன்னுமொரு அங்கமாக, மாலை 4 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் ஊடகக் கற்கைகள் மாணவர்களின் சஞ்சிகையான "கனலி"யும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## இராசி பலன்

**மீனம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், தொலை தூரத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, தாய்வழி உறவினர்களால் அனுகூலமுண்டு.

**மேடம்:** உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க நினைப்பீர்கள்.

**இடபம்:** நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி நகர்வீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், அலங்காரப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி, சந். புத |
| | இராசி பலன் கிரகநிலை | | சுக், ராகு |
| கேது, செவ் | சந்திராஷ்டமம் கேட்டை, மூலம் | | |
| சனி | | குரு | |

15.06.2018
ஆனி 01, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
துதியை முன்னிரவு 9.41 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 2.32 மணிவரை
சுபநேரம் 5.53-7.23 மணிவரை
இராகுகாலம் 10.23-11.53 மணிவரை
உலக காற்று தினம்,
ரம்ழான் பண்டிகை

வளவன்

**கடகம்:** நண்பர்கள் சந்திப்பால் சுபபிரயங்கள் ஏற்படலாம், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்:** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தொழில் விருத்தியுண்டு.

**சிம்மம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு:** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** சிந்தித்து செயற்பட்டு சிறப்புகளைக் காண வேண்டிய நாள், வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு, முயற்சிகள் தாமதமாகலாம்.

**துலாம்:** காரிய வெற்றிக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தித்திக்கும் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கன்னி:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புமுண்டு.

# பல்வேறு தேவைகளுடன் பூநகரியில் மீள்குடியேறியுள்ள மக்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு பல்வேறு தேவைப்பாடுகள் காணப்படுவதாக பிரதேச புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வைத் தொடர்ந்து பல்வேறு தேவைப்பாடுகள் காணப்படுகின்றன.

இதற்கமைவாக பூநகரிப் பிரதேசத்தில் மீள் குடியேறிய குடும்பங்களில் ஐயாயிரத்து 116 குடும்பங்களுக்கு நிரந்தரமான வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ள போதும், ஆயிரத்து 85 வரையான வீடுகளின் தேவைப்பாடுகள் காணப்படுகின்றன.

அதேவேளை யுத்தத்தினால் சேதமடைந்த 300 வரையான வீடுகள் புனரமைக்கப்பட்டபோதும், மேலும் 62 வீடுகளை புனரமைக்கவேண்டியுள்ளது.

அத்துடன், 215 வரையான மலசலகூடங்கள் அமைத்துக்கொடுக்கவேண்டியுள்ளதுடன், ஆயிரத்து 543 குடும்பங்களுக்கு வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்த வேண்டியிருப்பதாகவும் மேற்படி புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-315)

# 'பெண்களை சீரழிக்கும் நுண்கடன் நிறுவனங்களை இழுத்து மூடு'

## வவுனியாவில் கவனயீர்ப்பு





(பனிக்கன்குளம்)

நுண்நிதிக் கடன் செயற்பாட்டினால் அசௌகரியங்களை எதிர் நோக்கும் சமூகங்களை பாதுகாப்பது தொடர்பாக அரசுக்கும், இலங்கை மத்திய வங்கிக்கும் தொடர் அழுத்தம் கொடுக்கும் முகமாக வவுனியா மாவட்ட சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் பெண்கள் சுய உதவிக்குழுக்களின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று முற்பகல் 10 மணியளவில் கவனயீர்ப்பு போராட்டமொன்று இடம்பெற்றது.

கடனைக் கொடுத்து குடும்பத்தைக் குலைக்காதே. வட்டியால் மக்களின் வயிற்றில் அடிக்காதே, பெண்களை சீரழிக்கும் நுண்கடன் நிறுவனங்களை இழுத்து மூடு. கடனில் பெண்களை இலக்கு வைக்காதே, உமிரைக் குடிக்கும் வார்த்தைகளை உமிழாதே உமிழாதே, இழப்பதற்கு இனி எம்மிடம் உயிர் மட்டுமே உள்ளது, ஏழைகளின் உணர்வை புரிந்துகொள். வாழ்வதற்காய் கடன் பெற்றோம் வாழ்விழந்து நிற்கின்றோம், தற்கொலை அதிகரிப்பதற்கு கடனே நீயே காரணம், குடும்ப வன்முறைக்கும் கடன் நீயே காரணம், நுண் நிதி கடனே குடும்ப வன்முறைக்கு அத்திபாரம் இடாதே, கடனே இளம் சந்ததியை நரகத்தில் தள்ளாதே போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பழைய பேருந்து நிலையத்தில் ஆரம்பமாகிய போராட்டமானது பஜார் வீதி வழியாக நகர்ந்து ஹொரவப் பொத்தானை வீதியூடாக வவுனியா மாவட்ட செயலகத்தினை வந்தடைந்தது.

10 நிமிடங்கள் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர் கோரிக்கைகள் அடங்கிய வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்குரிய மகஜரை மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் பெற்றுக்கொண்டார்.(2-250)

# நுண்நிதிக்கடன் செயற்பாட்டிற்கெதிராக முல்லை.மாவட்ட செயலகத்தில் மகஜர் கையளிப்பு





(பனிக்கன்குளம்)

நுண்நிதிக்கடன் செயற்பாட்டினால் அசௌகரியங்களை எதிர்நோக்கும் சமூகங்களைப் பாதுகாக்கும் நோக்கில் கவனயீர்ப்புப் பேரணி ஒன்று நேற்று முற்பகல் 10.30 மணியளவில் முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் சுனாமி நினைவாலயம் முன்பாக ஆரம்பமாகி மாவட்ட செயலகம் வரை பேரணியாகச் சென்று மகஜர் கையளிக்கப்பட்டது.

இந்த நுண்கடன் செயற்பாட்டின் பொறிக்குள் சிக்கியிருக்கும் மக்களை உடனடியாக விடுவிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் அரசாங்கத்திற்கும் மத்திய வங்கிக்கும் தொடர் அழுத்தம் கொடுக்கும் முகமாக இந்தப் பேரணி முன்னெடுத்ததாக பேரணி ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

குறித்த பேரணியில் பல நூற்றுக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டு பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு பேரணியாக மாவட்ட செயலகம் வரை சென்று மகஜர் கையளித்ததோடு நிறைவடைந்தது. (2-281)

# நுண்நிதிக்கடன் நிறுவனங்களுக்கு எதிராக மன்னாரில் கவனயீர்ப்பு பேரணி





(மன்னார்)

வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் அதிகமான பெண்கள் வறுமையின் காரணமாக நுண் நிதி நிறுவனங்களிடம் பணங்களை கடனாகப் பெற்று வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்ற நிலையில் அதிகளவிலான பெண்கள் நுண் நிதிக்கடன் செயற்பாட்டினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அவ்வாறு பாதிக்கப்படும் மக்களையும் குறிப்பாக பெண்களை பாதுகாக்கவும் நுண்நிதிக் கடன் செயற்பாட்டின் பொறிக்குள் சிக்கியிருக்கும் மக்களை உடனடியாக விடுவிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் அரசாங்கத்திற்கும், இலங்கை மத்திய வங்கிக்கும் தொடர் அழுத்தம் கொடுக்கும் முகமாக மன்னாரில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கவனயீர்ப்புப் பேரணி இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் நல்லாட்சிக்கான பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டிலும் மன்னார் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஒருங்கிணைப்பில் மன்னார் தனியார் பேருந்து தரிப்பிடத்திற்கு முன்பாக பேரணி ஆரம்பமாகி மன்னார் மாவட்டச் செயலகத்தை சென்றடைந்தது.

குறித்த பேரணியில் பெண்கள் அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், பொது மக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் நுண்நிதிக் கடன் தொடர்பில் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கலந்து கொண்டிருந்தனர்.

கவனயீர்ப்புப் பேரணியின் முடிவில் அரசாங்கத்திற்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் தொடர் அழுத்தம் கொடுக்கும் வகையில் கோரிக்கை அடங்கிய மகஜர் மன்னார் மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)




### முல்லை.மாவட்ட செயலகம் முன்பாக

# தனியார் பேருந்து உரிமையாளர்கள் பேருந்துகளை நிறுத்தி பணிப்புறக்கணிப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக பல தடவைகள் வடமாகாண போக்குவரத்து அதிகார சபைக்கு தெரியப்படுத்தியும் எந்தவிதமான தீர்க்கமான முடிவுகளும் இல்லாத நிலையில் நேற்றைய தினம் பேருந்துகளுக்கான நிரந்தர வழி அனுமதிப் பத்திரங்கள் சில இடங்களில் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே எமது அடிப்படைப் பிரச்சினைக்கான தீர்வுகள் கிடைக்கும் வரைக்கும் நேற்றுத் தொடக்கம் முல்லை. மாவட்ட பேருந்துகள் பணியில் ஈடுபடாது பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளன. இந் நிலையில் முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் தமக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும் வடமாகாண சபையின் செயற்பாடுகளை கண்டித்தும் தமக்கு உரிய தீர்வு கோரியும் நேற்றையதினம் தமது சேவைகளை நிறுத்தி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். மாவட்ட செயலகம் முன்பாக தமது பேருந்துகளை கொண்டு வந்து நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (2-281)

# கார் - மோட்டார் சைக்கிள் விபத்து;ஒருவர் படுகாயம்



(கண்டாவளை)

கிளிநொச்சி ஏ-9 வீதியில் மஞ்சள் கோட்டுக் கடவையில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி ஏ-9 வீதியில் மஞ்சள் கோட்டுக் கடவைப் பகுதியில் கிளிநொச்சி நகரிலிருந்து கரடிப்போக்கு சந்தி நோக்கிப் பயணித்த கார் ஒன்றும் அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இவ் விபத்துத் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (2-315)

# நுண்நிதிக்கடனில் சிக்கியிருக்கும் மக்களை விடுவிக்கக்கோரி கிளிநொச்சியில் கவனயீர்ப்பு

## ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சியில் நுண்நிதிக்கடன் செயற்பாட்டினால் அசௌகரியங்களை எதிர்கொள்ளும் சமூகத்தையும் பெண்களையும் பாதுகாக்கும் வகையிலும் நுண்நிதிக் கடன் செயற்பாட்டின் பொறிக்குள் சிக்கியிருக்கும் மக்களை விடுவிக்கும் வகையில் அரசாங்கத்திற்கும் மத்திய வங்கிக்கும் அழுத்தங்களைக் கொடுக்கும் வகையில் கவனயீர்ப்புப் பேரணி ஒன்று கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட சிவில் சமூக அமைப்புக்கள் கிளிநொச்சி அரச மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் சம்மேளனம் ஆகியன ஏற்பாடு செய்த இப்பேரணி நேற்று முற்பகல் 10.00 மணியளவில் கிளிநொச்சி கரடிப்போக்குச்சந்தியில் இருந்து ஆரம்பமாகி மாவட்டச் செயலகம் வரை சென்றடைந்துள்ளது.

கடந்தாண்டுகளில் நுண்நிதிச் செயற்பாடுகள் மூலம் நன்மைகள் ஏற்பட்டிருந்தாலும் தற்போது இது ஒரு பாரிய சவாலாக மாறியிருக்கின்றதுடன், தற்கொலைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

அதாவது வடக்குமாகாணத்தில் இந்த நுண்நிதிக்கடன் செயற்பாடுகளினால் 59 இற்கும் மேற்பட்ட தற்கொலைகளும் கிழக்கு மாகாணத்தில் 20 வரையான தற்கொலைகளும் இடம்பெற்றிருக்கின்றன

கடன்பொறிக்குள் சிக்கித் தவிர்க்கும் எம்மவர்களுக்கு கடனைச் செலுத்துகின்ற காலத்தை இரண்டு வருடங்களிற்குப்பிற்போட்டு அதற்கான வட்டியையும் இரத்துச்செய்து மீளச்செலுத்தும் வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தல் அத்துடன் கடனை மீளச்செலுத்துவதற்கான சரியான வருமான மூலத்தை பெற்றுக்கொள்வதற்கான சரியான ஒரு வாழ்வாதார முயற்சிக்கான வசதியை ஏற்படுத்திக்கொடுத்தல்,

கடன்களை உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்த முடியாமல் வட்டிக்கு வட்டியையும் கொடுத்து எடுத்த கடன் தொகைக்கு மேலாக வட்டியைக் கட்டிக்கொண்டிருக்கும் மக்களின் கடன்களை இரத்துசெய்து இக்கடன் சுமையிலிருந்து விடுவித்தல்,

நுண்நிதிக்கடன் நிறுவனங்களின் அதிகூடிய வட்டி வீதத்தை குறைத்து பத்து வீதம் தொடக்கம் பதினைந்து வீதம் ஆண்டு வட்டிக்கு கடன்களை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரச வங்கிகள் ஊடாக குறைந்த வட்டிவீதத்திற்கு கடன்களை வழங்கும் திட்டங்களை போதியளவு மேற்கொள்வதற்கான நிதியை ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்வதன் மூலம் மக்கள் தனியார் நிதி நிறுவனங்களின் பிடியில் இருந்து விடுபட்டு குறைந்த வட்டி வீதத்தில் வங்கிகளில் கடன் பெறும் வசதிகளை ஏற்படுத்தவேண்டும்,

சமூக மட்டத்தில் இயங்கும் நுண்நிதி அமைப்புக்கள் ஊடாக நுண்நிதிச் செயற்பாடுகளுக்கு நிதியுதவி அளிப்பதன் மூலம் குறைந்த வட்டி வீதத்தில் கடன்களை பெறும் வசதியினை ஊக்கப்படுத்த வேணடும் உள்ளிட்ட ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து குறித்த பேரணி முன்னெடுக்கப்பட்டது. (2-315)

# மாணவர்கள், பெற்றோர்களுக்கு போதை தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு





(குருமன்காடு)

வவுனியா புளியங்குளம் இந்து கல்லூரி மாணவர்களுக்கும்மற்றும்பெற்றோர்களுக்கும் போதைத் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நேற்று முன்தினம் மலேசியா கேம்பிறிச் பல்கலைக்கழக பயிற்சி ஆசிரியரும் UNFPA யின் Youth 4 Youth இளைஞர் கழகத்தின் தலைவி நிலூஷா தலைமையில் நடைபெற்றது.

இவ் விழிப்புணர்வுக்கான கருத்தரங்கில் UNFPA யின் Youth 4 Youth வவுனியா மாவட்டத்தின் தலைவர் றெக்சன், தமிழ் தாய் இளைஞர் கழகத்தின் தலைவர் பிரதீபன், குருநாகல் பல்கலைக்கழக மாணவன் நிவோதன், புளியங்குளம் இந்து கல்லூரி ஆசிரியை தீபிகா, வவுனியா கல்வியற் கல்லூரி ஆசிரியர் சிவாஜினி, ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்

இந் நிகழ்வில் தமிழ் தாய் இளைஞர் கழகத்தால் மாணவர்களுக்கு அன்பளிப்பு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (2-250)

# தென்னங்காணியில் பிற பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு 50 பயனாளிகள் தெரிவு



(பனிக்கன்குளம்)

வவுனியா தென்னை பயிர்ச்செய்கை சபையினரால் வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட தென்னங்காணியில் பிற பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்கு பயனாளிகளுக்கு நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து காசோலைகள்வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இச்செயற்றிட்டத்தை ஊக்குவிப்தற்கு காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா, மன்னார் தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிராந்தியப்பணிப்பாளர் ரி.உதயச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் வடக்குமாகாண பிராந்திய முகாமையாளர் மகாலிங்கம், வவுனியா மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் க.தியாகலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு தெரிவு செய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கு மாட்டுக்கொட்டகை மானியம், நீர்ப்பான சத்திட்டமானியம், உரமா னியம், ஊடுபயிர்ச் செய்கை மானியம் ஆகியவற்றிற்கு காசோலைகளை வழங்கி வைத்தனர். (2-281)




# தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(குருமன்காடு)

வவுனியா மகாறம்பைக் குளம் பகுதியில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் தூக்கில் தொங்கிய நிலையில் நான்கு பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மகாறம்பைக்குளம் முதலாம் ஒழுங்கையில் வசித்து வரும் விஜிபாலன் (வயது-46) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இவரது குடும்பத்தினர் வீட்டிற்கு வெளியே சென்றசமயத்தில் குறித்த நபர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

உடனடியாக அயலவர்களின் உதவியுடன் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவஇடத்திற்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட குடும்பஸ்தர் இரு பெண் பிள்ளைகள் மற்றும் இரு ஆண் பிள்ளைகளின் தந்தையாவர். (2-250)

# இராணுவ வாகனம்-ஆட்டோ விபத்து

(பனிக்கன்குளம்)

வவுனியா மணிக்கூட்டு சந்திக்கு அருகே நேற்று முன்தினம் மதியம் 2.15 மணியளவில் ஆட்டோ மற்றும் படையினரின் வாகனம் மோதி விபத்துக்குள்ளானது.

வவுனியா நகரிலிருந்து பயணித்த ஆட்டோ மணிக்கூட்டு கோபுரம் ஊடாக குடியிருப்பு பூங்கா வீதிக்கு திரும்ப முற்பட்ட சமயத்தில் வவுனியா வைத்தியசாலை வீதியிலிருந்து வவுனியா நகர் நோக்கி பயணித்த படையினரின் வாகனம் நேருக்கு நேர் மோதியதில் ஆட்டோ விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் ஆட்டோ பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளைவவுனியாபோக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

# வடிகானில் வீசப்படும் கழிவுகளால் துர்நாற்றம்






(குருமன்காடு)

வவுனியா இலுப்பையடி பகுதியில் உள்ள வடிகான்களில் வீசப்பட்டு காணப்படும் கழிவுகளால் அப்பகுதியில் பயணிக்கும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா, இலுப்பையடி பகுதி சனநெரிசல் மிக்க பகுதியாகவும் அதிக வர்த்தக நிலையங்களைக் கொண்ட பகுதியாகவும் காணப்படுகின்றது. அப்பகுதியில் உள்ள வடிகானில் கழிவுகள் வீசப்பட்டுள்ளதுடன், அவை அகற்றப்படாது காணப்படுகின்றது. இதனால் அவ்வப்போது துர்நாற்றம் வீசுவதுடன் நுளம்பு பெருக்கமும் அதிகரித்துள்ளது.

இது தொடர்பில் வவுனியா நகரசபை கவனம் செலுத்தி அக்கழிவுகளை அகற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் வடிகானில் கழிவுகள் வீசாத வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் எனவும் மக்கள் கோரியுள்ளனர்.(2-250)

# தமிழீழ விடுதலை இயக்கத்தின் காரியாலயத்தில் இப்தார் நிகழ்வு



(பனிக்கன்குளம்)

வவுனியா வைரவர்புளியங்குளத்தில் உள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் காரியாலயத்தில்நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதி தலைவருமான செல்வம் அடைக்கலநாதனின் பணிப்பின் பேரில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கத்தின் தலைமையில் இப்தார் நிகழ்வு நடைபெற்றது.

வவுனியாவில் தமிழ், முஸ்லிம் ஆகிய இரு சமூகத்தினருக்குமிடையில் உணர்வுப்பூர்வமான ஒற்றுமையை நிலை நாட்டவும் சகோதரத்துவமாக இரண்டு சமூகத்தினரும் செயற்பட வேண்டும் என்ற நோக்குடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் மௌலவியின் ஆசீர்வாத உரையுடன் நோன்பு துறக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் இணைப்பாளர் ராஜன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் புருஸ், வவுனியா மாவட்ட துடுப்பாட்ட சம்மேளனத்தின் தலைவர் ரதீபன், வவுனியா இளைஞர் சம்மேளனத்தை சேர்ந்த அமுதராஜ் உட்பட இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த பிரபல வர்த்தகர்கள், பள்ளிவாசல் நிர்வாகத்தினர், தமிழீழ விடுதலை இயக்கத்தின் உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# ஆங்கிலேயர் ஆட்சியில் தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயமும் சட்டவாக்கச் சபைகளில் தமிழர்களின் பிரதிநிதித்துவமும்



கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு

### டொனமூர் அரசியலமைப்பின்படி முதலாவது இலங்கை அரச சபை தேர்தலும் தேர்தல் பகிஷ்கரிப்பும்

இவ் எல்லை நிர்ணயத்தின் அடிப்படையில் முதலாவது தேர்தல் ஜூன் 1931 இல் நடைபெற்றது. இத்தேர்தலில் வட மாகாணத்திற்கான 5 தொகுதிகளில் மன்னார்-முல்லைத்தீவு தவிர்ந்த மற்றைய 4 தொகுதிகளில் மக்களின் பகிஷ்கரிப்பால் தேர்தல் நடைபெறவில்லை. புது அரசியலமைப்பில் தமிழ் மக்களின் நலவுரிமைகளுக்கு ஏற்றமுறையில் பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லையென அவர்கள் அதிருப்தி கொண்டமையே இப் பகிஷ்கரிப்பிற்கு பிரதான காரணமாகும். இப் பகிஷ்கரிப்பு பின்னர் கைவிடப்பட்டு இதற்கான இடைத்தேர்தல்கள் 1934 ஆம் ஆண்டு நடைபெற்றது.

இவ்விரு தேர்தல்களிலும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட விதம் பின்வருமாறு காணப்பட்டது. தாழ்பிரதேசச் சிங்களவர்-28, கண்டிச் சிங்களவர்-10, இலங்கைத்தமிழர்கள்-7, இந்தியத் தமிழர்கள்-2, ஐரோப்பியர்-2, முஸ்லிம்-1.

ஆளுநர், 4- ஐரோப்பியர், 2- பறங்கியர், 1- இந்திய வர்த்தகர், 1- மலே இனத்தவர் என்ற ரீதியில் மற்றைய எட்டு இடங்களுக்கும் நியமனம் செய்தார்.

பின் வருவோர் இத் தேர்தல்களில் வெற்றி பெற்ற தமிழர்கள் ஆவர்.

**வட மாகாணம்**

• ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதி:- யாழ்.இந்துவின் அதிபராகவிருந்த நெவின்ஸ் செல்வதுரை.

• காங்கேசன்துறை தேர்தல்தொகுதி:- செனட்டர் சுப்பையா நடேசன்.

• யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதி:- சட்டத்தரணி அருணாசலம் மகாதேவா.

• பருத்தித்துறை தேர்தல் தொகுதி:- சட்டத்தரணி ஜி.ஜி.பொன்னம்பலம்.

• மன்னார்-முல்லைத்தீவு தேர்தல் தொகுதி- முதலியார் ஆனந்தம்சீமான் பிள்ளை. இவர் சட்டத்தரணி ஜி.ஜி.பொன்னம்பலத்தை தோற்கடித்து வெற்றி பெற்றார்.

**கிழக்கு மாகாணம்**

• திருகோணமலை-மட்டக்களப்பு தேர்தல் தொகுதி :- சட்டத்தரணி மயில்வாகனம் முதலியார் சுப்பிரமணியம். இவர் முதலாவது இலங்கை அரச சபையில் குழுவின் பிரதி தவிசாளராக இருந்தது குறிப்பிடத்தக்கது.

• மட்டக்களப்பு தெற்கு தேர்தல் தொகுதி :- முஸ்லிம் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார்.

**மத்திய மாகாணம்**

• ஹற்றன்தேர்தல்தொகுதி- சட்டத்தரணி பெரியண்ணன் சுந்தரம் (பெரி சுந்தரம்) போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டார். இவர் முதலாவது இலங்கை அரச சபையில் தொழில், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சராக இருந்தவர்.

• தலவாக்கலை தேர்தல் தொகுதி:- எஸ்.பி.வைத்திலிங்கம் (1931)



நெவின்ஸ் செல்வதுரை



பெரிய சுந்தரம்



ஜி.ஜி.பொன்னம்பலம்



சுப்பையா நடேசன்



நேசம் சரவணமுத்து



சேர் இரத்தினசோதி சரவணமுத்து

**மேல் மாகாணம்**

• கொழும்பு வடக்கு தேர்தல் தொகுதி:- வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சேர் இரத்தினசோதி சரவணமுத்து (1931) தெரிவுசெய்யப்பட்டார். இவர் கொழும்பு மாநகர சபையின் முதலாவது மேயராக இருந்தது குறிப்பிடத்தக்கது.

சேர் இரத்தினசோதி சரவணமுத்து தேர்தல் குளறுபடி வழக்கில் உறுப்பினர் பதவி இழக்க, அதே ஆண்டில் இவரின் இடத்துக்கு இவருடைய மனைவியான யாழ்ப்பாணத்தில் பிறந்த நேசம் சரவணமுத்து, டாக்டர் எச். எம். பீரிஸை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவர் சட்டமன்றத்திற்கு தெரிவான முதல் தமிழ்ப் பெண்மணியாவார். இவர் வெற்றிபெற ஆதரவாகச் செயற்பட்டவர்களில் எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்க முக்கியமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய தமிழ் வர்த்தகர் சார்பில் D.B.I. சேவியர் முதலாவது அரச சபைக்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். முதலாவது அரச சபை 1935ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி கலைக்கப்பட்டது.

### இரண்டாவது இலங்கை அரச சபை தேர்தல் -1936

இதே எல்லை நிர்ணயத்தின் படி இரண்டாவது இலங்கை அரச சபைத் தேர்தல் 1936ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்றது. இவ் அரச சபையின் காலம் 11 வருடம் 3 மாதமாகும். 5 வருட முடிவில் நடைபெற வேண்டிய மூன்றாவது தேர்தல், 1941 இல் 2ஆம் உலகப் போர்ச்சூழல் காரணமாக நடைபெறவில்லை.

இரண்டாவது இலங்கை அரச சபைத் தேர்தலில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட விதம் பின்வருமாறு காணப்பட்டது. தாழ்பிரதேசச் சிங்களவர்-31, கண்டிச் சிங்களவர்-8, இலங்கைத் தமிழர்கள்-8, இந்தியத் தமிழர்கள்-2, ஐரோப்பியர்-1.

ஆளுநர், 4- ஐரோப்பியர், 1- பறங்கியர்,1- இந்தியர்,1- மலே இனத்தவர்,1- முஸ்லிம் என்ற ரீதியில் மற்றைய எட்டு இடங்களுக்கும் நியமனம் செய்தார். தேர்தலில் எந்தவொரு முஸ்லிம் உறுப்பினரும் தெரிவு செய்யப்படாத காரணத்தால் இவ் அரச சபைக்கு முஸ்லிம் உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டார். ஆனால் 1942ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நடைபெற்ற மத்திய கொழும்பு தேர்தல் தொகுதிக்கான இடைத்தேர்தலில் முஸ்லிமொருவர் வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

இத் தேர்தல்களில் பின் வருவோர் வெற்றி பெற்ற தமிழர்கள் ஆவர்.

**வட மாகாணம்**

• ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதி:- சட்டத்தரணி வைத்திலிங்கம் துரைசுவாமி போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

• காங்கேசன்துறை தேர்தல் தொகுதி:- செனட்டர் சுப்பையா நடேசன் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்.

• யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதி:- சட்டத்தரணி சேர் அருணாசலம் மகாதேவா மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்.

• பருத்தித்துறை தேர்தல் தொகுதி:- சட்டத்தரணி ஜி.ஜி. பொன்னம்பலம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

• மன்னார்-முல்லைத் தீவு தேர்தல் தொகுதி- ஆர். சிறீ பத்மநாதன் (1936-1943). இவர் 1943இல் காலமானார். அதனையடுத்து சிறிது காலம் ஞானமுத்து ஐசாக் உறுப்பினரானார். 1944இல் நடைபெற்ற இடைத்தேர்தலில் ஜெகநாதன் தியாகராசா அடங்காத் தமிழன் சி. சுந்தரலிங்கத்தை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

**கிழக்கு மாகாணம்**

• திருகோணமலை-மட்டக்களப்பு தேர்தல் தொகுதி :- சட்டத்தரணி இம்மானுவேல் ராசநாயகம் தம்பிமுத்து தெரிவு செய்யப்பட்டார். இவர் 1943 ஆம் ஆண்டு ஜூனில் இலங்கை அரச சபையிலிருந்து வெளியேற்றப்பட 1943ஆம் ஆண்டு செப்டெம்பரில் நடந்த இடைத்தேர்தலில் ஆசிரியராகவிருந்த வல்லிபுரம் நல்லையா போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

• மட்டக்களப்பு தெற்கு தேர்தல் தொகுதி :- சின்னக் குட்டி உடையார் கனகரத்தினம் (1936-1938) தெரிவு செய்யப்பட்டார். இவர் 1938 இல் காலமானார். 1938இல் நடைபெற்ற இடைத்தேர்தலில் சபாபதிப்பிள்ளை தர்மரத்தினம் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

**மத்திய மாகாணம்**

• ஹற்றன் தேர்தல் தொகுதி:- ஊடகவியலாளர் கோதண்டராமன் நடேச ஐயர் தெரிவுசெய்யப்பட்டார்.

• தலவாக்கலை தேர்தல் தொகுதி:- சிதம்பரப்பிள்ளை வைத்திலிங்கம்.

**மேல் மாகாணம்**

• கொழும்பு வடக்கு தேர் தல் தொகுதி:- நேசம் சரவணமுத்து மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

**ஊவா மாகாணம்**

• 1943ஆம் ஆண்டு நடைபெற்ற பண்டாரவளைத் தேர்தல் தொகுதிக்கான இடைத் தேர்தலில் ஜே. ஜீ. இராச குலேந்திரம் தெரிவுசெய்யப் பட்டார்.

இந்திய தமிழ் வர்த்தகர் சார்பில் D.B.I. சேவியர் மீண்டும் அரச சபைக்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

1936ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் திகதி சட்டத்தரணி வைத்திலிங்கம் துரை சுவாமி அரச சபையின் சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டு 1947ஆம் ஆண்டு வரையும் அப் பதவியிலிருந்தார்.

### தொகுதி ஒதுக்கீடுகளும் தேர்தல் முடிவுகளும்

**சனத்தொகை (1921) விகிதாசாரத்தில் ஒதுக்கப்பட வேண்டிய ஆசனங்கள்**

| | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இலங்கை முஸ்லிம் + மலே | இந்தியத் தமிழர் | பறங்கியர் | ஆங்கிலேயர் + ஐரோப்பியர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1921ம் சனத்தொகை வீதம் | 67.05% | 11.50% | 6.63% | 13.40% | 0.65% | 0.77% | 100% |
| 58 ஆசனங்களில் ஒதுக்கப்படவேண்டியவை | 39 | 7 | 4 | 8 | 0 | 0 | 58 |

**முதலாவது அரசு சபையில் (1931-1935) இருந்த உறுப்பினர்கள்**

| | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இலங்கை முஸ்லிம் + மலே | இந்தியத் தமிழர் | பறங்கியர் | ஆங்கிலேயர் + ஐரோப்பியர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1931தேர்தல் முடிவு | 38 | 7 | 1 | 2 | 0 | 2 | 50 |
| ஆளுநர் நியமனம் | | | 1 | 1 | 2 | 4 | 8 |
| மொத்தம் | 38 | 7 | 2 | 3 | 2 | 6 | 58 |

**இரண்டாவது அரசு சபையில் (1936-1947) இருந்த உறுப்பினர்கள்**

| | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இலங்கை முஸ்லிம் + மலே | இந்தியத் தமிழர் | பறங்கியர் | ஆங்கிலேயர் + ஐரோப்பியர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1936 தேர்தல் முடிவு | 39 | 8 | 0 | 2 | 0 | 1 | 50 |
| ஆளுநர் நியமனம் | | | 2 | 1 | 1 | 4 | 8 |
| மொத்தம் | 39 | 8 | 2 | 3 | 1 | 5 | 58 |

### சோல்பரி அரசியல் அமைப்பு

இலங்கையரின் திருப்தியின்மையின்கீழ் செயற்பட்ட இரண்டாவதும் இறுதியுமான இலங்கை அரசு சபை 1947ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4ஆம் திகதி கலைக்கப்பட்டது. 1947 ஆம் ஆண்டில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆறாவது அரசியலமைப்பான சோல்பரி அரசியலமைப்பின் கீழ் மக்கள் பிரதிநிதிகள் சபைப் (பாராளுமன்றம்) பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 1947ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடைபெற்றது. இத் தேர்தலுக்கான தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயம் பற்றி இன்னொரு கட்டுரையில் பார்ப்போம்.

(முற்றும்)

# இந்து அமைச்சுக்கு முஸ்லிம் பிரதியமைச்சர்; மட்டக்களப்பிலும் மஸ்தானுக்கு கடும் எதிர்ப்பு!



(ஏறாவூர்)

இந்து விவகார பிரதி அமைச்சராக காதர் மஸ்தான் நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்து மக்களின் ஒற்றுமை அமைப்பினர் மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.

மட்டக்களப்பு மணிக்கூட்டுக் கோபுரம் காந்திப் பூங்கா முன்னால் நேற்றுமுன்தினம் மாலை 5.45 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்து விவகாரங்களுக்கு முஸ்லிம் ஒருவரை பிரதியமைச்சராக நியமித்தது இந்து மக்களை அவமானப்படுத்தும் செயலாகும், இதனால் இந்து முஸ்லிம் மதங்களுக்கிடையே முரண்பாடுகளை தோற்றுவிக்க வழிவகுக்கும்.எனவே இப் பிரதியமைச்சர் நியமனத்தை உடனடியாக இரத்துச் செய்து




பொருத்தமான ஒருவருக்கு வழங்கவும் என இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் கருத்துத் தெரிவித்தனர்.

அண்மையில் ஜனாதிபதியால் இந்து விவகார பிரதி அமைச்சராக காதர் மஸ்தான் நியமிக்கப்பட்டார். இந் நியமனம் தொடர்பில் நாடு பூராவுகமுள்ள இந்துக்கள் பல பகுதிகளிலும் எதிர்ப்பை தெரிவித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இந்து கலாசார பிரதி அமைச்சர் நியமனம் மிகத் தவறானது

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

பிறப்பால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சமயம் சார்ந்தவர்களாக உள்ளனர். அரசியலுக்கு அப்பால் அவர்களின் மொழியும், சமயமும் பிறப்பால் உரித்தானதாக அமைந்துவிடுகின்றது. இதனை எவராலும் மறுத்துரைக்க முடியாது.

இந்நிலையில் இந்து மதம் சாராத ஒருவரிடம் இந்து கலாசார பிரதி அமைச்சர் பதவியை வழங்குவது பொருத்தமில்லாத ஒன்று மட்டுமன்றி கண்டனத்திற்கும், விசனத்திற்கும் உரியது.

இரண்டு சமூகத்தினரையும் பகைமூட்டி வேடிக்கை பார்ப்பதற்கான செயற்பாடாகவே இதனை நாம் பார்க்கின்றோம். காதர்மஸ்தான் பிறப்பால் தமிழ்மொழி பேசுபவராக இருந்தாலும்சமயவிவகாரங்கள் என்னும் போது அவர் தனது சமய அனுஸ்டானங்களைப் பின்பற்றுபவராகவும் அதன் வழி நடப்பவராகவும் இருக்க வேண்டும் என்பது அவருடைய மார்க்கத்திற்கு உகந்தது.

ஆனால்காதர்மஸ்தானை இந்து சமய கலாசார விவகாரங்களுக்கான பிரதி அமைச்சராக நியமனம் செய்தமை, நியமனம் செய்தவர்களில் முதலாவது தவறு இருக்கின்றது. இரண்டாவது காதர்மஸ்தான் அத்தகைய அமைச்சுப் பொறுப்பினை ஏற்றிருப்பது மிகத் தவறானது.

ஆகையால்இதனை வன்மையாகக் கண்டிப்பதோடு, காதர் மஸ்தான் அவ்வமைச்சுப் பொறுப்பினை இந்து மதம் சார்ந்த இன்னொருவரிடம் ஒப்படைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் சமூக ஒற்றுமையைக் குலைக்கும் நோக்குடன் இதுபோன்ற நடவடிக்கைகளை அரசாங்கம்மேற்கொள்ளக்கூடாது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (இ-7)

# காதர் மஸ்தானின் நியமனம் நாசகார சதித் திட்டம்

## ஜனநாயக போராளிகள் கட்சி காட்டம்

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் நல்லெண்ண நோக்கத்தில் இந்து சமய பிரதி அமைச்சர் பதவியை மஸ்தானுக்கு வழங்கவே இல்லை என தெரிவித்த ஜனநாயகப் போராளிகள் கட்சித்தலைவர் வேந்தன், இந்து சமய விவகார பிரதி அமைச்சராக இஸ்லாமியரான காதர் ஏ. மஸ்தான் நியமிக்கப்பட்டு இருப்பது ஒட்டுமொத்த தமிழ் இந்துக்களின் இதயத்திலும் நல்லாட்சி குறித்த நம்பிக்கையை தகர்த்தெறிந்து விட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்து சமய விவகார பிரதி அமைச்சராக காதர் ஏ. மஸ்தான் நியமிக்கப்பட்டுள்ளார். இஸ்லாமியரான இவர் இந்து சமய விவகார பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டு இருப்பது இந்துக்களுக்கு எதிரான நாசகார வேலையாக தமிழ் மக்களாலும், நகைப்புக்கு இடமான செயலாக முஸ்லிம் மக்களாலும் பார்க்கப்படுகின்றது.

நல்லாட்சி அரசாங்கம் நல்லெண்ண நோக்கத்தில் இந்து சமய விவகார பிரதி அமைச்சராக காதர் மஸ்தானை நியமிக்கவில்லை என்றே நாம் கருதுகின்றோம். மாறாக தமிழர்களையும், முஸ்லிம்களையும் பிரித்தாளுவதற்கு சிங்கள பௌத்த பேரினவாதம் காலம் காலமாக மேற்கொண்டு வந்திருக்கின்ற நரி வேலைகளின் உச்ச பட்ச சதியாகவே இதை நாம் பார்க்கின்றோம்.

இஸ்லாமிய விவகார பிரதி அமைச்சராக ஒரு தமிழர் நியமிக்கப்பட்டு இருந்தால் இப்பொழுது நாடே பற்றி எரிந்து இருக்கும் என்பதையும் நல்லாட்சி அரசாங்கம் உள்ளபடி புரிந்து கொள்ள வேண்டும்.

போருக்கு பின்னரான அமைதியான சூழலில் வன்முறை அற்ற வாழ்க்கையை முன்னெடுத்து வருகின்ற தமிழ் மக்களை குறிப்பாக இளையோர்களை வன்முறையை நோக்கி மீண்டும் கொதித்தெழ வைக்கின்ற நாசகார சதித்திட்டமும் இதற்குள் அடங்க பெற்றிருக்க வேண்டும்.

இந்து சமய விவகார பிரதி அமைச்சர் பதவியை அங்கஜன் இராமநாதனுக்கு ஜனாதிபதி வழங்கி இருக்க முடியும். அல்லது இப்பதவியை வெற்றிடமாக வைத்திருக்க முடியும். இதே நேரத்தில் பிரதி சபாநாயகர் பதவி அங்கஜன் இராமநாதனுக்கு வழங்கப்படவே கூடாது என்று ஒரேயடியாக ஆட்சேபித்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தலைமை இந்து சமய விவகார பிரதி அமைச்சர் பதவி ஒரு இஸ்லாமியருக்கு வழங்கப்படாமல் தடுத்து நிறுத்தி இருக்க வேண்டும் என்கிற அங்கலாய்ப்பு தமிழ் மக்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கவே செய்கின்றது.

எது எப்படி இருந்தாலும் தமிழ் கட்சிகள் அனைத்தும் இவ்விடயத்தில் ஒருமித்து நின்று தமிழ் இந்துக்களுக்கான நீதியை உடனடியாக பெற்றெடுக்க பாரிய அழுத்தக் குழுவாக மாற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# தமிழ்-முஸ்லிம் மக்களை மோதவைக்க திட்டமிட்டு சதி

## கஜேந்திரகுமார் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்-முஸ்லிம் இனங்களுக்கிடையே வேறுபாடுகளை ஏற்படுத்தி இரு தரப்பையும் எதிரிகளாகச் சித்திரித்து மோத வைக்கின்ற நிலைமை திட்டமிட்டு ஏற்படுத்தப்படுகின்ற சூழ்நிலையில் எங்களுக்கிடையேயான பிரச்சினையை நாமே பேசித் தீர்த்து வைக்க வேண்டியதுடன் எமக்குள் எதிரிகளாகப் பார்க்கின்ற நிலைமைகள் ஏற்படக் கூடாது. இந்தவிடயத்தில் அனைத்து தமிழ் பேசும் மக்களும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமென்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்து சமய விவகாரங்களுக்கு இந்துமதம் சாராத ஒருவர் பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டிருப்பதை நிராகரிப்பதுடன் கண்டிப்பதாகவும் தெரிவித்த கஜேந்திரகுமார் அதற்காக முஸ்லிம் மக்களை எதிரிகளாகப் பார்க்கக்கூடாதென்றும் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன் தினம் மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்துசமய விவகார அமைச்சராக இந்துமதத்துடன் எந்தவித சம்பந்தமும் இல்லாத ஒருவரை நியமித்திருப்பது எங்களைப் பொறுத்தவரையில் ஏற்றுக்கொள்ள முடியாது. அத்தகைய செயற்பாட்டிற்கு வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆயினும் இந்த நியமனம் என்பது திட்டமிட்ட வகையில் தமிழ்-முஸ்லிம் உறவைப் பாதிக்கும் வகையிலே அரசினால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றதையும் சுட்டிக்காட்டுகின்றோம். குறிப்பாக கடந்த 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான நாட்களில் நடக்கின்ற ஒவ்வொரு விடயங்களையும் எடுத்துக் கொண்டால் அரசின் திட்டமிட்ட அனைத்துச் செயற்பாடுகளையும்சரியாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அவ்வாறு இலங்கைத் தீவில் நடைபெறுகின்ற ஒவ்வொரு விடயங்களைப் போன்றதாகவே மஸ்தானின் பிரதி அமைச்சர் நியமனமும் இருக்கின்றது.

இங்கு தமிழ் மக்கள் மீது வேறு கலாசாரங்களைத் திணித்து தமிழ்-முஸ்லிம் இனங்களுக்கிடையில் மத ரீதியிலான வேறுபாடுகளை ஏற்படுத்துகின்ற திட்டமிட்ட செயற்பாடுகளையே அரசாங்கம் ஏற்படுத்த முனைகின்றது. மேலும் தமிழ்-முஸ்லிம் மகள் ஒருவரையொருவர் எதிரிகளாகப் பார்த்து மோத வைக்கின்றதான நிலைமைகளே ஏற்படுத்தப்படுகின்றது. ஆனால் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையில் எதிரிகளாகப் பார்த்த நிலைமை கிடையாது. இருந்தும் அரசால் அத்தகைய செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டு வருவதன்



தொடர்ச்சியாகவே மஸ்தானின் அமைச்சர் நியமனத்தையும் பார்க்க வேண்டும். ஆகவே எங்களுக்கிடையே ஏற்படுகின்ற பிரச்சினைகளை நாங்களே பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் அனைத்து தமிழ் பேசும் மக்களும் மிகவும் அவதானமாகஇருக்கவேண்டும்

இலங்கைத் தீவில் தமிழின விரோதச் செயற்பாடுகளை கட்சி பேதமின்றி தெற்கிலிருக்கின்ற ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன. அதாவது தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையை வழங்க இக்கட்சிகள் தயாராக இல்லை. அவர்கள் தமிழர்களை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கான வேலைகளையே செய்து வருகின்றனர்.

ஆகவே தமிழ் பேசும் மக்களான நாங்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# காதர் மஸ்தான் நியமனத்திற்கு எதிராக வலி.தெற்கிலும் கண்டனத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

இந்து மக்களை கொச்சைப்படுத்தும் வகையில் இந்து சமய அலுவல்கள் பிரதி அமைச்சராக இஸ்லாமியரான காதர்மஸ்தான் நியமிக்கப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து வலி.தெற்கு பிரதேச சபையில் நேற்று முன்தினம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.தெற்கு பிரதேச சபையின் 4 ஆவது சபைக்கூட்டம் தவிசாளர் க.தர்ஷன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதன் போதே பொதுவான பிரேரணையாக குறித்த விடயம் எடுத்துக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் பிரதி அமைச்சராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டுள்ளார். இதில் இந்து சமய அலுவல்கள் பிரதி அமைச்சராக இஸ்லாம் மதத்தை சார்ந்த ஒருவர் நியமிக்கப்படுவது ஒட்டுமொத்த இந்துக்களையும் கொச்சைப்படுத்தும் விடயம் என இக்கூட்டத்தில் பொதுவான பிரேரணை முன்மொழியப்பட்டது. நல்லாட்சி அரசாங்கம் எனக் கூறிக்கொள்ளும் தற்போதைய அரசு தொடர்ச்சியாக தமிழ் மக்களின் பண்பாட்டை சிதைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதுடன் மத விவகாரங்களிலும் தற்போது தனது அடக்கு முறையை காண்பித்துள்ளது.

மதங்களைமதிப்பவர்களாக ஜனாதிபதியும் மேற்குறித்த அமைச்சரும் இருப்பார்களேயானால் இந்த பிரதி அமைச்சர் பதவி மீளப்பெறப்பட்டு தமிழர் ஒருவருக்கு கொடுக்கப்பட வேண்டும் என தெரிவித்து குறித்த பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. (இ-9)

## பாரதம்

# காற்றை மட்டுமே சுவாசித்து 70 ஆண்டுகளுக்கு மேல் வாழும் அதிசய மனிதர்



(அகமதாபாத்)

குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த சாமியார் 70 ஆண்டுகளுக்கு மேலாக உணவு, தண்ணீர் இல்லாமல் காற்றை மட்டும் சுவாசித்து உயிர் வாழும் சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

குஜராத் மாநிலம் மேக்சனா மாவட்டத்தில் உள்ள சரோட் கிராமத்தில் மாதாஜி என அனைவராலும் அழைக்கப்படுபவர் பிரக்லாத் ஜனி. 88 வயதான இவர் சர்வதேச அளவில் புகழ்பெற்றவர். விஞ்ஞானிகள் இவரை பிரீத்தெரியன் என அழைக்கின்றனர்.

ஜனி வித்தியாசமான சக்திகளை கொண்டவர். இவர் 70 ஆண்டுகளுக்கு மேலாக உணவும் மற்றும் நீர் இல்லாமல் உயிர் வாழ்ந்து வருகிறார். காற்றை மட்டும் சுவாசித்து அனைவரையும் ஆச்சரியப்படுத்தி வருகிறார். அவரிடம் பல விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்தனர். பல சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் அவர் எவ்வாறு உயிர் வாழ்கிறார் என்பது குறித்து யாராலும் கண்டறிய முடியவில்லை. அவரின் உடல் பாகங்களின் செயற்பாடுகள் சரியாக உள்ளன. அவர் சிறுநீரகம் கூட கழிக் காமல் உயிர் வாழ்கிறார். கடவுளின் அருளால் உணவு இல்லாமல் உயிர்வாழ்வதாக அவர் கூறினார்.

அதிசயயோகியான இவரை சந்திக்க பல தலைவர்கள் வந்து செல்கின்றனர். இவர் பக்தர்களிடம் காணிக்கை ஏதும் வாங்காமல் இலவசமாக தரிசனம் அளிக்கிறார். உணவு இல்லாமல் 70 ஆண்டுகளுக்கு மேலாக உயிர்வாழும் இவர் இன்னும் அறிவியலுக்கு எட்டாத தூரத்தில் உள்ளார். (7)

## கடவுளின் உருவத்தை வரைந்த ஆய்வாளர்கள்

(நியூயோர்க்)

கடவுளின் உருவம் குறித்து நடத்தப்பட்ட ஆய்வின் முடிவில் ஆராய்ச்சியாளர்கள் கடவுளின் முகத்தை வரைந்துள்ளனர்.

கடவுள் எப்படி இருப்பார்? கடவுள் எங்கோ வானில் ஒளிந்து கொண்டிருக்கவில்லை. கடவுள் நீக்கமற நிறைந்தவர். அவர் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார். ஆனால் எப்படி இருப்பார். கடவுள் உருவம் என்பது அவரவர் எண்ணங்களுக்கு ஏற்ப என ஆய்வு கூறுகிறது.

'கடவுள் எப்படி இருப்பார்?, கடவுளின் குணம் எப்படிப்பட்டது? கடவுள் எந்த வண்ணம் கொண்டவர்?' உலகில் நெருப்பில் இருந்து அனைத்திலும் கடவுள் இருப்பதாக ஆதிகாலம் தொட்டு மனிதன் வணங்கி வந்து இருக்கிறான். அதில் உருவம் இல்லாமலும் கடவுளை



வணங்குகிறோம்.

புதிய ஆய்வு ஒன்றில் கடவுள் பெண்ணின் அம்சங் களைக் கொண்ட ஒரு இளமையான முகத்துடன் இருப்பார் என கூறப்படுகிறது.

வட கரோலினாவைச் சேர்ந்த விஞ்ஞானிகளின் விநோதமான ஆய்வு ஒன்றை நடத்தினர். ஆய்வு முடிவு சுவாரஸ்யமாக, வேதாகம பதிவுகளிலிருந்து ஒரு பழைய மனிதராக இருந்தது. அவர்கள் இளம் வயதினரைப் போல் கடவுளைப் புரிந்து கொள்வார்கள்.

சேப்பல் ஹில்லில் உள்ள வட கரோலினா பல்கலைக் கழகத்தில் உளவியலாளர்கள் குழு 511 அமெரிக்க கிறிஸ்தவர்களின் உதவியுடன் இந்த ஓவியத்தை உருவாக்கியது.

இந்த ஆய்வில் பங்கேற்றவர்கள் நூற்றுக்கணக்கான தோற்றமளிக்கும் முகம்-ஜோடியைப் பார்த்து, ஒவ்வொரு ஜோடியிலிருந்தும் முகத்தைத் தேர்வு செய்தனர்.

தேர்ந்தெடுத்த முகங்களை இணைப்பதன் மூலம், ஆராய்ச்சியாளர்கள் ஒவ்வொருவரும் கடவுளை எவ்வாறு தோற்றமளிக்க நினைத்தார்கள் என்பதைப் பிரதிபலிக்கும் ஒரு கலப்பு "கடவுளின் முகத்தை" கொண்டு வந்தார்கள்.

அவர்களின் முடிவு ஆச்சரியம் வெளிப்படுத்தும் விதமாக இருந்தது. ஆய்வின் முழுமையான முடிவுகள் PLOS பத்திரிகையில் வெளியாகி உள்ளது. (7)

## புயிகோ எரிமலை வெடிப்பு

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 50 பேரை இழந்த பெண்



(கவுதமாலா சிட்டி)

கவுதமாலாவில் உள்ள புயிகோ எரிமலை கடந்த வாரம் வெடித்துச் சிதறியதில் பெண் ஒருவரின் குடும்பத்தைச் சேர்ந்த 50 பேர் காணாமல் போயிருக்கிறார்கள்.

கவுதமாலாவில் உள்ள புயிகோ எரிமலை கடந்த வாரம் வெடித்துச் சிதறியது. இதில் 110 பேர் உயிரிழந்தனர். 200க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர்.

இந்நிலையில் எரி மலை சாம்பலில் சிக்கி யூஃபிமியா கார்சியா என்பவரின் உறவினர்கள் 50 பேர் காணாமல் போயுள்ளதாக தெரிய வந்துள்ளது.

50 வயதான கார்சியாவுடன் 9 பேர் பிறந்துள்ளனர். மூன்று தலைமுறை கண்ட கார்சியாவின் 75 வயது தாயும் இந்த எரிமலை வெடிப்பில் காணாமல் போயிருக்கிறார்.

பல நாட்களாகியும் என் பிள்ளைகள் மற்றும் பேரப் பிள்ளைகள் என 50 பேரை காணவில்லை என கார்சியா கவலையுடன் கூறுகிறார். (7)


## மக்கள் ஆதரவு

# மரண தண்டனையிலிருந்து தப்பிய ஐரோப்பிய கன்றுத்தாச்சிப்பசு

(பெல்கிரேட்)

பல்கேரியாவை சேர்ந்த பென்கா என்ற கர்ப்பிணி பசுவுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை இரத்து செய்யப் பட்டுள்ள சம்பவம் மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளில் ஒன்று பல்கேரியா. பல்கேரிய எல்லைப் பகுதியில் அமைந்துள்ள கொபிலோவ்ட்சி கிராமத்தைச் சேர்ந்தவர் இவான் ஹரலம்பியேவ். இவர் ஏராளமான மாடுகளை வளர்த்து வருகிறார். அவரது மந்தையில் இருந்த பென்கா என்ற கன்றுத்தாச்சி இன்னும் சில நாட்களில்



பிரசவிக்க உள்ளது.

இதனிடையே மேய்ச்சலுக்கு சென்ற பென்கா, பல்கேரிய எல்லைத் தாண்டி, செர்பியாவிற்குள் நுழைந்தது.

அது ஐரோப்பிய ஒன்றியத்தில் இல்லாத நாடு. ஐரோப்பிய ஆணைய வழிகாட்டுதலின் படி, உரிய ஆவணம் இல்லாமல் எல்லை தாண்டினால் மரண தண்டனை விதிக்கப்படும்.

இதனால் ஐரோப்பிய அதிகாரிகள் கன்றுத்தாச்சி பசுவான பென்காவிற்கு, மரண தண்டனை விதித்தனர். அந்த பசு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. எல்லை தாண்டிய பசுவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்நிலையில் பென்காவிற்கு மரண தண்டனையில் இருந்து விலக்கு அளிக்கக்கோரி, சமூக வலைத்தளங்களில் ஆதரவு திரட்டப்பட்டது.

பசு கர்ப்பமாக இருப்பதால் அதனை கொல்வதற்கு பல்கேரியாவில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. மேலும் பசுவை காப்பாற்றக் கோரி ஐரோப்பிய யூனியன் நாடுகளில் பிரபலங்களும், விலங்கின ஆர்வலர்களும் சமூக வலைத்தளங்கள் மூலம் பிரசாரம் செய்தனர். #SAVE PENKA என்ற ஹேஸ் டேக்கில், உலகளவில் சமூக வலைத்தளங்களில் மக்கள் தங்கள் ஆதரவை தெரிவித்தனர்.

இந்த நிலையில் மக்களின் கோரிக்கையை ஏற்ற பல்கேரிய அரசு, பென்காவிற்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ரத்து செய்தது. இதனிடையே பசுவுக்கு மரண தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட சம்பவம் மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (7)

# வடகொரியாவின்
# இனி இருக்காது நி
# நாடு திரும்பி



(வோஷிங்டன்)

வடகொரியாவிடம் இருந்து அமெரிக்காவுக்கு வந்த ஏவுகணை மிரட்டல்கள் இனி இருக்காது. நிம்மதியாக தூங்குங்கள் என கிம் ஜாங் உன் உடனான சந்திப்புக்கு பின்னர் நாடு திரும்பியதும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் டுவிட்டில் பதிவேற்றியுள்ளார்.

எலியும் பூனையுமாக கடந்த பல ஆண்டுகளாக இருந்த அமெரிக்கா - வடகொரியா கடந்த 12 ஆம் திகதி சிங்கப்பூர் சந்திப்புக்கு பின்னர் நண்பர்களாக மாறியுள்ளது. ஏவுகணை மனிதர் என ட்ரம்ப் ஆல் விமர்சிக்கப்பட்ட வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், கடந்த 12 ஆம் திகதி ட்ரம்பை சந்தித்து பேசினார்.

இரு தலைவர்கள் சந்திப்புக்கு பின்னர் சில ஒப்பந்தங்கள் இரு தரப்புக்கும் இடையே கையெழுத்தானது. அதில், வடகொரியா அணு ஆயுதங்களை முழுமையாக அழிப்பது, வடகொரியா மீதான பொருளாதார தடையை அமெரிக்கா நீக்குவது உள்ளிட்ட அம்சங்கள் அடங்கும். வரலாற்றில் எழுதக்கூடிய இந்த சந்திப்புக்கு உலக நாடுகள் அனைத்தும் வரவேற்பை தெரிவித்தன. ஈரான்

# அமெரிக்காவும் வடகொரிய
# இந்தியா - பாகிஸ்தான் சமாதா
# பாக்.முன்னாள் பிரதமரின் தம்

(இஸ்லாமாபாத்)

வடகொரியாவும் அமெரிக்காவும் சிங்கப்பூரில் சமாதானம் செய்துகொண்டது போல் இந்தியாவும் பாகிஸ்தானும் சமாதானமாக போக வேண்டும் என பாகிஸ்தான் முன்னாள் பிரதமரின் தம்பி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் ஊழல் வழக்கில் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அந்நாட்டின் ஆளும்கட்சியான பாகிஸ்தான் முஸ்லிம் லீக்(நவாஸ்) தலைவர் பதவியில் இருந்தும் அவர் நீக்கப்பட்டுள்ளதால் அவரது தம்பி ஷாபாஸ்



ஷெரிப் கட்சி தலைவர் பதவியை ஏற்றுள்ளதுடன் வரும் ஜூலை மாதம் 25ஆம் திகதி நடைபெறும் பாராளுமன்ற தேர்தலில் பிரதமர் பதவிக்கான வேட்பாளராகவும் முன்னிறுத்தப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சிங்கப்பூரில் கடந்த 12ஆம் திகதி நடைபெற்ற பேச்சுவார்த்தையில் பரம எதிரிகளாக இருந்து


# வெளிநாடு



## ...வின் ஏவுகணை மிரட்டல்கள் ...து நிம்மதியாகத் தூங்குங்கள்

## ...நம்பிய ட்ரம்ப் டுவிட்




Donald J. Trump @realDonaldTrump · 1h
Before taking office people were assuming that we were going to War with North Korea. President Obama said that North Korea was our biggest and most dangerous problem. No longer - sleep well tonight!
4.3K 5.5K 21K

Donald J. Trump @realDonaldTrump · 1h
Just landed - a long trip, but everybody can now feel much safer than the day I took office. There is no longer a Nuclear Threat from North Korea. Meeting with Kim Jong Un was an interesting and very positive experience. North Korea has great potential for the future!
3.3K 4.5K 18K

உள்ளிட்ட அமெரிக்க எதிர்ப்பு நாடுகள் மட்டும் வடகொரியா இனி எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என விமர்சித்தன. சந்திப்பு முடிந்ததும் ட்ரம்ப் அமெரிக்காவுக்கு திரும்பினார்.

நேற்று முன்தினம் மாலை வோஷிங்டனில் தரையிறங்கிய ட்ரம்ப், தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது.


ஒரு நீண்ட பயணத்திற்கு பின்னர் தரையிறங்கினேன். ஆனால், நான் பதவியேற்ற நாளை விட தற்போது அனைவரும் பாதுகாப்பை உணர்வார்கள். இனி வடகொரியாவிடம் இருந்து எந்த அணு ஆயுத அச்சுறுத்தலும் இருக்காது. கிம் ஜாங் உன் உடனான சந்திப்பு சிறந்த அனுபவமாக இருந்தது. வடகொரியாவுக்கு சிறந்த எதிர்காலம் உள்ளது.

நான் ஜனாதிபதியாக பதவியேற்பதற்கு முன் வடகொரியா உடன் அமெரிக்கா போர் புரியும் என மக்கள் நினைத்தனர். வடகொரியா நமது மிகப்பெரிய அச்சுறுத்தல் என ஒபாமா கூறியிருந்தார்.

இனி எதுவும் இல்லை. இன்று நன்றாக தூங்குங்கள். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (7)

# அணு ஆயுதங்களை முற்றாக அழித்தால் வடகொரியா மீதான தடையை நீக்குவோம்

## அமெ.வெளியுறவுத்துறை அமைச்சர் அறிவிப்பு



(வோஷிங்டன்)

அணு ஆயுதங்கள் அழிக்கப்பட்டு விட்டதை உறுதி செய்த பின்னர் தான் வடகொரியா மீதான பொருளாதார தடையை நீக்குவது குறித்து முடிவு செய்ய முடியும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவும், தென்கொரியாவும் பரம்பரை எதிரி நாடுகளாக இருந்து வந்தன. தென்கொரியாவுக்கு அமெரிக்கா ஆதரவாக இருந்தது.

இதனால் அமெரிக்காவையும் வடகொரியா பகை நாடாக கருதியது. அணு ஆயுதங்கள் உள்ளிட்ட நவீன ஆயுதங்களை உருவாக்கிய வடகொரியா அமெரிக்கா மீது அணுகுண்டு தாக்குதல் நடத்தப்போவதாக மிரட்டியது.

வடகொரியா மிரட்டலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும் கடும் எச்சரிக்கை விடுத்தார். இந்த நிலையில் இரு நாடுகளுக்கும் மத்தியில் சமரசம் ஏற்படுத்த சீனா முயற்சித்தது. தென்கொரியாவும் இறங்கி வந்து அமைதி நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இதற்கு வடகொரிய ஜனாதிபதி கிம்ஜாங் உன் சம்மதம் தெரிவித்தார். இதையடுத்து அமெரிக்கா-வடகொரியா ஜனாதிபதிகள் இடையே பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

அதன்படி கடந்த 12ஆம் திகதி சிங்கப்பூரில் இரு நாட்டு ஜனாதிபதிகளும் சந்தித்து பேசினார்கள். அப்போது ட்ரம்ப்-கிம்ஜாங்உன் இடையே சமரச ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

அதில், வடகொரியாவில் உள்ள அணுஆயுதங்கள் அனைத்தையும் அழித்து விடுவதாக கிம்ஜாங்உன் ஒப்புதல் தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே வடகொரியாவுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் பல்வேறு பொருளாதார தடைகளை அமெரிக்கா விதித்து இருந்தது.

இருநாடுகளுக்கும்இடையே சமரச ஒப்பந்தம் இப்போது ஏற்படுத்தப்பட்டு இருப்பதால் இந்த பொருளாதார தடைகள் உடனடியாக நீக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் வடகொரியா அணு ஆயுதங்களை முற்றிலும் ஒழிக்கும் வரை பொருளாதார தடை நீடிக்கும் என்று அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சா மைக் பாம்பியோ தெரிவித்துள்ளார்.

தென்கொரியா தலைநகரம் சியோலில் அவர் தென்கொரிய வெளியுறவு அமைச்சர், ஜப்பான்வெளியுறவுஅமைச்சர் ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார்.

அந்த ஆலோசனை முடிவுக்கு பிறகு நிருபர்களிடம் கூறிய மைக்பாம்பியோ இந்த கருத்தை தெரிவித்தார்.

ஒப்பந்தத்தின்படி அணு ஆயுதங்களை முற்றிலும் வடகொரியா அழிக்க வேண்டும். அவை அழிக்கப்பட்டு விட்டதை உறுதி செய்த பின்னர் தான் நாங்கள்எங்களது பொருளாதார தடையை நீக்குவது





குறித்து முடிவு செய்ய முடியும் என்று அவர் கூறினார்.

சமரசம் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட நிலையில் அமெரிக்கா திடீரென இப்படி கூறியிருப்பது சமரச உடன்பாட்டிற்கு சிக்கலை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. (7)

# ட்ரம்ப் கார் முன்பு செல்பி எடுத்த இந்திய வம்சாவளி வாலிபர்



(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் ட்ரம்பை சந்திக்க சென்று 38 ஆயிரம் ரூபாய் செலவழித்து அவரது கார் அருகே நின்று செல்பி எடுத்த திருப்தியில் மலேசியாவை சேர்ந்த இந்திய வம்சாவளி வாலிபர் மகிழ்ச்சி அடைந்துள்ளார்.

மலேசியாவை சேர்ந்த இந்திய வம்சாவளி வாலிபர் மகாராஜ் மோகன் (25). அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தீவிர அனுதாபி யான இவர், கிம் ஜாங் மற்றும் ட்ரம்ப் இடையே நடைபெற்ற வரலாற்று முக்கியத்து வம் வாய்ந்த சந்திப்பின் போது எப்படியாவது ட்ரம்புடன் செல்பி எடுத்துவிட வேண்டும் என்ற ஆவலில் சிங்கப்பூரில் உள்ள செண்ட் டோசா தீவின் ஷாங்ரி-லா ஹோட்டலில் ஒருநாள் இரவு தங்குவதற்கு ரூ.38 ஆயிரம் செலவழித்துள்ளார்.

கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பிற்கு ட்ரம்ப் செல்லும் போது, அவருடன் செல்பி எடுக்க ஹோட்டல் வரவேற்பு அறையில் 5 மணி நேரமாக அவர் சுற்றி திரிந்துள்ளார். ஆனால், ட்ரம்ப் பயன்படுத்தும் பீஸ்ட் என்ற கார் அருகே மட்டுமே நின்று அவரால் செல்பி எடுக்க முடிந்துள்ளது.

இது குறித்து பேசிய மகாராஜ் மோகன், அனைவரும் ட்ரம்ப் உடன் செல்பி எடுப்பது சாத்தியம் இல்லாத காரியம் என்று என்னிடம் கூறினர்.

ஆனால், சில நேரம் எதிர்பாராதவைகளும் நடக்கும் என்ற எண்ணத்தில் நான் இந்த முயற்சியில் இறங்கினேன் என அவர் தெரிவித்தார். (7)

# ...ரியாவும் போன்று ...தானமாக வேண்டும்

## ...தம்பி வேண்டுகோள்

வந்த வடகொரியாவும் அமெரிக்காவும் சமாதானம் செய்துகொண்டது போல் இந்தியாவும் பாகிஸ்தானும் சமாதானமாக போக வேண்டும் என ஷாபாஸ் ஷெரிப் குறிப்பிட்டுள்ளார்.

'கொரிய போரின் ஆரம்பகட்டத்தில் இருந்தே அமெரிக்காவும் வடகொரியாவும் பரம எதிரிகளாக இருந்து வந்துள்ளன. அணு ஆயுத வலிமையை காட்டி ஒருநாட்டை மற்றொரு நாடு அச்சுறுத்தி வந்தன.

அணு ஆயுதம் என்ற கொள்கையை கைவிட்டு வடகொரியாவும் அமெரிக்காவும் அமர்ந்துப் பேசி சமாதானம் செய்து கொள்ள முடியுமானால், காஷ்மீர் விவகாரத்தை மையமாக வைத்து முதலில் பேச்சுவார்த்தையை தொடங்கி, அதேபாதையை இந்தியாவும் பாகிஸ்தானும் ஏன் கையாள கூடாது? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நமது பிராந்தியத்தில் இருதரப்பு அமைதி பேச்சுவார்த்தைக்கான நேரம் கனிந்துள்ளது.

ஆப்கானிஸ்தானில்அமைதி நிலவுவதை சர்வதேச சமுதாயம் உறுதிப்படுத்த வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை தீர்மானத்துக்கு உடன்பட்டு நீண்டகாலமாக நிலுவையில் உள்ள காஷ்மீர் விவகாரத்துக்கு தீர்வு காணப்பட வேண்டும் எனவும் ஷாபாஸ் ஷெரிப் வலியுறுத்தியுள்ளார். (7)

# வடகொரியாவின் அணுவாயுத ஒழிப்பை உறுதி செய்ய அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் நாடுகள் இணைவு

(சியோல்)

வடகொரியாவின் அணு ஆயுத ஒழிப்பினை உறுதிப்படுத்துவதற்காக அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஜப்பான் நாடுகள் இணைந்து செயற்பட உள்ளன.

அணு ஆயுத சோதனைகள் மற்றும் ஏவுகணை சோதனைகளால் கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றத்தை அதிகரித்து வந்த வடகொரியா, தற்போது சமாதானத்தையும் அமைதியையும் விரும்புகிறது. முதற்கட்டமாக அணு ஆயுத சோதனை மையத்தை அழித்தது. அத்துடன் அணு ஆயுத திட்டங்களையும் கைவிட தயாராக உள்ளது. இதற்காக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் இருவரும் சிங்கப்பூர் சந்திப்பின் போது ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

அப்போது தங்களிடம் உள்ள அணு ஆயுதங்களை முழுவதும் ஒழிக்கப்படும் என வட கொரிய ஜனாதிபதி அறிவித்தார்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க சந்திப்பைத் தொடர்ந்து வட கொரியாவிடம் உள்ள அணு ஆயுதங்களை ஒழிப்பதை உறுதிப்படுத்துவதற்காக அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் நாடுகள் இணைந்து செயற்பட உள்ளன.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மைக் பாம்பியோ, தென்கொரிய வெளியுறவுத் துறை அமைச்சர காங் கியுங்-வா மற்றும் ஜப்பான் வெளியுறவு அமைச்சர் டாரோ கோனோ ஆகியோர் சியோலில் நேற்று சந்தித்து பேசினர்.

அப்போது வடகொரியா கூறியபடி அந்த நாட்டில் இருக்கும் அணு ஆயுதங்களை ஒழிக்கும் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

இந்த சந்திப்புக்குப் பிறகு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் பாம்பியோ கூறுகையில், 'வடகொரியா தன்னிடம் உள்ள அணு ஆயுதங்களை ஒழிப்பதற்கு முன்வந்துள்ளது. ஆனால் அவற்றை முற்றாக அழிப்பது பெரிய செயல் முறை, எளிதான காரியமல்ல' என்றார். (7)

# கோத்தா விவகாரம்- மழுப்பலாக பதிலளித்த அமெரிக்க தூதரகம்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போது. கோத்தபாய ராஜபக்ஷ தொடர்பாகவோ, ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகவோ கலந்துரையாடப்பட்டதா? என்பது பற்றிய கேள்விகளுக்கு அமெரிக்கா பதிலளிக்க மறுத்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஷாப் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்புக்களை அமெரிக்க துணைத் தூதுவர் ரொபேர்ட் ஹில்டனும் மகிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட செயலர் உதித் லொக்கு பண்டாரவும் கலந்து கொண்டனர்.

இதன்போது, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிடுவதை அமெரிக்கா விரும்பவில்லை என்றும் அவர் போட்டியிடுவதை அமெரிக்கா தடுக்கும் என்றும் மகிந்த ராஜபக்ஷவிடம் அமெரிக்கத் தூதுவர் கூறியதாகச் செய்திகள் வெளியாகின.

இது தொடர்பாக, அமெரிக்கத் தூதரகத்தின் பொது சனத் தொடர்பு திணைக்களத்துக்கு ஊடகங்கள், மின்னஞ்சல் மூலம் கேள்விகளை அனுப்பியிருந்தன.

இந்தக் கேள்விகளுக்கு அமெரிக்கத் தூதரகத்தினால் அனுப்பப்பட்டுள்ள பதிலில், கோத்தபாய தொடர்பாக அமெரிக்கத் தூதுவர் கூறியதாக வெளியான தகவல்களை உறுதிப்படுத்தவோ மறுக்கவோ இல்லை.


“அரசியல் தலைவர்கள் சிவில் சமூகம் மற்றும் சமூகத் தலைவர்களைத் தூதுவர் தொடர்ச்சியாகச் சந்தித்து வருகிறார்.

தனிப்பட்ட சந்திப்புக்களின் மீதான நம்பிக்கையை அவர் மதிக்கிறார். அத்தகைய தனிப்பட்ட சந்திப்புகளின் உள்ளடக்கம் தொடர்பாக பகிரங்கமாக கலந்துரையாட முடியாது” என்று மாத்திரம் பதில் அனுப்பப்பட்டுள்ளது. (இ-7)

# கேர்ணல் ரத்னப்பிரிய பந்துவை விஸ்வமடுவுக்கே நியமியுங்கள்

## ஜனாதிபதியிடம் விமல் கோரிக்கை





(கொழும்பு)

விஸ்வமடு பாதுகாப்பு முகாம் பொறுப்பதிகாரியாக விருந்த கேர்ணல் ரத்னப்பிரிய பந்துவை மீண்டும் அதே பிரதேசத்துக்கு நியமிக்குமாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி. ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் எழுத்து மூலம் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கேர்ணல் ரத்னப்பிரிய பந்துவின் முன்மாதிரி சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். இந்த முன்மாதிரியைத் தொடர அவருக்கு அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

விஸ்வமடு மக்களின் கோரிக்கைப்படி மாற்றத்தை இரத்து செய்து அப்பகுதிக்கே தொடர்ந்தும் அவரை நியமிக்குமாறு நியமிக்குமாறும் விமல் வீரவங்க அக்கடிதத்தில் கோரியுள்ளார். (இ-7)

# கோத்தபாயவின் குடியுரிமை இரத்து ஆவணத்தை வெளியிடுமாறு கம்மன்பிலவிடம் நவீன் கோரிக்கை

(கொழும்பு)


முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தனது அமெரிக்க பிரஜாவுரிமையை இரத்துச் செய்தமை குறித்து நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

2020 இல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக கோத்தபாய ராஜபக்ஷ தனது அமெரிக்க பிரஜாவுரிமையை இரத்து செய்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே நவீன் திஸாநாயக்க இவ்வாறு கோரியுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ அவ்வாறு வெளிநாட்டுக் குடியுரிமையை இரத்து செய்திருந்தால் அதற்காக வழங்கப்படும் ஆவணங்களை மக்களுக்கு வெளியிட வேண்டும். அமெரிக்கக் குடியுரிமையை இரத்துச் செய்து வழங்கப்படும் சான்றிதழை உச்ச நீதிமன்றத்துக்கு தெரிவித்து, நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# ரவிராஜ் கொலை;மேன்முறையீட்டு மனு ஒகஸ்ட் 2 ஆம் திகதி விசாரணைக்கு



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை வழக்கின் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள, மேன்முறையீட்டு மனு ஒகஸ்ட் மாதம் 2ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

2006 நவம்பர் 10 ஆம் திகதி நடந்த இந்தப் படுகொலை தொடர்பாக இலங்கை கடற்படையினர் 5 பேருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

எனினும், கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் அமைக்கப்பட்ட ஜூரிகள் சபை , குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரையும் நிரபராதிகள் என்று தீர்ப்பளித்து விடுதலை செய்தது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக ரவிராஜ் குடும்பத்தினரால் செய்யப்பட்ட மேன்முறையீடு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே வழக்கு விசாரணை ஒகஸ்ட் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று மேன் முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது. (இ-7)

# சமுர்த்தி நிவாரணம்-புதிய பயனாளிகளை தெரிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

சமுர்த்தி நிவாரணத் திட்டத்தின் கீழ் புதிய பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களையும் மேன் முறையீடுகளையும் ஏற்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 31 ஆம் திகதிக்குள் தகைமையுள்ள குடும்பங்கள் தெரிவு செய்யப் படவுள்ளதாக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

சமகாலத்தில் சமுர்த்தி அனுகூலங்களைப் பெறாத குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்களைப் பிரதேச செயலாளர் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும். இந்த விண்ணப்பத்தில் குடும்பத் தலைவரின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், வயது, குடும்ப உறுப்பினர்களின் பெயர், சமகால வருமான விபரங்கள் முதலான விடயங்கள் உள்ளடங்கியிருப்பது அவசியமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

# பின்வாங்கத் தயக்கமா?

முன்வைத்த காலைப் பின் வைக்கக் கூடாது என்று யாரோ சொல்லிவிட்டு நிம்மதியாகப் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். இதை விடாப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டு சிலபேர் படாதபாடு படுகிறாங்கள். ஒரு சம்பவம் சொல்கிறேன்.

நானும் எங்கள் குடும்ப நண்பர் எல்லப்பனும் என் இளைய மகனுமாகத் தாம்பரத்திற்குப் பக்கத்தில் உள்ள படப்பைக்கு ஒரு வாசகியின் திருமண வரவேற்பிற்குப் போனோம்.

மழை என்றால் அப்படி ஒரு மழை! எல்லப்பன் ரொம்பவும் தைரியமானவர். அவர் அசரவில்லை. ஒரு கட்டத்தில் புகைபோக்கிக்குள் தண்ணீர் புகுந்து கொண்டது. வண்டி திணறியது.

ஓர் ஏரியில் இருந்து இன்னோர் ஏரிக்குத் தண்ணீர் மாற நாங்கள் நடுவில் மாட்டிக் கொண்டோம்.

ஒரே இருட்டு, விசாரிக்கக்கூட ஆள் இல்லை. நிறுத்தி ஒதுங்க இடமில்லை. வண்டியைத் திருப்பலாம் என்றால் எது கிணறு, எது பாதை, எது பள்ளம் என்று தெரியவில்லை. தண்ணீரில் பாம்புகளின் பயணம் வேறு. தட்டுத் தடுமாறி முன்னேறியபோது காருக்குள் தண்ணீர் புகுந்துவிட்டது. இனிச் சமாளிக்கவே முடியாது என்கிற நிலைமையில் ஒரு வழியாகச் சமாளித்துத் திரும்பி விட்டோம்.

மழை, வெயில், குளிர் ஆகிய இயற்கையின் எதிர்ப்புகளுக்கெல்லாம் அஞ்சாதவன் நான். அன்று மட்டும் நான் துணிந்திருந்தால் எங்களைப் பற்றிப் பேப்பர்களில் செய்தி வந்திருக்கும். என் வாழ்க்கைப் பாதைக்கும் இது நல்ல பாடம் என்றுபட்டது.

ஒரு செயலில் இறங்கிவிட்ட பிறகு முடிந்தவரை எடுத்த முடிவிலிருந்து பின்வாங்காமல் இருப்பது, முடிந்தவரை சமாளிப்பது, இனித் தாக்குப் பிடிக்கவே முடியாது என்கிற நிலைமை வந்தால் பின்வாங்கி விடுவது. இந்த முடிவு தோல்வியாகாது. மாறாக புத்திசாலித்தனமே.


சிலர் இதைக் கௌரவத்தோடு சம்பந்தப்படுத்திக் கொண்டு ரொம்பவும் தடுமாறுவார்கள். தேவையில்லை.


நம் முயற்சிகள் எல்லாம் வென்று விடுவதில்லை. இவற்றில் பாதியோ முக்கால் வாசியோ சென்று திரும்பினால் அதைப்பற்றி நெருங்கிய வட்டாரத்திற்கு மட்டுமே தெரியவரும். இதனால் நம் கௌரவம் பாதிக்கப்படாது.

ஆனால் முடிவுகள் எதிராக அமைந்தாலோ அனைவருக்கும் அது தெரிந்து போய்விடும். தவிர்க்க முடியாத பட்சத்தில் பின்வாங்குவது என்பது தோல்வியாகாது. இது தோல்வியைத் தவிர்க்கும் ஒருவகை உத்தியே!

**லேனா தமிழ்வாணன்**

# புனித நோன்பு பெருநாளைக் கொண்டாடுவோம்



இஸ்லாம் ஒரு வாழ்க்கை முறையாகும். அந்த வாழ்க்கை முறைக்கான பயிற்சியை நோன்பு வழங்கியது. நோன்பின் தத்துவங்களில் இதுவும் ஒன்று. சரியான முறையில் நோன்பு நோற்றதன் மூலமாக இனிய குணம், கற்புடைமை, பொறுமை, நேர்மை, நன்னடத்தை, சகிப்புத் தன்மை, உளத்தூய்மை, வீரம், ஏழைகளின் துயரை உணரும் தன்மை, உதவும் மனப்பான்மை, மனித நேயம் என்பன போன்ற பல்வேறு நற்பண்புகளை ஒருவர் அடைந்து கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது.

நடைமுறை உலகில் சூரிய ஆண்டை பின்பற்றுவது போல நாம் சமய விடயங்களில் சந்திர ஆண்டையே பின்பற்றுகிறோம். எனவே பிறை பார்த்து நோன்பு நோற்று பிறை பார்த்து நோன்பை நிறைவு செய்வோம்.

இறை அருளையும்பாவ விமோசனத்தையும் அடைய தூண்டிக் கொண்டிருந்த ரம்ழான் எனும் விஷேட மகத்துவமான மாதத்தை வழியனுப்பி வைத்து கவலையில் இருக்கும் இறை விசுவாசிகளுக்கு ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் இறைவன் வழங்கிய மாண்பு மிக்க தினமே புனித நோன்புப் பெருநாள் தினமாகும்.

புனித ரமழான் பூராவும் பகல் முழுவதும் நோன்பு நோற்று, இரவெல்லாம் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு வந்த நாம் ஷவ்வால் மாத தலைப்பிறை தென்பட்டவுடன் ஈதுல் பித்ர் எனும் ஈகைத் திருநாளை குதூகலமாக கொண்டாடுகிறோம்

ஈதுல் பித்ர் பெருநாளில் அதிகமானளவு நன்மைகளை செய்ய நாம் முன்வர வேண்டும். நாம் மட்டும் பெருநாளைக் கொண்டாட அயல் வீட்டார் பெருநாளைக் கொண்டாட வசதியற்றவனாக இருப்பாயானால் நாம் கொண்டாடும் பெருநாளில் என்ன தாற்பரியம் உண்டு என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

நோன்புப் பெருநாளுக்கு ஒவ்வொரு முஸ்லிமும் தயாராகும் போது பித்ரா (தர்மம்) கொடுப்பதைக் கொண்டே தயாராக வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நோன்புப் பெருநாள் தர்மம் நோன்பின் போது ஏற்பட்ட தவறுகளுக்குப் பரிகாரமாகவும் ஏழை, எளியவர்கள் பெருநாள் தினத்தில் பசி, பட்டினியோடு இருக்கக்கூடாது என்ற நோக்கங்களின் அடிப்படையிலும் கடமையாக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டில் உணவாக உட்கொள்ளும் தானியம் அரிசியாகும் எனவே அரிசியை ஸகாத்துல் பித்ராவாக கொடுக்கலாம். உலமாக்களின் ஆலோசனையின் பிரகாரம் 2கிலோ 400 கிராம் (கிட்டத்தட்ட 2 ½ கிலோ) அரிசியை ஸகாத்துல் பித்ராவாக கொடுக்க வேண்டும். ஸகாத்துல் பித்ர் கொடுக்கும் ஒருவர் தனக்காகவும் மனைவிக்காகவும் பிள்ளைகளுக்காகவும் தனது பொறுப்பில்தந்தை, தாய் இருந்தால் அவர்களுக்காகவும் சுயதொழில் வாய்ப்பை இழந்த தன் பராமரிப்பின் கீழ் உள்ளவர்களுக்காவும் ஸகாத்துல் பித்ர் ரமழான் மாத ஆரம்பத்திலிருந்து பெருநாள் தினம் வரைக்கும் கொடுக்கலாம். ஆனால், பெருநாள் தினத்தில் பெருநாள் தொழுகைக்கு செல்வதற்கு முன்னால் நிறைவேற்றுவது முக்கியமானது.

பெருநாள் தினத்தில் நாங்கள் எல்லோரும் அதிகாலையில் குளித்து, புத்தாடைகள் அணிந்து, நறுமணம் பூசி, அறுசுவை உணவுகளை உண்டு மகிழ்கின்றோம் அல்லவா? இதேபோன்று அன்றைய தினத்தில் நாம் பின்பற்றி நடக்க வேண்டிய நபி வழியில் வந்த செயற்பாடுகளும் உண்டு. ஒரு ஊரில்அல்லது மஹல்லாவில்வாழும் முஸ்லிம்கள் தனித்தனியாக அல்லது குழுக்களாக பிரியாமல் சகலரும் ஒன்று சேர்ந்து ஒரு திறந்த வெளியில் அல்லது மைதானத்தில் இது முடியாத போது ஒரு பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையை நடத்த வேண்டும்.

பெருநாள் தினங்களில் உறவினர்கள், நண்பர்கள், மார்க்க ஊழியர்கள் அனைவரையும் கண்டு பேசி உபசரித்து, வாழ்த்துக் கூறி தங்களிடையே பற்றையும் பாசத்தையும் அன்பையும் ஆதரவையும் மென்மேலும் அதிகரித்துக் கொள்வதும் சிறந்த செயலாகும்.

இலங்கையில் சிறுபான்மையாகவாழும் முஸ்லிம்களாகிய நாம், எமது பெருநாளின் சிறப்புக்களை மாற்றும்மத இனங்களுடன் பகிர்ந்து கொள்வதில் எந்தத் தவறுமில்லை. அவ்வாறு நாம் முன்மாதிரியாக நடந்து கொள்ளும் போதுதான் இந்தநாட்டில் இன நல்லுறவைக் கட்டியெழுப்ப முடியும். பெருநாள் காலங்களில் கட்டியெழுப்பும் முன்மாதிரியான நிகழ்ச்சிகளை அந்தந்த ஊர்களின் கழகங்கள், ஸ்தாபனங்கள் அமைப்புக்கள் ஏற்பாடுசெய்வது வரவேற்கத்தக்க விடயமாக அமையும் என்பது சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாகும். இவ் எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்யும் பெருநாளாக அமைய அல்லாஹ்வை வேண்டுகிறோம்.

**அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (ஜே.பி)**
**யாழ்ப்பாணம்**

---

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றை உருவாக்கக்கோரும்

# இன அழிப்பு தீர்மானத்திற்கு இப்படியொரு நிலை! கட்சித் தலைமைகளுக்காக காத்திருக்கும் உறுப்பினர்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில்இடம்பெற்ற இன அழிப்பு தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றை உருவாக்கும் தீர்மானத்தை ஐ.நா பாதுகாப்பு சபை நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை பிரதேச சபையில் தீர்மானமாக நிறைவேற்றுவதற்கு கட்சித் தலைமைகளிடம் பேசி முடிவெடுத்த பின்னரே குறித்த தீரமானத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக வலி. தெற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

இலங்கைத்தீவில் இடம்பெற்ற இன அழிப்பு, சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமை சட்டமீறல்கள் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கத்தை அளிக்கும் தீர்மானத்தை அல்லது விசேட சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தை உருவாக்கும் தீர்மானத்தை ஐ.நா பாதுகாப்புச்சபை நிறைவேற்ற வேண்டும் என்ற தீர்மானம் வலி.தெற்கு பிரதேச சபையிலே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் சிவரூபன் லகீந்தனால் நேற்று முன்தினம் சபை அமர்வில் பிரேரணையாக முன்வைக்கப்பட்டது. அதனை முன்னணி உறுப்பினர் கஜேந்திராஜா வழி மொழிந்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த பிரேரணையை நிறைவேற்றுவதற்கு ஏனைய உறுப்பினர்களிடம் கருத்துக் கேட்ட போது, ஏனைய கட்சிகளான தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஈ.பி.டி.பி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியினை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் தமது கட்சித் தலைமையுடன் கலந்தாலோசித்த பின்னரே ஆதரிக்க முடியும் என தெரிவித்து, அடுத்த அமர்வு வரை கால அவகாசத்தினை கேட்டதனைத் தொடர்ந்து, குறித்த பிரேரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ-9)



அண்மையில் மறைந்த வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் அமரர் இராசா குமாரசுவாமிக்கு சபையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. வலி.தெற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் தவிசாளர் க.தர்ஷன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது சபை நடவடிக்கைகள் ஆரம்பமாவதற்கு முதல் உறுப்பினரின் உருவப்படத்திற்கு சுடர் ஏற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் என அனைவரும் அஞ்சலி செலுத்தினர். இதன்போது வலி.தெற்கு பிரதேச சபையின் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தது. (படங்கள்:-கிஷோர்)

---

## ஒருங்கிணைப்புக்கூட்டம் பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

கடந்த 04.06.2018 ஆம் திகதி யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கமைய எதிர்வரும் 18.06.2018 ஆம் திகதி நடைபெறவிருந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமானது தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்றைய தினம் நடைபெறமாட்டாது என்பதுடன், கூட்டம் நடைபெறவுள்ள திகதி பின்னர் அறியத்தரப்படும் என அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ)

---

## வருடாந்த ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய வருடாந்த ஒன்றுகூடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் கணபதிப்பிள்ளை தவகீஸ்வரன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் பத்மநாதன் சசிக்குமார், கௌரவ விருந்தினராக கனகரட்ணம் சுகாஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# ஆனந்தசங்கரிக்கு இன்று அகவை -85

கிளிநொச்சித் தொகுதியை தனிமாவட்டமாக்கிமிளிரச் செய்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீரசிங்கம் ஆனந்தசங்கிக்கு இன்று (15.06.2018) அகவை எண்பத்தைந்து (85). இன்றுள்ளது போல சாதாரணமாக அவரது அரசியல் வாழ்க்கை ஆரம்பிக்கவில்லை. அன்றுமிகப் பெரியசவால்களுக்கு மத்தியிலேயேஅவர் வெற்றி பெற வேண்டியிருந்தது. கிளிநொச்சித் தொகுதியிலேயேமிகவும் பின் தங்கிய பகுதியாக இருந்த பூநகரிப் பிரதேசத்திலேயே அவர் ஆசிரியராக கடமையாற்றினார். அங்குள்ள மாணவர்கள் கல்வி கற்பதில் இருந்த இன்னல்களையும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் உள்ள சிரமங்களையும் நன்கு உணர்ந்திருந்தார். மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் வசதி வாய்ப்புகள் உள்ள மிகப் பிரபல்யம் பெற்ற பாடசாலைகளோடு போட்டிபோட்டுத் தான் புள்ளிகளைப் பெற வேண்டும் என்ற நிலையும் இருந்துவந்தது. இதனை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் அவர் கிளிநொச்சித் தொகுதியை தனி மாவட்டமாக மாற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்.

அன்று உழைக்கும் வர்க்கத்தின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகபோராடிவந்த சமசமாஜக் கட்சியின் இடதுசாரிக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட அவரால், கிளிநொச்சித் தொகுதியில் ஏழை விவசாயிகள் படும் துன்பதுயரங்களை பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அந்தக்காலத்தில் கிளிநொச்சியில் அநேகமான காணிகள் பெரும் கமக்காரர்கள் மற்றும் நிலச்சுவாந்தர்களின் கைகளிலேயே இருந்தன. சிறு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே இருந்தனர். இரணைமடுக்குளத்து நீர் பெரும் கமக்காரர்களுக்கு மட்டுமே பகிர்ந்தளிக்கப்பட்டது. இதனால் ஏழை விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதனை உணர்ந்த ஆனந்தசங்கரி ஏழை விவசாயிகளின் துயர் துடைக்க, அவர்களை இணைத்துக் கொண்டு களத்தில் இறங்கி போராட்டங்களை நடத்தினார். அதன் விளைவாக இரணைமடு குளத்து நீர் ஏழைவிவசாயிகளின் காணிகளுக்கும் குடியேற்றத்திட்ட மேட்டுக்காணிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

ஏழைமக்களின் பங்காளனாக அவர் திகழ்ந்தார். அதன் விளைவாக கிளிநொச்சித் தொகுதி மக்கள் அவரை கிராம சபைத்தலைவராக, பட்டின சபைத்தலைவராக, பாராளுமன்ற உறுப்பினராக ஏற்றுக் கொண்டார்கள். தனியாளாக கிளிநொச்சித் தொகுதிக்கு வந்த ஆனந்தசங்கரியை கிளிநொச்சித் தொகுதி மக்கள் படிப்படியாக தங்களின் தலைவனாக ஏற்றுக் கொண்டார்கள். தன் மீது மக்கள் வைத்த நம்பிக்கைக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற அவரின் எண்ணத்தில் உருவானது தான் கிளிநொச்சி தனிமாவட்ட கோரிக்கையாகும். இந்த கோரிக்கை எழுப்பப்பட்டவுடன் பலர் எள்ளிநகையாடினார்கள். "கேட்டது தனி நாடு இப்போது கேட்பது தனி மாவட்டமா?"



என்று கேள்வி எழுப்பினார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் எதிர்ப்பைக் காட்டினார்கள். கட்சிக்குள்ளும் எதிர்ப்பு, பிரதேசவாதம் என பலர் எரிந்து விழுந்தார்கள். ஆனால் சரியான புள்ளிவிபரங்களுடன் ஆதாரங்களை முன்வைத்து பாராளுமன்றத்தில் எடுத்துரைத்து எல்லோரினதும் வாய்களையும் அடைத்து, கிளிநொச்சியை தனி மாவட்டமாக பின் தங்கிய மாவட்டமான கிளிநொச்சியில் இருந்து அதிகளவானமாணவர்களுக்கு பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புக்கிடைத்தது. கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து பட்டதாரிகள், சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், வைத்தியர்கள் எனப் பலர் உருவாகிவிட்டார்கள். அது மட்டுமல்லாமல் மாவட்டச் செயலகம், மாவட்ட வைத்தியசாலை, மாவட்டக் காணி அலுவலகம் என கிளிநொச்சி தனி அந்தஸ்த்தை அடைந்து விட்டது. இதற்கெல்லாம் வித்திட்டவர் ஆனந்தசங்கரி தான் என்பதை யாராலும் மறக்கவோ மறைக்கவோ முடியாது.

1973 ஆம் ஆண்டு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரணதர மாணவர்களான நான் உட்பட எனது நண்பர்கள் அனைவரும் இரவில் தங்கிபடிப்பதற்காக தனது அலுவலகத்தில் இடத்தை ஒதுக்கி கொடுத்திருந்தார். அப்போது அவரின் வீடும் அலுவலகமும் ஒன்றாகவே இருந்தது. அதிகாலை நான்கு மணிக்கு எங்களை எழுப்பிவிடுவார். அவர் துணைவியார் எங்களுக்கு பனங்கட்டியுடன் தேநீரும் தருவார். நாங்களும் மிகவும் நன்றாகவேபடித்தோம். முதல் முறையாக அந்த வருடம் தான் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான பிரிவில் பலர் சித்தியடைந்தனர். அதில் விஞ்ஞானபாடங்கள் உட்பட ஐந்து திறமை சித்திகளுடன் நான் முதல் மாணவனாக சித்தியடைந்தேன். என் வளர்ச்சிக்குக் காரணம் ஆனந்தசங்கரி எங்களுக்கு கொடுத்த ஊட்டச்சத்தாகும். மாணவர்கள் கல்விகற்பதற்காக அலுவலகத்தையே கொடுத்த பாராளுமன்ற உறுப்பினர் இவர் ஒருவராகத்தான் இருக்க முடியும். அந்தளவிற்கு கல்வியால் சமுகத்தை உயர்த்தப் பாடுபட்டார்.

சர்வதேச நாடுகள் அன்றிருந்த மனோநிலையில், யுத்தம் ஒன்று உருவாகுமேயானால் அதன் இழப்பு அதிகம் என்பதை தீர்க்கதரிசனமாக உணர்ந்து கொண்ட ஆனந்தசங்கரி விடுதலைப் புலிகளின் அமைப்பிற்கும், அரசாங்கத்திற்கும் அடிக்கடி அறிவுரைகள் கூறி கடிதங்களை எழுதிவந்தார். புலிகளுக்கு கூறிய அறிவுரைகளையும் ஆலோசனைகளையும், பதவி மோகம் கொண்ட ஒரு சில சுயநலவாதிகளால் அவர்களுக்கு தவறான வியாக்கியானங்கள் கொடுத்து பெரிதுபடுத்தப்பட்டன. அதன் விளைவால் அவர் புலிகளுக்கு எதிரியாகக்காட்டப்பட்டார். அதனால் அவர் உயிருக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டது. அதனையும் பொருட்படுத்தாமல் துணிச்சலுடன் தனது கருத்துக்களை வலியுறுத்தி வந்தார். அவர் கூறியதுதான் இறுதியில் நடந்துமுடிந்தது. வன்முறைக்குஎதிராக குரல் கொடுத்தமைக்காகவும், சகிப்புத்தன்மையுடன் போராடியதற்காகவும் யுனெஸ்கோ அமைப்பால் "மதன்ஜித்சிங்" விருது வழங்கி சர்வதேசத்தால் கௌரவிக்கப்பட்டார். சர்வதேசத்திற்கு தெரிந்த அவரின் நிலைப்பாடு தமிழ் மக்களுக்கு தெரியாமல்போனது ஒரு புதிராகவே இன்றும் உள்ளது. ஒரு சமுகத்திடம் பொய்களைக் கூறி வெற்றி பெறுவதை விட உண்மையைக் கூறி தோல்வியைத் தழுவிக் கொள்வது மேலான தாகும் என்ற ஒரு அறிவாளியின் கூற்றுத்தான் ஞாபகத்திற்கு வருகின்றது.

"யதார்த்தவாதி வெகுஜன விரோதி" என்ற வார்த்தை அவருக்கே பொருந்தும். தமிழ் மக்கள் தமது அரசியல் தலைமைகளிடம் இருந்து சரியான பதிலை எதிர்பார்ப்பது கிடையாது. அவர்களுக்கு தேவை அந்த நேரத்தில் அவர்களை சந்தோசப்படுத்தக் கூடிய உணர்ச்சிகரமானவார்த்தைகளே. ஆனால் ஆனந்தசங்கரி நடைமுறைக்கு சாத்தியமான சரியான கருத்துக்களை எவருக்கும் அஞ்சாமல் துணிச்சலுடன் கூறிவந்தார். மக்கள் இதனை புரிந்து கொள்ளவில்லை.

இலங்கையில் உள்ள அனைத்து இன, மத மக்களும் பேதமன்றி ஒற்றுமையுடன் வாழ்வதையே அவர் விரும்புகின்றார். அதற்காகவே தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து செயற்படுகின்றார். அதனால் தான் அவர் எப்பொழுதும் சகல இன, மத மக்களும் ஒற்றுமையுடன் வாழும், மாநிலங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரமுடைய இந்திய முறையிலான ஒரு தீர்வுத்திட்டத்தை வலியுறுத்தி வருகின்றார். இனிவரும் காலங்களிலாவது அவருடைய சரியான கருத்துக்களை ஏற்றுக் கொண்டு செயற்படுவார்களேயானால் எமது மக்கள் எதிர் நோக்கும் பல பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணமுடியும். மக்களுக்காக தனது வாழ்வை அர்ப்பணித்து செயற்படும் வீரசிங்கம் ஆனந்சங்கரி இன்னும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்ந்து தமிழ் மக்களுக்கு சேவை செய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

இரா. சங்கையா,
யாழ் மாநகரசபை
முன்னாள் உறுப்பினர்,
நிர்வாகச் செயலாளர்
த.வி.கூ.

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

**எண் 1 (சூரியன்)**
**(ஆளும் வேந்தர்கள்)**

**பிறப்பு எண் 1**
**விதி எண் 4**

சிற்றின்ப ஆசைகளில் ஈடுபடுவார்கள். நல்ல நட்பு இருக்கும். மருத்துவம், இலக்கியம், ஜோதிடம் போன்ற துறைகளில் அதிக ஆர்வம் இருக்கும். பிறர் கூறும் கருத்தை ஒத்துக் கொள்ளவே மாட்டார்கள். தீர விசாரித்துப் பின்னர் தான் ஒரு முடிவுக்கு வருவார்கள். எந்த விடயத்தையும் சுலபமாக கையாள்வார்கள். வெற்றி நிச்சயம் உண்டாகும். பிறர் கூறும் விடயத்தைப் பற்றித் தீர விசாரிப்பதுடன் தனக்குச் சரியென்று பட்டதைச் செய்வார்கள்.

நேர்மையைக் கடைப்பிடிக்கும் இவர்கள் போலிகளை வெறுப்பார்கள். இதனால் இவருடைய நண்பர்கள் இவர்களை விட்டுப் பிரிய மாட்டார்கள். தனக்குப் பிடிக்காத காரியத்தில் தலையிடாமல் ஒதுங்கி விடுவார்கள். பிறருக்கும் தீங்கு செய்ய மாட்டார்கள். கதைகள், சாஸ்திரம், ஜோதிடம், மதம் போன்றவற்றில் அதிக ஆர்வமிருக்கும். எப்போதும் பல அரிய பல புதிய விடயங்கள் பற்றிச் சேகரித்துக் கொண்டேயிருப்பார்கள். புதுப்புது விடயங்களைக் கண்டு பிடிக்கும் ஆற்றல் வாய்ந்தவர்கள். சுகமான வாழ்க்கையைத் திறம்பட வாழ்வார்கள்.

உலக அறிவு நிரம்பியவர்கள். பெண்கள் அலங்காரப் பிரியர்களாக இருப்பார்கள். வயதுக்கு மீறிய அங்க வளர்ச்சியிருக்கும். விதவிதமான கண்ணைகவரும் அணிவதில் விருப்பமிருக்கும். பிறர் முன்பு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவார்கள். பின்னால் வரும் சந்ததிகளுக்கு வழிகாட்டுவார்கள். தெய்வீகம், மதம், விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட துறைகளில் திறமை மிக்கவர்கள். நறுமணப் பொருட்கள் மீது நாட்டமிருக்கும்.

சென்ற இடமெல்லாம் சிறப்புகள் இருக்கும். எப்பேர்ப்பட்ட பிரச்சினைகளையும் சமாதானம் செய்து வைத்து விடுவார்கள். கீழ்த்தரமான செயல்களை வெறுப்பார்கள். உணர்ச்சிகளை, புலன்களைக் கட்டுப்படுத்தி வாழ்வார்கள். எந்தவொரு காரியத்தையும் பிறர் புரியும்படி தெளிவாக எடுத்துரைப்பார்கள். சுற்றிவளைக்காமல் நேரடியாகப்




பேசக்கூடியவர்கள். நடுநிலைமை வகிப்பார்கள். மனம் எதையாவது சிந்தித்த வண்ணமிருக்கும். நல்ல பேச்சுத்திறன் படைத்த இவர்கள் செயற்றிறனும் மிக்கவர்கள். மிகுந்த புத்திசாலிகள். உடலில் ஒருவித காந்த சக்தியிருக்கும். பிறருக்காக ஒருசில காரியங்களில் இறங்கி மாட்டிக் கொள்வதும் உண்டு. உணவு, உடை, இருப்பிடம் என்று குறையிருக்காது. நலிந்தவர்களுக்குத் தாராளமாக உதவிகள் செய்வார்கள். தவறுகளை மன்னிக்கும் மனோபாவம் மிக்கவர்கள். தெய்வீக அனுக்கிரகத்தால் அனைத்து ஆபத்திலிருந்தும் தப்பித்துக் கொள்வார்கள். எப்போதும் பலபேர் இவர்களைச் சுற்றி வந்து கொண்டேயிருப்பார்கள். பண விடயத்தில் நியாயமாக நடந்து கொள்ளும் இவர்கள் தலைமையைப் பலரும் ஏற்றுக் கொள்வார்கள்.

புகழ்ச்சிக்கு மயங்க மாட்டார்கள். சமுதாயத்தில் முக்கிய பிரமுகராவார்கள். பெருந்தன்மையுடன் நடப்பார்கள். சுற்றுலாப் பயணத்தில் மனம் விரும்பி அனுபவிப்பார்கள். நேர்மைக்கும் பாசத்திற்கும் கட்டுப்பட்டவர்கள். நகைச் சுவை உணர்வு மிக்கவர்கள். புன்னகையுடன் கூடிய முகமுடையவர்கள். தன்னை நம்பியவருக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்வார்கள். தெளிவான சுய சிந்தனை மிக்கவர்கள். பொது வாழ்க்கையில் பிரகாசிப்பார்கள். இவர்களுடைய தலைமையை விரும்பி பல பேர் காத்திருப்பார்கள். வாகனப் பிரியர்கள். அரசியல் ஞானமுண்டு. வருமுன் ஊகிக்கும் ஆற்றல் பிறவியிலேயே உண்டு. சில நேரங்களில் தற்புகழ்ச்சிக்கு மயங்கி எல்லா விதமான உதவிகளையும் செய்வார்கள். புதுப்புதுக் கொள்கைகளை உருவாக்குவார்கள். பெரியவர்களை மதிக்கும் குணமுடையவர்கள். சுதந்திரமாகவே செயற்படுவார்கள். அதிர்ஷ்டக் குறிப்புக்களை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
1,10,19,28,6,15,24

அரதிர்ஷ்ட திகதிகள்
8,17,26,4,13,22,31

அதிர்ஷ்ட நிறங்கள்
மஞ்சள், வெளிர் நீலம், சந்தனம், பொன்னிறம்

அரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, கோப்பிக்கலர், பாக்கு நிறம், இருண்ட நிறங்கள்

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
மாணிக்கம், கனகபுஷ்பராகம், தங்கபுஷ்பராகம், ஓபல், சூரியகாந்தக்கல், கோமேதகம், அக்கோமரின்.

**பிறப்பு எண் 1 விதி எண் 5**

யாராலும் புரிந்து கொள்ள முடியாதவாறு இவர்களின் செய்கைகள் இருக்கும். சுறுசுறுப்பாகவே இயங்கக்கூடியவர்கள்.

(தொடரும்....)

# பொன்னாலையில் கடற்படையினர் நீர் எடுப்பதை கட்டுப்படுத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு சபையில் ஏகமனதாக தீர்மானம் பொன்னாலையில் இருந்து கடற் படையினர் நன்னீர் எடுத்துச் செல்வதை உடனடியாகக் கட்டுப்படுத்தவேண்டும் என வலி. மேற்கு பிரதேச சபை யில் ஏகமன தாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபையின் நான்காவது கூட்டம் நேற்று முன்தினம் தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் உறுப்பினர் ந.பொன்ராசா, பொன்னாலையில் கடற்படையினர் தண்ணீர் எடுத்துச் செல்வதைக் கட்டுப்படுத்த வேண்டும் என பிரேரணை கொண்டுவந்தார். இப் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணையைச் சபையில் முன்வைத்து உரையாற்றிய பொன்ராசா, கடற்படையினர் தினமும் 50 ஆயிரம் லீற் றர் தொடக்கம் 65 ஆயிரம் லீற்றர் வரையான நன்னீரை எடுத்துச் செல்கின்றனர் எனவும் இந் நிலை தொடர்ந்தால் பொன்னாலை மக்கள் குடி தண்ணீருக்காக அலைய வேண்டிய நிலை ஏற்படும் எனச் சுட்டிக் காட்டினார்.

பொன்னாலை நன்னீர் வளம் குறைந்த பிரதேசமாகும். கடலுக்கு மிக அண்மையில் இக்கிராமம் அமைந்துள்ளதால் கடல்நீர் மிக இலகுவாக நிலத்தடி நீரை மாற்றக்கூடிய அபாயம் உள்ளது. இங்கு முன்னோர்கள் தமது ஆன் மீக, விஞ்ஞான ஆய்வுகள்மூலம்கண்டறிந்த இடங்களில் அமைத்த ஒருசில கிணறு களே இன்றும் நன்னீர் வளம் மிக்க கிணறுகளாக உள்ளன.

பொன்னாலை குடிநீர் விநியோகத் திட்டத்தில் உள்ள இரு கிணறுகளில் கடற்படையினர் எடுத்துச் செல்லும் நன்னீரை சுழிபுரம் சம்பில்துறையில் முகாமிட்டுள்ள கடற்ப டையினர் குளிப்பதற்கும் கடற்படை முகாமிலும் பௌத்த விகாரையில் உள்ள மரக்கன்றுகளுக்கு ஊற்றுவதற்கும் பயன்படுத்துகின்றனர். தினமும் இவ் வாறு அதிகளவான நன்னீர் எடுத்துச் செல்லப்படுவதால் பொன்னாலையில் நன்னீர் வளம் அற்றுப்போகும் சூழல் உருவாகியுள்ளது.

பொன்னாலை குடிதண்ணீர் விநியோகத்தின் மூலம் பொதுமக்களுக்கு தினமும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நீர் விநியோகிக்கப்படுகின்றது. ஆனால் கடற்படையினர் இரவு பகலாக நன்னீரைச் சுரண்டிச் செல்கின்றனர்.

இச்செயற்பாட்டால் பொன்னாலையில் உள்ள நன்னீர்க் கிணறுகள் உவர் நீராக மாற்றமடைந்து வருகின்றன. கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் மக்கள் நன்னீர் எடுத்த சில கிணறுகள் இப்போது உவர் நீராக மாற்ற மடைந்துள்ளன. இங்கு விவசாயச் செய்கை மற்றும் மரக்கறிப் பயிர்ச் செய்கை என்பனவும் பாதிப்படைந்துள்ளன.

இந்த நிலை தொடர்ந்தால் இன்னும் சில வருடங்களில் பொன்னாலையில் அறவே குடிதண்ணீர் இல்லாத நிலை ஏற்படும். பொன்னாலை குடி தண்ணீர் விநியோகத் திட்டத்தையும் பிரதேச சபை கைவிட வேண்டிய நிலை வரும்! இதனால் பொன்னாலை வாழ் மக்கள் தண்ணீருக்கு அலையவேண்டிய நிலை ஏற்படும்.

கடற்படையின் இந்தச் செயற்பாட்டை தடுத்து நிறுத்துவதற்காக கடந்த சில வருடங்களாக தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனினும், குறித்த கிணறுகள் அமைந்துள்ள காணியைக் கடற்படையினர் கொள்வனவு செய்துள்ளனர் எனக்காரணம் காட்டி அதிகாரிகள் எந்தவொரு நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. கடற்படையினர் அந்தக் காணியை வாங்கிவிட்டார்கள் என்பதற்காக எமது இயற்கை வளத்தைச் சுரண்டிச் செல்வதை அனுமதிக்க முடியாது.

இதேவேளை, கடற்படையினரின் நீர்ச்சுரண்டலுக் கான மின்சாரக் கட்டணத்தை வலி. மேற்கு பிரதேச சபையே இதுவரை செலுத்திக் கொண்டிருக்கின்றது. அத்துடன், அங்கு படையினர் அமைத்துள்ள மினி முகாமுக்கும் 24 மணி நேர மின் விநியோகத்திற்கான கட்டணத்தையும் பிரதேச சபையே செலுத்துகின்றது.

பிரதேச சபை அதிகாரிகள் இதுவரை இச்செயற்பாட்டைத் தொடர்ந்தமை விசனத்திற்குரியது. பொன்னாலையில் வீதிகளுக்கு மின்விளக்குகளைப் பொருத்துவதற்கு நிதி இல்லை எனக் கூறுகின்ற எமது இந்தச் சபை, கடற்படைக்கு எவ்வாறு மின்கட்டணத்தைச் செலுத்த முடியும்?

எனவே, இது மக்களின் அடிப்படைத் தேவை என்ற ரீதியில், இதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பெரும் பொறுப்பும் கடமையும் வலி. மேற்கு பிரதேச சபைக்கு உண்டு. பிரதேச சபை உடனடியாக நீர்வளச் சபையைத் தொடர்புகொண்டு உரிய ஆய்வை மேற்கொள்ள வேண்டும். கடற்படை தினமும் 10 ஆயிரம் லீற்றருக்கு அதிகமான நீரை எடுத்துச் செல்வதை அனுமதிக்கக்கூடாது.

கடற்படையினர் நீரைப் பெறுவதற்கான மின்சாரக் கொடுப்பனவு மற்றும் கடற்படை மினி முகாமுக்கான மின் விநியோகக் கொடுப்பனவு என்பவற்றை வலி. மேற்கு பிரதேச சபை இனி செலுத்தக் கூடாது. இதுவரை பிரதேச சபையால் செலுத்தப்பட்ட மின்கட்டணத்தைக் கடற்படையினரிடம் இருந்து மீள அறவிட்டு பொன்னாலை யில் மின் விளக்குகளைப் பொருத்த அந்த நிதியைப் பயன்படுத்த வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தினார். (இ-9)

# கூட்டுறவுப் பணியாளர்களுக்கான இழப்பீட்டுத் தொகை வழங்கல்



(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுப் பணியாளர்களுக்கான இழப்பீட்டுத் தொகையினை வடமாகாண கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன் வழங்கினார்.

கூட்டுறவுத்துறையின் அங்கத்தவர்களாக இருந்து தமது பணியின் போது மரணமடைந்த குடும்ப உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வில் குருநகர் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினை சேர்ந்த எமிலியான் சியாங் என்பவருக்கான இழப்பீட்டுத் தொகையை சியாங் பெல்சியானாவும், ஏழுகடல் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தை சேர்ந்த யோகராசாகிசாந்தன் என்பவருக்கான இழப்பீட்டுத் தொகையை காயாம்புயோகராசாவும், வங்காலை புனித அந்தோனியார் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தை சேர்ந்த சென்யோன் குணசீலன் குரூஸ் என்பவருக்கான இழப்பீட்டுத்தொகையை குணசீலன் மிராண்டாவும், கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினைச் சேர்ந்த சின்னவன் கனகரத்தினம் என்பவருக்கான இழப்பீட்டுத் தொகையை கனகரத்தினம் விஜயலட்சுமியும் அமைச்சரிடமிருந்து இழப்பீட்டுத் தொகைக்கான காசோலையை பெற்றுக்கொண்டனர்.

இழப்பீட்டுத் தொகையை வழங்கி வைத்த அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில், குடும்ப உறவுகளை இழந்து நிர்க்கதியாக நிற்கின்ற குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் இப் பணமானது சிறியதாக இருந்தாலும், குடும்ப அங்கத்தவர்களின் நலன்களை ஈடுசெய்ய ஓரளவு உதவக்கூடியதாக இருக்கும்.

ஆனாலும் அவர்களின் இழப்பினை அமைதிப்படுத்தவோ, சாந்தப்படுத்தவோ முடியாது. இவ் உதவுதொகையை பயன்படுத்தி உங்கள் பிள்ளைகளை நன்றாக வளர்த்தெடுக்கவேண்டும். முன்னாள் கூட்டுறவு அமைச்சரினால் அறிமுகப்படுத்தப்பட்ட இத் திட்டமானது எதிர்காலங்களில் இத் தொகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மகளிர் விவகார அமைச்சரின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் இ.கிருஸ்ணபிள்ளை, கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் தலைமைப்பீட உத்தியோகத்தர் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9)








யாழ்ப்பாணம் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை வெகுவிமர்சையாக நடைபெற்றது. இந்த பெருவிழாவில் பதுவைப் புனிதரான அந்தோனியார் தேரில் ஏறி வீதி உலா வந்து பக்தர்களுக்கு ஆசிர் வழங்கினார். இந் நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அந்தோனியாரைத் தரிசிக்க வருகை தந்திருந்தனர்.

(படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# வரணி பத்து வீட்டுத் திட்ட பயனாளிக்கு வலம்புரி செய்தியையடுத்து உரிய தீர்வு

(வரணி)

கடந்த புதன்கிழமை (13.06.2018) வலம்புரி பத்திரிகையில் வெளிவந்த வரணி பத்து வீட்டுத்திட்டத்தில் பயனாளிக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டம் திடீரென நிறுத்தம் பயனாளி பரிதவிப்பு என்ற செய்தியையடுத்து தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட பணிப்பாளர், வரணி பத்து வீட்டுத்திட்ட பகுதிக்கு நேற்று வியாழக்கிழமை நேரடியாக சென்று பாதிக்கப்பட்ட சித்தன் கனகன் எனும் பயனாளியுடன் கலந்துரையாடியதுடன் ஏனைய பயனாளிகளுடன் பிரச்சினைகள் தொடர்வதாக கலந்துரையாடி பாதிக்கப்பட்ட பயனாளிக்கு உரிய தீர்வை பெற்றுக் கொடுத்தார்.



இந்தக் கலந்துரையாடலில் இடைக்குறிச்சி, வரணி கிராம உத்தியோகத்தர் மற்றும் ஏனைய பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

நேரடியாக விஜயம் மேற்கொண்ட பாதிக்கப்பட்ட பயனாளிக்கு உரிய தீர்வை பெற்றுக் கொடுத்த தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட பணிப்பாளருக்கு பயனாளியும் கிராம மக்களும் நன்றியைத் தெரிவித்தனர். இவரை முன்மாதிரியாகக் கொண்டு ஏனைய உயர் அதிகாரிகளும் செயற்பட வேண்டும் என கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-103)

# இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து மீண்ட ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்யமுடிவு

## புதிய நிர்வாக சபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

பல நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த பலாலிட்டி தெற்கு கட்டுவன் (தென் மயிலை) ஸ்ரீபத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயம் இராணுவக் கட்டுப்பாட்டிலி ருந்து கடந்த ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி விடுவிக்கப் பட்டது.

இந்நிலையில் கடந்த 30 வருடங்களாக எந்த பூசை வழிபாடுகளின்றி உருக்குலைந்து காணப்படும் இவ்வாலயத்தை மீள புனர்நிர்மாணம் செய்து, பூசை வழிபாடுகளை தொடருவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளும் முகமாக புதிய நிர்வாக சபைத் தெரிவு பொதுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆலய வளாகத்தில் இடம் பெற்றது.

இதில் தலைவராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன், உப தலைவராக முருகேசு சிவப்பிரகாசம், உப செயலாளராக குருசாமி சுகுமார், செயலாளராக தம்பிராசா வேலாயுதம், பொருளாளராக பூதத்தம்பி சிவராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் நிர்வாகசபை உறுப்பினர்களாக நேசபூபதி நாகராசா, உதய சுதர்சினி குணநேசன், நமசிவாயம் விக்னேஸ்வரன், தம்பிராசா கந்தசாமி, ந. உதயதாஸ், கு.கோகுலன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-9)

# ஆனி மாத இராசி பலன்கள்

## 15.06.2018-16.07.2018



விளம்பி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் உச்சம் பெற்றுத் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். தனாதிபதி சுக்கிரனை இராசிநாதன் செவ்வாய் பார்க்கிறார். எனவே செய்யும் தொழில் சிறப்பாக இருக்கும். எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாக இலாபம் கிடைக்கலாம். நடக்கும் தொழிலை விரிவு செய்யப் போதுமான மூலதனம் இல்லையே என்று நினைத்தவர்களுக்கு இப்பொழுது கைகொடுத்து உதவ பலரும் முன்வருவர். வங்கிகளின் மூலமும் உங்களுக்கு உதவிகள் கிடைக்கும்.

உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு பகவான், சப்தம ஸ்தானத்தில் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். குருவின் பார்வை உங்கள் இராசியில் மட்டுமல்லாமல் சகாய ஸ்தானத்திலும் இலாப ஸ்தானத்திலும் கூட பதிகின்றது. குருவின் சிறப்பான பார்வை பதியும் இடங்கள் எல்லாம் நல்ல பலன்களை வரவழைத்துக் கொடுக்கும்.

கிரகங்கள் சாதகமாக இயங்கும்பொழுது எதைத் தொட்டாலும் அந்தக் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். மன அழுத்தம் மாறும். குழப்பங்களில் இருந்து விடுதலை பெறுவீர்கள். உடன் இருப்பவர்களாலும் நன்மை கிடைக்கும். கருத்து வேறுபாடுகள் அகலும். காரிய வெற்றிக்கு நண்பர்கள் மட்டுமல்லாமல் உறவினர்களும் போட்டி போட்டுக் கொண்டு உதவுவர். தாய்வழியிலும் ஆதரவு கிடைக்கும்.

இம்மாதத்தில் குரு பகவான் வக்கிர நிவர்த்தியாகிறார். அதேநேரத்தில் இராசிநாதன் செவ்வாய் வக்கிரம் பெறுகிறார். இவற்றின் விளைவாக சில மாற்றங்கள் உங்களுக்கு வந்துசேரப் போகிறது. இராசிநாதன் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல என்றாலும் அதேநேரத்தில் உங்கள் இராசியைப் பார்க்கும் குருவக்கிர நிவர்த்தியாகி பலம்பெற்று இருப்பதால் அதிக நற்பலன்கள் உங்களுக்கு கிடைக்கும். இருப்பினும் இம்மாதம் அந்த இரண்டு கிரகங்களுக்குரிய சிறப்பு வழிபாடுகளை முறையாக செய்யுங்கள். குரு பார்வை கோடி நன்மை தரும் என்பதால், குரு வக்கிர நிவர்த்தியான ஒருவார காலத்திற்குள் குருவிற்குரிய சிறப்பு ஸ்தலங்களான திருச்செந்தூர், ஆலங்குடி, பட்டமங்கலம், திருவாலி தாயம், புளியறை, தக்கோலம் சென்று வழிபட்டு வரலாம். அதேபோல செவ்வாய்க்குரிய சேத்திரமான வைத்தீஸ்வரன் கோவில் மற்றும் பூமிநாத சுவாமி கோவில்களுக்கும் யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வாருங்கள்.

பொருளாதாரப் பிரச்சினை அகலும். புதிய வாழ்க்கை மலரும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். பழைய நண்பர்களோடு இருந்த பகை மாறும். புதனின் கடக சஞ்சாரத்தால் உத்தியோகத்தில் முன்னேற்றங்கள் ஏற்படும். வராத சம்பளப் பாக்கிகள் வந்து சேரும்.

குருவின் வக்கிர நிவர்த்தி

ஜூலை 4 ஆம் திகதி துலாம் இராசியில் சஞ்சரிக்கும் குரு வக்கிர நிவர்த்தியாகிறார்.




எனவே அதன் பார்வைக்கு பலம் அதிகம் கிடைக்கப் போகின்றது. ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். தொழிலில் இலாபம் இருமடங்காக கிடைக்கும். உடன் பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர்.

துகள் சாதகமாக முடியும். பிள்ளைகளின் பொறுப்பற்ற போக்குகள் மாறும். படித்து முடித்த பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கும் யோகம் உண்டு.

மகர செவ்வாய் வக்கிரம்

ஜூலை 9 ஆம் திகதி மகர இராசியில் சஞ்சரிக்கும் செவ்வாய், வக்கிரம் பெறத் தொடங்குகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. பணிச்சுமை அதிகரிக்கும். வெறுப்பும் சலிப்பும் மனக் கவலை தரும். தொழிலில் புதிய பங்குதாரர்களைச் சேர்த்துக் கொள்ள முன்வருவீர்கள். மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும். சொத்துகளை விற்பனை செய்யும் சூழ்நிலை உண்டு. அருகில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. இம்மாதம் ஆனித் திருமஞ்சனத்தன்று நடராஜப் பெருமானை வழிபட்டு வருவது உத்தமம்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

முற்பகுதியைக் காட்டிலும் பிற்பகுதி சிறப்பாக அமையவிருக்கும் மாதம் இது. முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும். கல்வித்தடை அகலும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குடும்பப் பெரியவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து

## தொழில் வளர்ச்சி மேலோங்கும்!

கடக புதன் சஞ்சாரம்

ஜூன் 23 ஆம் திகதி கடக இராசிக்குப் புதன் செல்கிறார். மாதத் தொடக்கத்தில் புதன் வெற்றிகள் ஸ்தானத்தில் தனது சொந்த வீட்டில் சூரியனோடு இணைந்து சஞ்சரிக்கிறார். இந்த புத-ஆதித்திய யோகத்தால்

சிம்ம சுக்கிரன் சஞ்சாரம்

ஜூலை 5 ஆம் திகதி சிம்மத்திற்கு சுக்கிரன் வருகிறார். தன சப்தமாதிபதி 5 இல் சஞ்சரிக்கும் போது பிள்ளைகளின் திருமணப் பேச்சுகள் நல்ல முடிவிற்கு வரும். சொத்துகள் சம்பந்தமாக ஏற்பட்ட பஞ்சாயத்

கொள்வர். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுகள் கைகூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணி நிரந்தரம் பற்றிய நல்ல தகவல் வந்து சேரும். வீடு வாங்க விண்ணப்பித்தவர்களுக்கு சாதகமான பலன் உண்டு. வியாழன்தோறும் குருவை வழிபடுவதோடு, நடராஜரையும் தரிசனம் செய்தால் இல்லத்தில் நல்ல காரியம் நடைபெறும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



15-6-2018 முதல் 16-7-2018 வரை

விளம்பி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 2 ஆம் இடமான தனஸ்தானத்தில் சந்திரன், சூரியன், புதன் ஆகிய மூன்று கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. தனாதிபதி, சகாய ஸ்தானாதிபதி, சுகாதிபதி ஆகிய 3 இடங்களுக்கும் அதிபதியான அந்த 3 கிரகங்களும் வாக்கு, தனம், குடும்பம் என்பதைக் குறிக்கும் இடமான இரண்டாம் இடத்தில் சேர்க்கை பெறுவது யோகம்தான். இதனால் பொருளாதார நிலை உயரும். புகழ் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து வெற்றிக்கு உதவுவார்கள்.

8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குருபகவான் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அவரது பார்வை குடும்ப ஸ்தானத்தில் பதிவதால் குடும்பத்தில் முன்னேற்றம் இருக்கும். இதுவரை தடைப்பட்டு வந்த காரியங்கள் நடைபெறும். அஷ்டமத்துச் சனி, வக்கிரம் அடைந்திருப்பது ஒருவழிக்கு நன்மைதான். ஆரோக்கியத் தொல்லை ஓரளவு அகலும். பிறருக்கு பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகைக்கு வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வேலைப்பளு குறையலாம். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். பணியிட மாற்றங்களை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு நல்ல தகவல் வந்துசேரும்.

ராகு 3இலும் கேது 9இலும் சஞ்சரிக்கிறார்கள். அதேநேரத்தில் 9 ஆம் இடத்தில் செவ்வாய் உச்சம் பெற்று விளங்குகிறார். எனவே பூர்வீகச் சொத்துகள் சம்பந்தமாக பல மாதங்களாக நடைபெற்ற பஞ்சாயத்துகள் இனி நல்ல முடிவிற்கு வரும். சகோதரர்கள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடிய வழி பிறக்கும். சப்தம விரயாதிபதியாக செவ்வாய் விளங்குவதால், சொத்துகளால் ஆதாயமும் சொந்தங்களால் நன்மையும் கிடைக்கப் போகின்றது.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் சனிபகவானை வழிபட்டு வருவதோடு, மூலம், பூராடம், உத்தராடம் ஆகிய நட்சத்திரங்கள் வரும் நாளில் அனுமானுக்குரிய சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

கடக புதன் சஞ்சாரம்!

சிகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். சேமிப்பு உயரும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும்.

குரு வக்கிர நிவர்த்தி

ஜூலை 4 ஆம் திகதி துலா இராசியில் சஞ்சரிக்கும் குரு பகவான் வக்கிர நிவர்த்தியாகிறார். ஒரு வழியில் இது நன்மைதான். 8 இற்கு அதிபதி 6 இல் பலம் பெறும் பொழுது 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கிணங்க சில நல்ல காரியங்கள் நடைபெறும். திறமை மிக்கவர்கள் உங்




களுக்குப் பின்னணியாக இருந்து காரியங்களை முடித்துக் கொடுப்பர். இடமாற்றங்கள், ஊர்மாற்றங்கள் எளிதில் கிடைக்கும்.

சிம்ம சுக்கிரன் சஞ்சாரம்

வாங்க வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறும்.

மகர செவ்வாய் வக்கிரம்

ஜூலை 9 ஆம் திகதி மகரத்தில் உச்சம் பெற்றிருக்கும் செவ்வாய், வக்கிரம் பெறத் தொடங்குகிறார். 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் வக்கிரம் பெறுவதால், வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பயணங்களில் மாற்றம் ஏற்படலாம். உடன்பிறப்புகளின் கருத்துகளைப் புரிந்துகொண்டு செயற்படுவது நல்லது. இம்மாதம் பிரதோஷ நாளில் நந்தியை வழிபடுவதன் மூலம் நன்மைகள் கிடைக்கும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

சுப விரயங்கள் அதிகரிக்கும் மாதம் இது. துணிந்து முடிவெடுத்துச் சில காரியங்களை செய்துகாட்டுவீர்கள். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டப் புதிய சந்தர்ப்பங்கள் கைகூடி வரும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகள் வழியில் நடைபெற வேண்டிய சுப காரியங்களுக்காக எடுத்த முயற்சி கைகூடும். வீடு கட்டும் அல்லது வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். குரு

## விரும்பிய படி மாற்றம் வந்து சேரும்!

ஜூன் 23 ஆம் திகதி கடக இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2,5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் 3 ஆம் இடத்திற்குச் சென்று சுக்கிரனோடு சேருவதால் புத-சுக்கிர யோகம் செயற்படுகிறது. எனவே எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். மங்கல நிகழ்ச்

ஜூலை 5 ஆம் திகதி சிம்மத்திற்கு சுக்கிரன் செல்கிறார். இராசிநாதனாகவும் 6 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் சுக்கிரன், சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது சந்தோச வாய்ப்புகளை அதிகம் சந்திப்பீர்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வரும் வாய்ப்பும் கிட்டும். வாகனம்

வக்கிர நிவர்த்திக்குப் பிறகு எதிர்பார்ப்புகள் ஒவ்வொன்றாக நடைபெறும். வேலைக்கு விண்ணப்பித்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். நகைகள் வாங்கும் யோகம் உண்டு. அங்காரக வழிபாடு அல்லல் தீர்க்கும்.

(தொடரும்)

# இணைந்த நேர அட்டவணைக்கு அரச, தனியார் பேருந்து சங்கங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

இணைந்த போக்குவரத்து நேர அட்டவணையை நடைமுறைப்படுத்த அரச தனியார் பேருந்து சங்கங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். தனியார் பேருந்துகளுக்கு நிரந்தர வழித்தட அனுமதியை வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். கிறீன் கிறாஸ் விடுதியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இருசாராரின் இணைந்த நேர அட்டவணைக்கமைய பேருந்துகள் பயணம் செய்கின்ற போது அரச மற்றும் தனியார் பேருந்துகளின் சேவைகள் மிகச் சிறப்பாக அமையும் என்று எதிர்பார்க்கலாம். ஆனால் இந்த இணைந்த நேர அட்டவணையை நடைமுறைப்படுத்துவதில் சில கருத்து வேறுபாடுகள் இலங்கைப் போக்குவரத்து சபைக்கும் தனியார் போக்குவரத்து உரிமையாளர்கள் சங்கத்திற்கும் இடையே நிலவுவதாக இங்கு தெரிவிக்கப்பட்டது.

அரச பேருந்துகள் பொதுமக்களின் போக்குவரத்து சேவைக்கென அமைக்கப்பட்ட ஒரு சபையாக அமைகின்ற போதும் தனியார்களின் போக்குவரத்து சேவைகளும் பாராட்டப்பட வேண்டியவை. உதாரணமாக கடந்த நீண்டகால யுத்தத்தின் போது பேருந்துகளுக்கும் அதன் உதிரிப் பாகங்களுக்கும் தட்டுப்பாடுகள் நிலவிய காலப்பகுதியில் அரச பேருந்துகள் முழுமையான ஒரு சேவையை வழங்கமுடியாது அல்லலுற்ற போது தனியார் பேருந்து உரிமையாளர்கள் தமது பெறுமதி மிக்க பேருந்துகளை போக்குவரத்துக்கு உதவாத வழித்தடங்களில் கூட சேவைக்கு அமர்த்தி பிரயாணிகளின் போக்குவரத்திற்கு வழி சமைத்தமை நன்றியுடன் நினைவு கூரப்படல் வேண்டும்.

உதாரணமாக யாழ்ப்பாணம் மன்னார் வழித்தடத்தில் அரச பேருந்து சேவையின் ஒரு பேருந்து கூட சேவைக்கமர்த்தப்படாதபோது இத்தடத்தில் முழுமையான சேவையொன்றை தனியார் பேருந்து உரிமையாளர்கள் மனமுவந்து நல்கியமை பாராட்டிற்குரியது. இன்று பிரதான வீதிகள் பலவும் சீர் செய்யப்பட்டவுடன் நான் முந்தி நீ முந்தி என இருசாராரும் தமது சேவைகளை வழங்க முண்டியடித்துக் கொண்டு முன்வருவது கருத்து முரண்பாடுகளை தோற்றுவிக்க வழிவகுப்பதாக அமைந்துள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் நாம் சில கட்டுப்பாடுகளை விரும்பியோ விரும்பாமலோ மேற்கொள்ள வேண்டிய கட்பாட்டில் உள்ளோம்.

இரு பகுதியும் இணைந்து கொண்டு தயாரித்த இணைந்த போக்குவரத்து நேர அட்டவணை இரு பகுதியினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு முறையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதே போன்று பேருந்து தரிப்பு நிலையங்களில் ஒரே தொகுதிகளில் தனியார் மற்றும் அரச பேருந்துகளை நேர அடிப்படையில் நிறுத்துவதற்கும் பொது மக்களை ஏற்றிச் செல்வதற்கும் உரித்துக்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றை அரச மற்றும் தனியார் பேருந்துகளின் இயக்குநர்கள் முறையாக பயன்படுத்தத் தவறும் பட்சத்தில் அவற்றை நிறைவேற்றுவதற்காக சில மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் பிரயோகிக்கப்பட வேண்டியிருக்கும். அவ்வாறான ஒரு நிலைக்கு எம்மை சகோதரர்கள் முன் தள்ளமாட்டார்கள் என நான் உறுதியாக நம்புகின்றேன்.

எனினும் இன்று நடைமுறையில் இருக்கும் மோசமான ஒரு பழக்கம் பற்றி நான் இந்த தருணத்தில் சொல்லியே ஆக வேண்டும். குழந்தைப் பிள்ளைகள் அடம்பிடிப்பது போல் எமது தொழிலாளர்களும் அலுவலர்களும் சூறாவளி வேலை நிறுத்தங்களில் ஈடுபடுகின்றார்கள். இன்று நினைத்து நாளை வேலையைப் புறக்கணிக்கின்றார்கள். போக்குவரத்து சேவையை எடுத்துக் கொண்டோமானால் அதன் தாக்கத்தை எமது சகோதர சகோதரிகள் உணர்ந்து கொண்டுதான் வேலை நிறுத்தம் செய்கின்றார்களா என்று எண்ண வேண்டியுள்ளது. பேருந்து தடைப்பட்டால் எல்லோராலும் வேறு வாகனங்கள் பிடித்துச் செல்லமுடியாது. வைத்தியசாலைகள், வேலைத்தளங்கள், கல்வி நிலையங்களுக்கான எமது பயணங்கள் திடீரெனத் தடைப்படுகின்றன. குழந்தைகள்தான் தாம் கோருவனவற்றைத் தராவிட்டால் அடம்பிடிப்பார்கள். முதிர்ச்சி பெற்ற எம்மவர் தமது காரியங்களால் ஏற்படும் தாக்கங்களைப் புரிந்தே நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.

நாம் கோரினால் மற்றவர் அதைத் தர வேண்டும். இல்லையென்றால் உடனே வேலை நிறுத்தம் என்ற எமது பழக்கத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். மற்றைய அபிவிருத்தி நாடுகளைப் பார்த்து நாம் எம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். ஜப்பானில் எவருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் கறுப்பு கைப்பட்டி அணிந்து வேலைக்குச் செல்வார்கள். தமது வேலை நிறுத்தங்களால் மக்களோ, தொழில் முயற்சிகளோ, கல்வி நடவடிக்கைகளோ பாதிக்கப்படக்கூடாது என்றே அவர்கள் சிந்திக்கின்றார்கள். 2500 ஆண்டு பாரம்பரியம் பெற்ற தமிழரோ திடீர் வேலை நிறுத்தமே முறையென்று நடந்து கொள்கின்றார்கள். இந்த நிலை மாற வேண்டும். இவை அனைத்திற்கும் மேலாக பேருந்து சேவையை எடுத்துக் கொண்டோமானால் அதில் ஈடுபடுத்தப்படுகின்ற ஒவ்வொரு பேருந்தும் பல இனிய உயிர்களை சுமந்து செல்லுகின்ற வாகனங்களாவன. அவற்றை முறையாக இயக்குவதற்கு அதன் சாரதிகளும் உரிமையாளர்களும் தமது முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும். உங்கள் சிறிய கவலையீனங்களும் போட்டி மனப்பான்மைகளும் பல்வேறு உயிர்களை காவு கொள்ளக்கூடிய தன்மையை ஏற்படுத்தும் என்பதனை மனதில் இருத்தி செயற்படல் வேண்டும். அதே போன்று பொது மக்களின் குறிப்பாக இளைஞர், யுவதிகளின் பாதுகாப்புக்கள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். சிறுவர்கள் மற்றும் யுவதிகள் தொடர்பில் புதினப் பத்திரிகைகளில் தினமும் வெளிவருகின்ற செய்திகள் எமக்கு அதிர்ச்சியையும் வெறுப்பையும் ஊட்டுவனவாக உள்ளன. எனவே அன்பார்ந்த நடத்துநர்களே!உங்கள் போக்குவரத்து பேருந்துகளில் பயணம் செய்கின்ற குழந்தைகள், யுவதிகள் ஆகியோரை உங்கள் பிள்ளைகளாக அல்லது சகோதரிகளாக நினைத்து அவர்களின் பாதுகாப்பை 100 வீதம் உறுதி செய்வது உங்கள் கடப்பாடு என்பதை கவனத்திற்கொள்ள வேண்டும். சில போக்குவரத்து பேருந்துகளின் நடத்துநர்களின் செயற்பாடுகள் மன நிறைவுடன் போற்றப்பட வேண்டியுள்ளது. உதாரணமாக கண்டி,கொழும்பு போன்ற பிரதேசங்களில் இருந்து நடுநிசி வேளையில் யாழ்ப்பாணத்தை வந்தடைகின்ற பேருந்துகளில் பிரயாணம் செய்கின்ற யுவதிகள் தொடர்பில் அப் பேருந்துகளின் நடத்துநர்கள் கொண்டுள்ள அக்கறை பாராட்டிற்குரியது. ஒவ்வொரு பிள்ளையும் பேருந்தை விட்டு இறங்கும் போது அவர்களை அழைத்துச் செல்வதற்காக அவர்களின் தாய் தந்தையரோ அல்லது உறவினர்களோ பேருந்து நிலையத்திற்கு வந்திருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்கு அவர்கள் பின்நிற்பதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)



தேவரையாளி இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்ட ஆரம்ப கற்கை நிலையம் விஞ்ஞான ஆய்வுகூடம், தொழில்நுட்ப கட்டடம் என்பன நேற்று முன்தினம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டன. இதில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் கலந்து கொண்டதுடன் வடக்கு மாகாண கல்வியமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-மகாலிங்கம்)




## நலம்தா அம்மா

நயினையில் வீற்றிருக்கும் நாகபூஷணித் தாயே
நல்லதல்லாம் எமக்களிப்பாய் அன்னை பராசக்தி
சக்தியாக வரமளிக்கும் அன்னை மகமாயி
சரவணனின் தாயல்லவோ அம்மா நாகதேவி
அடியவர் தொழுதேத்த அருளும் எங்கள் தாயே
அடியெடுத்துத் தொழுகின்றோம் பாரேன் அம்மாதாயே
பார்புகழும் நயினையில் எழுந்தருளி வந்து
பார்த்திடுவாய் எங்கள்முகம் நயினைத்தாயே
சீர்பெருகு பாட்டெடுத்துப் பாடுகின்றோம் தேவி
சீரான வாழ்வைத்தந்து எமைக்காப்பாய் அம்மா

நா.சண்முகரத்தினம்
இளைப்பாறிய அதிபர் மறவன்புலோ.

## "நயினையுறை நாயகியே எங்கள் நாகபூஷணியே"

நயினையுறை நாயகியே
எங்கள் நாகபூஷணியே
நாகமது குடைபிடிக்கும்
எங்கள் நாகபூஷணியே
நாரணியே நான்முகியே
எங்கள் நாகபூஷணியே
நாளெல்லாம் காத்து நிற்கும்
எங்கள் நாகபூஷணியே

நயினை செல்வி.

## நலமருளும் தாயே

நயினைப்பதியுறையவளே நாகபூஷணித்தாயே
நலங்கள் தருபவளே நாளும் எமைக் காப்பவளே
பூரணியே புஷ்பவல்லியே புவிதனை ஆள்பவள் நீயே
நின்தாள் பணிந்தோம் நித்தியம் தருவாயே
கருணையின் வடிவே காந்தரூபியே
கடலலை மீது சயனிப்பவளே நிலமது வேண்டி
நிர்க்கதியான எம்மினம்
வாழ நிம்மதியை... தந்தருள்வாயே

க.நாகேஸ்வரா,சண்டிலிப்பாய்.



# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## ஆறுவது சினம்

**"தன்னை அறியத் தனக் கொரு கேடில்லை, தன்னை அறியாமல் தானே கெடு கின்றான்**

**தன்னை அறியும் அறிவை அறிந்த பின், தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந் தானே"**

தன்னை அறிவதும் ஒரு வகைப் பயிற்சி. அது ஒரு முயற்சி என திருமந்திரம் குறிப்பிடுகிறது. தன்னை அறிபவன் சினத்தை விலக்குவான். மனமெனும் மங்கல விளக்கை ஒளி பெறச் செய்ய சினம் எனும் கோபத்தை விரட்ட வேண்டும்.

ஒருவனுடைய நிழல் அவனுடன் தங்குவது போல, சினமும் உடலின் உள்ளும், புறமும் இருள் சூழ வைத்து மனதில் மாசாய் தங்கி விடும்.

**சினம் என்னும் கோபம்**

உடலுக்கும், மனதுக்கும் கேடு செய்யும் தேவையற்ற வெளிப்பாடேயாகும். அடக்க முடியாத கோபத்தில் இருந்து ஒருவன் விலகி இருந்தால் ஞானியாவான் என விதுரநீதி கூறுகிறது.

சினம் தோன்ற பல காரணிகள் உண்டு. இயலாமை, ஆற்றாமை, தனிமை, வெறுமை, தாழ்வு மனப்பான்மை, ஏமாற்றம், கழிவிரக்கம், புறக்கணிப்பு, மன அழுத்தம் என இவையனைத்தும் சினம் ஏற்படுவதற்கு சாதகமான காரணிகள்.

ஒளவையார் இயற்றிய ஆத்திசூடியில் "ஆறுவது சினம்" என்கிறார். ஆறுவது என்றால் வெம்மையிலிருந்து குளிர்ந்த தன்மைக்கு கொண்டு வருவது. சினம் கொண்டால் உடல் நலிந்து மனிதநேயம் வற்றி இதயத்தை சீர்குலைத்து விடும்.

சினம் என்னும் கோபம் இல்லத்தை, உறவினை, சமுதாயத்தை, பின்பு நாட்டையே புற்று நோய் போன்று ஊடுருவி தீமை பயக்கும். ஒருவருடைய எண்ணத்திற்கும், ஆசைகளுக்கும் தடை வரும் நிலையில் சினம் தீவிரமாக உருவெடுக்கும்.

"சினம் என்பது சேர்ந்தாரை கொல்லி" என்பதுண்டு. சினம் தன்னையும் அழித்து சார்ந்தவர்களையும் அழித்து விடும். வெவ்வேறு சூழ்நிலையில் இருந்து வரும் ஆணும், பெண்ணும் திருமணம் என்னும் பந்தத்தால் இணைவர். அதனால் அவர்களின் எண்ணங்களும் செயல்களும் மாறுபட்டிருக்கலாம். இல்வாழ்க்கையில் பல்வேறு நிலைகளில் கருத்து வேறுபடும். அந்நிலையில் சொற்கள் முக்கிய பங்கு வகிக்கிறது.

**பொறுமை காத்தால்...**

சொற்களுக்கு உயிர் உண்டு. இனிய சொற்கள் உயிராய் நின்று இரு மனங்களை ஒன்றிணைக்கும். சினம் கொண்டு வரும் சொற்கள், விவாதத்தை ஏற்படுத்தி வாழ்க்கைக்கே முற்றுப்புள்ளி வைத்து விடும். சினம் ஏற்படும் போது சிறிது நேரம் பொறுமை காத்து காரணத்தை விளக்கினால் மனம் மாறுபடும். "மனத்து விளக்கினை மானபட ஏற்றிச் சினத்து விளக்கினை செல்ல நெருக்கினால் மனமானா" என திருமந்திரம் கூறுகிறது.

மழை வேண்டுமெனில், கடல்நீர் ஆவியாகி வான் சென்று பொழிய வேண்டும். பழம் வேண்டுமெனில் விதை முளைத்து, மரமாகி கனி கொடுக்க வேண்டும். அனைத்திற்குமே கால இடைவெளி தேவைப்படும். அது போல சினம் கொள்ளும் போது கால இடைவெளி கொடுத்தால் மனம் அமைதியுறும். சினம் கொண்டு உடனே தீர்வு காண நினைப்பது, இடையூறை வரவழைக்கும்.

ஒரு வீட்டில் எப்போதும் தந்தைக்கும் மகனுக்கும் இடையே விவாதம் நடக்கும். ஒருநாள் தந்தை அமைதியாக மகனைப் பார்த்து, "வளர வேண்டிய பிள்ளை உனக்கு கோபம் வரக் கூடாது. கோபம் வந்தால் வீட்டின் பின் சுவரில் ஆணி அடி," என்றார். மகனும் கோபம் வரும் நேரம் சுவரில் ஆணி அடிக்க தொடங்கினான். நாளடைவில் ஆணி அடிப்பது குறைந்து கொண்டே வந்து பின் முற்றிலும் நின்றது. அதன் பிறகு மகனின் கோபமும் குறைந்து விட்டது. மகன் தந்தையிடம், "தனக்கு கோபம் தணிந்துள்ளதாக" கூறினார்.

உடனே தந்தை மகனிடம், "இப்போது நீ அடித்த ஆணியை எடுத்து விடு" என்றார். மகனும் அவ்வாறு செய்தார். பின்பு தந்தை மகனிடம், "ஆணியை எடுத்தவுடன், சுவரில் ஓட்டை இருக்கிறதே பார்த்தாயா" என்றார். மகனும் பார்த்ததாக கூறினான். அடித்த ஆணியால் சுவரில் ஓட்டை விழுந்ததை போல தான் சினத்தால் உருவாகும் சொற்கள், செயல்கள் மனதில் ஓட்டை எனும் மாறாவலியை ஏற்படுத்தி விடும். மனமானதால் அது சீர் செய்ய முடியாத வடுவாக மாறிவிடும் என்றார்.

**சினம் என்ற தீ:**

சினம் என்பது தீ போன்றது. சாதக பாதகங்களை நினையாது உடனே பற்றிக் கொள்ளும். சினத்தினால் ஏற்படும் உராய்வு வாழ்வில் பேராபத்தை உருவாக்கும். உறவுகள் எனும் விழுதை வேரறுத்து விடும். கூட்டுக்குடும்பத்தில் பெரியவர்கள் இருப்பதால், பிடிக்காத கருத்தை மற்றவர்கள் திணித்தாலும் இல்லத்தில் உள்ளவர்கள் மரியாதையின் பொருட்டு மௌனமாக இருப்பர். அதுவே பல இடையூறுகளுக்கு விடுதலை அளிக்கும். அதைக் கண்டு வளரும் குழந்தைகள் இல்லத்திலும், சமுதாயத்திலும் தேவையற்ற விவாதத்தில் ஈடுபட மாட்டார்கள். சிலர் சுதந்திரம் என்ற பெயரில் அர்த்தமற்ற காரணங்களுக்கு கோபம் கொண்டு சண்டையிட்டு தன்னையும், தன்னை சார்ந்தவர்களையும் நிம்மதி இழக்க வைப்பர். இதைக் கண்டு வாழ்வில் மலர வேண்டிய குழந்தைகளின் மனமும் சிதறி விடுகிறது. விட்டுக் கொடுக்கும் எண்ணம் இல்லாமல் போய்விடுகிறது. வாழ்வின் மொத்த மதிப்பும் இல்லறத் தலைவியின் கைகளில் உள்ளது என்று வள்ளுவம் உரைக்கிறது.

**"இல்லதென் இல்லவள் மாண் பானால் உள்ளதென் இல்லவள் மாணாக்கடை"**

அதாவது இன்றுள்ள பொருளியல் வாழ்வில் அகவியல் வாழ்வு சிதைவடைகிறது.

**சமுதாய தாக்கம்:**

தன்மானத்திற்கு இடையூறு வந்தால், நிலைப்பது தடைப்பட்டால், ஆசைகள் நிராகரிக்கப்பட்டால், அடக்கிவைக்கப்பட்டால், நேர்மறை எண்ணங்கள் மறைந்து, எதிர்மறை எண்ணங்கள் வளர்ந்து சினமாக உருவெடுக்கும். சமுதாயத்தில் உருவாகும் சினம் காட்டுத்தீயைபோன்றது. எங்கும் பற்றி எரியும். வாய்ச் சண்டை, வாய்க்கால் சண்டையாக முடியும். வீட்டுத் தகராறு, வீதித்தகராறாக மாறி விடும். சமுதாயத்தில் உணர்வுகளை மறைத்து வெற்று வார்த்தைகளை பிடித்து கொண்டு சினம் கொள்வதால் கலகமும், கலவரமும் ஏற்படலாம்.

**சிந்தனை திறன்:**

**"நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் பகையும் உளவோ பிற"**

ஒருவருக்கு பகைவன் சினமே. பாதகமான சினத்தை மாற்றினால் சாதகமான மனம் உருவாகும். மௌனம் தீவிரப்படும்போது சினத்தின் தாக்கம் குறையும். மன்னிக்கும் பண்பிருந்தால் சினம் தோன்றாது. கொதி நிலையில் இருக்கும் மனதை அமைதியாக்க வேண்டும். அடக்கி வைக்கும் சினமும், உடலில் பல நோய்களை உருவாக்கும்.

ஓமோன் அதிகளவில் சுரந்து முக்கியமாக சிறுநீரகம், இதயம் இரண்டையும் பாதிக்கும். இதயத்தில் படபடப்பும், உடலில் நடுக்கமும் தோன்றும்.

**பொறுமை அவசியம்:**

சினம் ஏற்பட்டால் அதை அடக்காது, மாற்றும் வழியை திறமையுடன் கையாளலாம். பொறுமையுடன் இருக்க பயில வேண்டும்.

இப் பயிற்சியே, முயற்சியின் முதல் படி. அதை அயர்ச்சி அடையாது தொடர வேண்டும். பேசாதிருப்பது தீர்வல்ல தீர்வு காண அமைதியான முறையில் சொற்களை தேர்ந்தெடுத்து பேச வேண்டும். சினத்தால் என்ன விளைவு ஏற்பட்டது என்பதை பொறுமையுடன் சிந்தித்து சீர் செய்ய வேண்டும்.

எங்கு சினம் உருவாகியதோ அந்த இடத்தை விட்டு அகன்று, பிடித்த செயலில் கவனத்தை திருப்ப வேண்டும். ஆழ்ந்த மூச்சால் சினம் கட்டுப்படும்.

சினத்தை தணிப்பதற்கு குறிப்பிட்ட யோகாப் பயிற்சிகள் உள்ளது. கோபம் நம்மை கையாளக் கூடாது. கோபத்தை நாம் கையாள வேண்டும் என்பதே ஆளுமைத் திறனாகும்.

பயன் என்னும் இலக்கை நோக்கி பயணிக்கும் போது பயனற்ற சினத்தைத் தவிர்ப்பதில் நன்மையே.

காலிங்கராசா ஹரிச்சந்திரா
தொழில்நுட்ப அலுவலர்,
மீன்பிடியியல் விஞ்ஞானத்துறை,
விஞ்ஞான பீடம், யாழ்.
பல்கலைக்கழகம்

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 208**

சரியான விடை:-..............................

முழுப்பெயர்:-..............................

முகவரி:-..............................

தொ.பே. இல:..............................

கையொப்பம்:..............................

**புதிர் 207 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

மு.கிருஷா,
150, வீட்டுத்தோட்டம்,
முடக்கொம்பன், பூநகரி.

**புதிர் 207க்கான கேள்வியும் விடையும்:**

உலக உயிர்ப்பல்வகைமை (International Day of Bio diversity) எப்போது கொண்டாடப்படுகிறது?

**May 22**

## வாரத்திற்கு ஒரு புதிர்! 208

பின்வருவனவற்றில் பச்சை வீட்டு வாயு அல்லாதது?

1. மெத்தேன் 2. நைட்ரஸ் ஒக்சைட்
3. காபன் டை ஒக்சைட் 4. ஐதரசன்

Dr. வி.சா.துளசிதா
விலங்கியல்துறை,
விஞ்ஞானபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

புதிர் 208 இற்கான விடைகளை 25.06.2018 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 110 | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 140 | 115 | 140 | 110 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 250 | 300 | 160 |
| தக்காளி | 160 | 300 | 200 | 280 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 50 | 40 |
| கோவா | 160 | 200 | 60 | 120 | 120 |
| கரட் | 200 | 400 | 200 | 400 | 280 |
| பூசணி | 40 | 40 | 20 | 40 | 35 |
| புடோல் | 100 | 120 | 70 | 120 | 120 |
| வாழைக்காய் | 80 | 40 | 35 | 80 | 40 |
| சின்ன வெங்காயம் | 160 | 200 | 110 | 160 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 | 120 | 100 |
| பாகற்காய் | 250 | 400 | 140 | 250 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 80 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 120 | 65 | 100 | 60 |
| பயற்றங்காய் | 150 | 160 | 120 | 160 | 200 |
| லீக்ஸ் | 300 | 400 | 210 | 400 | 300 |
| பீற்றூட் | 120 | 140 | 60 | 150 | 100 |
| கறிமிளகாய் | 250 | 400 | 70 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 130 | 300 | 200 |
| போஞ்சி | 250 | 400 | -- | 400 | 200 |
| கத்தரிதம்புள்ள | 140 | 100 | -- | 160 | 140 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 30-80 | 30-60 | 50-70 | 70 |
| இராசவள்ளி | 180 | 200 | -- | 280 | 150 |
| வெங்காயப்பூ | 300 | -- | -- | 280 | 250 |
| முள்ளங்கி | 100 | -- | 40 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 45 | 50 | 10 | 40 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 120 | -- | 100 | 100 |

நக்கினவன் நாவிழுந்தான்.

~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## துரியோதனா! நீ செய்வது மாதவறு என்று வீஷ்மரால் சொல்ல முடியவில்லை

துரியோதனின் கட்டளைப்படி பாஞ்சாலி கௌரவர் சபைக்கு அழைத்து வரப்படுகிறாள். அவளை மானபங்கப்படுத்த துச்சாதனன் தயாராகிறான்.

அந்தோ! சபையில் இருந்த அத்தனை பேரும் துரியோதனின் செயல் கண்டு குமுறுகின்றனர். எனினும் துகிலுரிதலைத் தடுக்க யாரும் துணிந்திலர்.

படைத் தளபதியாகிய வீஷ்மரேனும் துச்சாதனா! உன் செயலை நிறுத்து. இல்லையேல் என் வில்லுக்கு நீ இரையாகுவாய் என்று கர்ச்சித்திருக்க வேண்டும்.

ஆனால் பிதாமகரோ மௌனமாகவே இருந்தார். வீஷ்மர் மௌனம் காக்கும்போது – மற்றையவர்கள் துரியோதனனைக் கண்டிப்பதென்பது சாத்தியமற்றது.

கௌரவர் சபையில் ஒரு பெண்ணின் துகிலை கலைந்து அவளை மானபங்கப்படுத்தும்போது, குரல் கொடுக்காதவர்கள் பின்னாளில் கண்டிப்பதால் எந்தப் பிரயோசனமும் ஏற்படப் போவதில்லை.

ஆக, துரியோதனன் செய்த மிகப்பெருங் கொடுமையை வீஷ்மர் கண்டிக்கத் தவறியது ஏன்?

துரியோதனனுக்கு அவர் பயந்து போனாரா என்றால் அதுதான் இல்லை. வில்வித்தையில்; போர்க்கலையில் வீஷ்மருக்கு நிகர் யாருமில்லை. இதற்கு மேலாக வீஷ்மர் ஒரு துறவி.

ஒரு இராச்சியத்தில் படைத்தளபதியாக இருப்பவர் துறவியாயின் அவர் எவர்க்கும் அஞ்சமாட்டார். துறவிக்கு வேந்தன் துரும்பு என்ற பழமொழி நம் தமிழ் மொழியில் உண்டு.

இவ்வாறாக நிலைமை இருக்கையில், வீஷ்மர் மௌனம் காத்தார் என்றால், அதற்கு வலுவான காரணம் இருக்க வேண்டும்.

அந்தக் காரணம் என்ன என்றால்? துரியோதனனின் உணவை உண்டதுதான் ஒரே காரணமாகும்.

ஆம், ஆட்சியில் இருக்கக்கூடிய கௌரவர் தலைவன் துரியோதனன் இட்ட சோற்றை உண்டதனால் அவனுக்கு எதிராக கதைப்பதும் போர் தொடுக்க நினைப்பதும் அறமன்று.

அதாவது ஒருவரிடம் கடன்பட்டுவிட்டால் – கடமைப்பட்டுவிட்டால் – அவர் சார்ந்த நீதி உணரப்படுவதென்பது சாத்தியமாகாது.

இந்த நிலையே பிதாமகர் எனப் போற்றப்பட்ட வீஷ்மருக்கு ஏற்பட்டது. இந்த நிலைமை பற்றி இப்போது எதற்காக ஆராய்கிறீர்கள் என்றால் எல்லாம் காரணத்தோடுதான்.

ஆம், ஈழத் தமிழினம் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்ற நிலையில், வன்னிப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் உறவுகளை இழந்த நிலையில் கூட தமிழினம் சார்ந்த அரசியல் தலைமை வாய்திறந்து கதைக்க முடியாத அளவில் உள்ளது.

ஏன்! அப்படி என்று யாரேனும் வியந்து கேட்டால், அவர்களும் வீஷ்மரின் நிலைமையில் இருப்பதுதான் காரணம் என்பதே பதிலாகும்.

## கல்வியில் வடக்கு ஒன்பதாம் இடத்தில்

### இராதாகிருஷ்ணன் வருத்தம்

(கரணவாய்)

கல்வியில் வடமாகாணம் தொடர்ந்தும் ஒன்பதாம் இடத்தில் இருப்பது வருத்தத்திற்குரிய விடயம் என கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

மு/தேவரையாளி இந்து கல்லூரியில் நேற்று முன்தினம் மூன்று கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அவர மேலும் தெரிவிக்கையில்,

ஒரு வசதியும் இல்லாத காலத்தில் வடமாகாணம் கல்வியில் முதலாம் இடத்தை பிடித்திருந்தது. ஆனால் இன்று ஒன்பதாவது இடத்திற்கு சென்றுள்ளது. இதற்கான காரணம் கண்டறியப்பட வேண்டும்.

முப்பது வருட யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்தீர்கள்.

இந்த முப்பது வருட யுத்தத்திலே யாழ்.மாவட்டம் பௌதிக வளங்கள் இல்லாமல் இருந்தது.

ஏனைய மாவட்டங்கள் அவ்வாறு அல்லாது வளர்ந்து இருக்கிறது.

அவ்வாறு அவர்கள் வளர்ந்ததை எட்டிப் பிடிப்பதற்கு நீங்கள் விரைவாக வர வேண்டும்.

வடமாகாணத்தில் முப்பது வருட யுத்தம் என்று தெற்கில் அபிவிருத்தி நடக்காமல் இல்லையே எனவும் சுட்டிக் காட்டினார். அந்த எல்லையை பிடிக்கும் சந்தர்ப்பம் அதிபராலும் ஆசிரியராலுமே முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

## மஹோற்சவம் ஆரம்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய (பேச்சிஅம்மன்) வருடாந்த மஹோற்சவம் நேறறு முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறவுள்ள மஹோற்சவ நிகழ்வில் 23 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 8மணிக்கு மஞ்சமும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு சப்பறமும் 27 ஆம் திகதி புதன்கிழமை 10.30 மணிக்கு தேரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (இ-7)

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(குருமன்காடு)

வவுனியா பாவற்குளம் கணேசுவரா மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கப பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

எனவே அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (2-250)

## வீட்டுக் கூரை மரம் விழுந்து ஒருவருக்கு தலையில் காயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கைதடிப் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் வீட்டு கூரை வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒருவர் மீது தவறுதலாக கூரை மரம் விழுந்ததில் தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கைதடிப் பகுதியைச் சேர்ந்த மு.சாந்தரூபன் (வயது 34) என்பவரே இவ்வாறு சிகிச்சை பெற்று வருகிறார். (இ-7)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### தவறு, தவறல்ல

யார் ஒருவரை தவறை தவறாகக் காணாதவரோ அவர்தான் ஆசீர்வதிக்கப்பட்டவர்.

நீங்கள் புதிதாக ஒரு தவறைச் செய்யும் போது அது ஒரு தவறு அல்ல. நீங்கள் சிறந்த படிப்பினையைக் கற்றிருக்கிறாகள. ஆனால நங்கள அதே தவறைத திரும்பத் திரும்பச் செய்யும் போது அது ஒரு பெருந்தவறாகிறது.

நாளடைவில் தவறானது உங்களுக்கு துன்பத்தைத் தருவதாகும். ஆகவே தெரிந்து ஏன் ஒருவர் தவறைச் செய்யவேண்டும்? "தவறு" என்பதன் பொருள் என்ன? "நீ செய்த காரியத்திலிருந்து விளைந்த பாடத்தைக் கற்கத் தவறி விட்டீர்கள்" என்பதே (missed taking) ஆகும. செயத தவறை எண்ணிப் புலம்பாமல் அதிலிருந்து பாடத்தை மாத்திரம் தெரிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் செய்த தவறை நீங்கள் அறியாமலிருப்பது சற்றுக் கடினமே. தவறு இதனால் ஏற்பட்டது என்று புறத்தே நீங்கள் ஏதாவது காரணம் காட்டலாம். மற்றவர்களிடம் அறியாத்தனத்திற்காக் வருந்தலாம். ஆனால் நீங்கள் செய்த தவறு உங்களுடைய மனச்சாட்சியை உறுத்துகிறது. (தொடரும)

## அரசியல் சிந்தனை நூல் வரிசை பத்து சிறு நூல்கள் வெளியீடு

அரசியல் சிந்தனை நூல் வரிசையில் பத்து சிறுநூல்கள் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை நாவலர் மணடபத்தில் அருட்தந்தை மா. சக்திவேல் தலைமையில் இடம்பெறும்.

இந்நூல்களின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைகழக வரலாற்றுத் துறைத் தலைவர் செ.கிருஷ்ணராஜா நிகழ்த்துவார். (இ)

## இளைஞர் விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச இளைஞர் விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மணற்காடு சென். அன்ரனிஸ் மைதானத்தில் பிரதேச இளைஞர் கழக தலைவர் அ.ஆனந்தபவன் தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் தங்கவேலாயுதம் ஐங்கரன் கலந்து கொள்வார். (இ-7,60)

## டெங்கின் தாக்கம் தீவிரம்

வடமராட்சிப் பகுதியில் டெங்கின் தாக்கம் தீவிரமாக அதிகரித்து வருவதனால் பொதுமக்களை விழிப்புடன் இருக்குமாறு கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி எஸ். சுதோஸ்குமார் கோரியுள்ளார்.

டெங்கின் தாக்கம் வெகுவாக குறைந்திருந்த நிலையில் அண்மையில் பெய்த மழையினால் டெங்கின் தாக்கம் தீவிரமாகப் பரவி வருகிறது.

இதனால் வைத்தியசாலையில் நாளுக்குநாள் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

எனவே நுளம்பு பெருகக் கூடிய இடங்களை இனம் கண்டு அவற்றை அழித்து டெங்கின் தாக்கத்தில் இருந்து பொதுமக்களை பாதுகாத்துக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (இ-60)

## மஹோற்சவம் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி செல்லக்கதிர்காம முருகன் திருக்கோயில் மஹோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 நாட்கள் இடம்பெற்வுள்ளன.

எதிர்வரும் 25ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 26 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 27ஆம் திகதி தீர்த்த உற்சவமும் மறுநாள் திருக்கல்யாண உற்சவமும் இடம் பெறவுள்ளன. (இ-7)

### அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## கற்பூரம் ஏற்றப்படுவதன் நோக்கம் என்ன?

நம முனனோர சாஸததிர சமபரதாயஙகளுககு அதிகம் முக்கியத்துவம் கொடுத்து வந்தார்கள்.

நமது இந்து மத சம்பிரதாயங்களில் கற்பூரத்திற்கு முக்கிய பங்கு உண்டு.

கற்பூரம் என்பது ஒரு விநோதமான ஐதரோகாபன் பொருள். இதை எரிக்கும்போது பதங்கமாதல் என்னும் முறையில் எரிகிறது.

**கறபு,ரம ஏறறபபடுவது எதறகாக?**

கற்பூரமாவது எரிக்கப்படும் போது அது ஒளியாகி காற்றில் கரைந்துவிடுகிறது. அதன் மிச்சம் என்பதே இருக்காது. அதுபோல நாமும் நம்முடைய இப்பிறவி யின் மசச சொசசம இலலாமல, இறைவனோடு இரணடறக கலக்கும் பக்குவநிலையை அடையலாம் என்பதற்காக கற்பூரம் ஏற்றப்படுகின்றது. (தொடரும்)




### இறைவனிடம் கேளுங்கள்

✦ மனிதர்கள் செய்த உதவியைச் சிந்திப்பதை விட இறைவன் செய்த உதவியை சிந்தனை செய்யுங்கள்.

✦ மற்றவர்களின் குற்றங்களை நோட்டமிடுவதை விட உங்களின் குற்றங்களை நோட்டமிடுங்கள்.

✦ உன் வாயிலாக, இறைவன் ஒரு மனிதனுக்கு நேர்வழி காட்டுவது இவ்வுலகத்தையும் இதிலுள்ள யாவற்றையும் விட உனக்கு நன்மை பயப்பதாகும்.

✦ எவர் அண்டை வீட்டாரைத் துன்புறுத்துகின்றாரோ அவர் என்னைத் துன்புறுத்தியவராவார்.

✦ தர்மம் செய்ய இயலாதவன் ஒரு நற்செயல் செயவானாக அலலது ஒரு கெடட செயலில இருநது விலககி கொள்வானாக. அதுவே அவனது ஈகை.

✦ உங்களை நம்பி ஒருவன் ஒரு செய்தியைச் சொன்னால், அதை அடைக்கலப் பொருள் போல பாதுகாத்து வையுங்கள்.

✦ எவர் ஒருவர் இறைவனிடத்தில் தேவையானதை கேட்கவில்லையோ அவர் மீது இறைவன் கோபம் அடைகின்றான்.

### தர்ம முழக்கம் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

# முழங்காவில் மகா வித்தியாலயம்-தர்மபுரம் மத்திய கல்லூரி

## இன்று பலப்பரீட்சை





கிளிநொச்சி மாவட்டத்தின் பாடசாலைகளாக முழங்காவில் மகா வித்தியாலயம் மற்றும் தர்மபுரம் மத்திய கல்லூரி ஆகியவற்றின் 19 வயதுப்பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் வருடாவருடம் இடம்பெறும் தர்மமுழக்கம் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் நானகாவது பருவகாலப் போட்டி இன்று முழங்காவில் மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகிறது.

மட்டுப்படுத்தப்படாத ஓவர்களைக் கொண்டு, இரண்டு நாட்கள் நடைபெறும் இந்தப் போட்டியானது, கடந்த 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, இந்த வருடத்துடன் நான்காவது வருடமாக நடத்தப்படவுள்ளது.

இரண்டு பாடசாலைகளின் கிரிக்கெட் வீரர்களின் திறனை மேம்படுத்தவும், வீரர்களுக்கிடையில் நட்புணர்வு, நேர்மை என்பவற்றை வளர்க்கும் பொருட்டும் இந்தப் போட்டியானது ஒழுங்கமைத்து நடத்தப்படுகின்றது.

ஆரம்பிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டு மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் தர்மபுரம் மத்திய கல்லூரி அணி வெற்றியைப் பெற்றது. கடைசியாக 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் முழங்காவில் மகா வித்தியாலய அணி, 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றிருந்தது.

இந்நிலையில், இம்முறைப் போட்டியானது நடைபெறுகின்றது. வெற்றி எண்ணிக்கையை அதிகரித்து, தர்ம முழக்கத்தில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற உத்வேகத்துடன், தர்மபுரம் மத்திய கல்லூரியும், வெற்றி எண்ணிக்கையைச் சமப்படுத்தி கடந்த வருட வெற்றியையும் தக்க வைக்கும் நோக்கில் முழங்காவில் மகா வித்தியாலய அணியும் களமிறங்குகின்றன.

**முழங்காவில் மகா வித்தியாலயம்**

முழங்காவில் மகா வித்தியாலயம், கனகரட்ணம் கஜனின் நேர்த்தியான, இளமைத் துடிதுடிப்பான பயிற்றுவிப்பின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த முறை முழங்காவில் வெற்றியைப் பெற காரணமாகவிருந்த முன்னாள் அணியின் பயிற்றுவிப்பாளர் சற்குணராஜா துஸ்யந்தனிடம், பயிற்சி பெற்று வளர்ந்த, பயிற்றுநராக கனகரட்ணம் கஜன் உருவாகியுள்ளார்.

அணி இம்முறை சகலதுறை வீரர் கே.கிருஸ்ணராஜ்ஜின் தலைமையில் களமிறங்குகின்றது.

ரி.ஜெயந்தன் (அணி உபதலைவர், சகலதுறை வீரர்), வி.சதுஜன் (துடுப்பாட்ட வீரர்), எஸ்.தனுஜன் (துடுப்பாட்ட வீரர்), ரி.நிதர்சன் (விக்கெட் காப்பாளர், மற்றும் துடுப்பாட்ட வீரர்), எஸ்.டினோஜன் (சகலதுறை வீரர்), ரி.றஜீவன் (சகலதுறை வீரர்), எஸ்.சிலம்பரசன் (சகலதுறை வீரர்), எம்.பவிதரன் (துடுப்பாட்ட வீரர்), எம்.எழிலரசன் (பந்து வீச்சாளர்), ஜி.தனுஜன் (பந்து வீச்சாளர்), யு.சாரங்கன் (பந்துவீச்சாளர்), பிறின்சன் (பந்துவீச்சாளர்), எல்.மதுசன் (துடுப்பாட்ட வீரர்), எஸ்.சஜீதரன் (துடுப்பாட்ட வீரர்) ஆகிய வீரர்கள் அணியை வலுவூட்டுகின்றனர்.

**தர்மபுரம் மத்திய கல்லூரி**

ஞா.யோகீசனின் சிறப்பான, அனுபவம் மிக்க பயிற்றுவிப்பின் கீழ், சிறப்பாக அணி உருவாக்கப்பட்டுள்ளது. அ.லோகேந்திரனின் தலைமையில் அணி களமிறங்குகின்றது.

அணியை மேலும் பலம் சேர்க்கும்வகையில் க.ரொசான் (அணியின் உப தலைவர்), த.ஜீவிதன், க.நிவேந்திரன், த.பிரணவன், ஜெ.சுபேசன், நா.நிலக்சன், நா.யதுசன், கு.யசிந்தன், கு.சர்மிளன், த.எப்சியன், ப.துஸ்யந்தன், சு.டானியல், த.பானுசன், சி.பிரதீபன், சதீசன், க.தரணீதரன் ஆகியோர் உள்ளனர். அணியின் முகாமையாளராக ம.சசிக்குமார் உள்ளார். (க-26)

# வடக்கு-கிழக்கு பிறிமியர்லீக் வல்வை எப்.சி. அபார வெற்றி



வடக்கு-கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக்கின், இரண்டாவது லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் கடந்த 13 ஆம் திகதி புதன்கிழமை இரவு நடைபெற்ற ஆட்டத்தில் வல்வை எப்.சி. அணியை எதிர்த்து கிளியூர் கிங்ஸ் அணி மோதியது.

முதற் பாதியாட்டத்தில் வல்வை அணிக்கு சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. அதனை அவ் வணியின் தலைவர் செ.ஞானரூபன் கோலாக மாற்றினார். வல்வை எப்.சி அணியின் கிசான் இரண்டாவது கோலை அடித்தார். முதற்பாதியாட்டம் அந்த இரண்டு கோல்களுடன் நிறைவுக்கு வந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் வல்வை எப்.சியின் அணித்தலைவர் செ.ஞானரூபனுக்கு சிவப்பு அட்டை காட்டப்பட்டது. இரண்டாவது பாதியாட்டத்தில் வல்வை எப்.சி. அணி மேலும் ஒரு கோலை அடித்தது. அந்தக் கோலை எம். பிறேம்குமார் அடித்தார்.

முடிவில் வல்வை எப்.சி அணி, 03:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. போட்டியின் நாயகனாக வல்வை எப்.சி அணியின் எம்.பிறேம்குமார் தெரிவு செய்யப்பட்டார். (க-26)



யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் மைலிட்டி திருவள்ளுவர் விளையாட்டுக்கழகம் நடத்திய மாபெரும் தாச்சிப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது. இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் செந்தசிறி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆனைக்கோட்டை சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதியது. மிகவும் விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில் 06:05 என்ற புள்ளி அடிப்படையில் சண்டிலிப்பாய் செந்தசிறி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. (2)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

கல்வியங்காடு நொதேர்ன் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி அணிக்கு 7 பேர் 6 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இப்போட்டிகள் அனைத்தும் நொக்கவுட் முறையில் நடைபெறும்.

முதலாம் இடத்தைப் பெற்று சம்பியன் பட்டத்தை வெல்லும் அணிக்கு வெற்றிக்கிண்ணத்துடன் 25,000 ரூபா பணப்பரிசும் இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு 15,000 ரூபா பணப்பரிசும் மூன்றாம் இடத்தைப் பெறும் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் 076 652 6109, 077 345 4865, 077 430 8204 என்ற எண்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளையும் போட்டி விதிமுறைகளையும் அறிந்து கொள்ள முடியும் என விளையாட்டுக்கழக தலைவர் அறிவித்துள்ளார். (க)

# முதன் நாளில் முதல் பாதியில் சதம்- தவான்



நேற்று தொடங்கிய ஆப்கானிஸ்தானுக்கு எதிரான இந்திய அணியின் டெஸ்ட் போட்டியில் முதல் நாளில் முதல் பாதிலேயே சதமடித்து அசத்தியுள்ளார் ஷிகர் தவான்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அணித் தலைவர் ரஹானே துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

இதனையடுத்து தொடக்க வீரர்களாக முரளி விஜய், ஷிகர் தவான் களமிறங்கினர். இந்தியா முதல் 13 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 63 ஓட்டங்கள் எடுத்தது.

தொடர்ந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய ஷிகர் தவான் 47 பந்துகளில் ஒரு சிக்ஸர், 10 பவுண்டரிகளுடன் அரை சதமடித்தார்.

119 பந்துகளில் 100 ஓட்டங்களை எட்டிப்பிடித்து வலுவான ஓட்டங்களை எடுத்தார், சிக்ஸரும், பவுண்டரிகளுமாக விளாசிய தவான் 87 பந்துகளில் சதத்தை எட்டினார்.

இதன்மூலம் முதல் நாளில் முதல் பாதியிலேயே உணவு இடைவேளைக்கு முன்பாக சதமடித்த ஆறாவது இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார். (க)

# கருணை அடிப்படையில் இல்லை தமிழரை பிரித்தாளும் கைங்கரியம்

## அரச படைகளின் திட்டம் குறித்து கஜேந்திரகுமார்

(யாழ்ப்பாணம்)

அரசினதும் அதன் படைகளினதும் திட்டங்களையும் நோக்கங்களையும் தமிழ் மக்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக அண்மையில் இடமாற்றம் பெற்றுச் சென்ற கிளிநொச்சி சிவில் பாதுகாப்புத் திணைக்கள பொறுப்பு அதிகாரி உள்ளிட்ட படைத் தரப்பினர் செய்கின்றவை எல்லாம் கருணை அடிப்படையில் இல்லை என்ற உண்மை நிலைமையையும் மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இவையெல்லாம் ஒவ்வொரு திட்டங்களிற்கமைய செயற்படுத்தப்படுகின்றதென்பதை புரிந்து கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மேலும் தெரிவித்ததாவது.

இலங்கை அரசாங்கம் தமிழர் தரப்பை பிரித்து தமிழர் தேசியத்தை சிதைத்து அழிக்கும் தீவிர செயற்பாட்டை திட்டமிட்டு முன்னெடுத்து வருகின்ற நிலையில் அந்த அரசிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக முண்டு கொடுத்து வருகின்றமை வேடிக்கையானது எனவும் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடந்த ஊடக சந்திப்பின் போதே கஜேந்திரகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் சிவில் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரி ஒருவருக்கு இடமாற்றம் வந்த போது அவருக்கு இடமாற்றம் வேண்டாமென்றும் அவரை தொடர்ந்தும் அங்கேயே வைத்திருக்க வேண்டுமென்றும், அவரது இடமாற்றத்திற்கான பிரிவுபசார நிகழ்வு கவலைக்குரிய நிகழ்வென்றும் முன்னாள் போராளிகள் அழுததாகவும் ஊடகங்களில் பார்த்திருக்கின்றோம்.

தமிழின அழிப்பில் பங்கெடுத்து கட்டளையிடும் உயர் பதவியில் இருந்த இராணுவ அதிகாரிகள் இன்னமும் அந்த இனவழிப்பிற்கு பொறுப்புக்கூறல் நடக்கவில்லை. அவ்வாறு எந்தவித பொறுப்புக் கூறலும் நடக்காதிருக்கையில் அத்தகைய படையதிகாரி ஒருவருக்காக போராளிகள் அழுதமை எமக்கும் கவலையை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஆயினும் அந்த விடயங்களை நாங்கள் இன்னொரு பக்கத்திலிருந்தும் பார்க்க வேண்டியது மிக அவசியமானது. அதாவது ஏன் அவ்வாறு நடந்தது. இந்த நிலைமைகள் எவ்வாறு யாரால் ஏற்படுத்தப்பட்டன என்பதை ஆழமாக நோக்க வேண்டும். குறிப்பாக புனர்வாழ்வு நிலையங்களில் போராளிகள் மிக மோசமாக அடிமைப்படுத்தப்பட்டு துன்புறுத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அத்தோடு அவர்கள் அங்கிருந்து வெளியே வருகின்ற கால சூழலில் இராணுவ அச்சுறுத்தல் மேலோங்கியிருந்தது.

இவ்வாறு மக்கள் மத்தியில் பயப்பீதி உருவாக்கப்பட்டிருந்தது. அதேபோன்று முன்னாள் போராளிகள் மத்தியிலும் பல்வேறு அழுத்தங்களும் அச்ச உணர்வுகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இதனூடாக முன்னாள் போராளிகளை மக்களிடமிருந்து நடுத்தெருவில் விடுவது தான் அரச தரப்பின் திட்டமாகவும் இருந்தது. அதனூடாக ஒரு வேலையைக் கொடுத்து அவர்களை தங்கள் வசப்படுத்தி வைத்திருப்பதும் நோக்கமாக இருந்தது.

ஆகவே அரசினதும் அதன் படைகளதும் திட்டங்களையும் நோக்கங்களையும் தமிழ் மக்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக அந்த படை அதிகாரி உள்ளிட்ட படைத் தரப்பினர் செய்கின்றவை எல்லாம் கருணை அடிப்படையில் இல்லை என்ற உண்மை நிலைமையையும் மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இவையெல்லாம் ஒவ் வொரு திட்டங்களிற்கமைய செயற்படுத்தப்படுகின்றதென்பதை புரிந்து கொள்கின்ற அதே வேளையில் இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டதற்கான பொறுப்பை நாங்களும் ஏற்க வேண்டும். அரசையும் அதன் படைகளான இராணுவத்தையும் கூட்டமைப்பின் தலைவர் உள்ளிட்ட சில பாராளுமன்ற உறுப்பினர்கள் புகழ்ந்து பேசியிருக்கின்றதையும் பார்க்க வேண்டும்.

இந்நிலையில் நாம் அனைவரும் மிகத் தெளிவாக ஒரு விடயத்தை விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகும். அதாவது தமிழ் மக்கள் மீது கருணை காட்டுவதாகவோ அல்லது நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதாகவோ காட்டிக் கொண்டு தமிழர்களைப் பிரித்தாளுகின்ற கைங்கரியத்தையும் தமிழர் தேசத்தை சிதைத்து இருப்பை அழிக்கும் முயற்சியிலும் அரசு தன்னுடைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்கு நல்லாட்சி என்ற பெயரில் கூட்டமைப்பினரும் முண்டு கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். ஆகவே நாம் எல்லாவற்றையும் புரிந்து கொண்டு தமிழர் தேசத்தைக் காப்பாற்றி தமிழர் இருப்பை தக்க வைக்க முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இணைந்து மேற்கொள்ள வேண்டும் என்றார். (இ-4)

# நுண்நிதிக் கடன் வழங்குவதை தடுத்து நிறுத்தத் தீர்மானம்

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் நுண்நிதிக் கடன் நிறுவனங்கள் கடன் வழங்குவதை தடுத்து நிறுத்துவது என வலி.மேற்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதுவரை கடன் வழங்கிய நிதி நிறுவனங்கள் கடன்களை பொதுமக்களுக்கு பாதிப்பில்லாத வகையில் மீள அறவிட வேண்டும் எனவும் அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதேச சபையின் நான்காவது பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை பிரதேச சபையில் தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது உறுப்பினர் ந.பொன்ராசா கொண்டுவந்த மேற்படி பிரேரணை அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தை முன்வைத்து உரையாற்றிய பொன்ராசா, வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தில் உள்ள மக்கள் நுண்நிதிக் கடன் நிறுவனங்களால் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர். சிலர் உயிரிழந்துள்ளனர். பலர் தற்கொலைக்கு முயன்று காப்பாற்றப்பட்டுள்ளனர். எனினும் அந்த நிறுவனங்கள் தமது செயற்பாட்டை நிறுத்தியதாக இல்லை. யுத்தத்தின் கோரப் பிடிக்குள் சிக்கி தமது உறவுகள், உழைக்கும் பிள்ளைகள், வீடுகள், சொத்துக்களை இழந்து பொருளாதாரத்தில் பின்னடைந்து கையறு நிலையில் நின்ற எமது மக்களை இலக்குவைத்து தமிழர் தாயகப் பகுதியில் நுண்நிதிக் கடன் நிறுவனங்கள் தமது செயற்பாட்டை ஆரம்பித்தன. குறிப்பாக, பெண் தலைமைத்துவக் குடும்பங்களே இவர்களின் முக்கிய இலக்காக இருக்கின்றன. ஏனெனில், கேள்வி கேட்பதற்கு யாரும் இல்லை, எப்படியும் அவர்களை வஞ்சித்து பணத்தைச் சுரண்ட முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. அடுத்த வேளை உணவுக்கு என்ன வழி என்று தெரியாமல் ஏங்கிக் கொண்டிருக்கும் குடும்பங்களின் வீடுகளுக்குச் சென்று உங்களுக்கு பணம் வேண்டுமா? எனக் கேட்டால் யார்தான் மறுப்புச் சொல்வார்கள்? எப்படிப் பணத்தைச் செலுத்துவோம், அதற்கான வழி என்ன என்பதைக்கூட ஆராய்வதற்கோ சிந்திப்பதற்கோ அவர்களால் முடியாது. ஏனெனில், தமது பிள்ளைகளின் பசிக்கு முன்னால் எவையும் பெரிதாகத் தெரியாது. உடனே கடனுக்கு விண்ணப்பித்து பணத்தைப பெறுவார்கள்.மேலும், சில பெண்கள் மேற்படி நுண்நிதிக் கடன் நிறுவனங்களிடம் பெற்ற கடன் பணத்தை தமக்கு நெருக்கமானவர்களுக்கு கைமாற்றாகவும் வட்டிக்கும் கொடுத்துவிட்டு இன்று அதனால் பாதிக்கப்பட்டு இருக்கின்றனர். கல்வியறிவில் பின்தங்கிய கிராமப்புறங்களிலேயே இந்தச் செயற்பாடுகள் அதிகமாக உள்ளன. நுண்நிதிக் கடன் நிறுவனங்களும் இந்தக் கிராமங்களை இலக்குவைத்தே தமது காரியங்களை நிறைவேற்றுகின்றன.

மேற்படி நுண்நிதிக் கடன் நிறுவனங்கள் திட்டமிட்ட ரீதியிலேயே வடக்கு-கிழக்கு மக்களை இலக்குவைத்திருக்கின்றன. இதுவும் ஒரு வகையில் தமிழ் மக்களை அடிமைப்படுத்தும் செயற்பாடே ஆகும். எனவே, இந்த அடிமைப்படுத்தலில் இருந்து எமது மக்களை மீட்டெடுக்கவும், எமது மக்களை வேதனைகளில் இருந்து பாதுகாக்கவும், அவர்களின் எதிர்கால நல்வாழ்வையும் கருத்தில்கொண்டு எமது பிரதேசத்தில் நுண்நிதிக் கடன் நிறுவனங்களின் கடன் வழங்கும் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் எனத் தெரிவித்தார். (இ-9)

## மன்னார் புதைகுழி...

ப்பில் வைத்திருப்பதாகவும் ஆய்வு செயற்பாடுகளுக்காக அனுப்பப்படும் போது தங்களின் மேற்பார்வையில் சுத்தமாக்கப்பட்டு உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் அதுவரை நீதிமன்ற காவலில் வைத்திருப்பதாகவும் விசேட.சட்ட வைத்திய நிபுணர் டபிள்யூ.ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ஷ மற்றும் களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ராஜ் சோம தேவா தெரிவித்தார்

மன்னாரில் நேற்று வியாழக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். (இ)

## ஜனாதிபதியின்...

மன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

எதிர்வரும் 18ஆம் திகதி 'சிறுவர்களைப் பாதுகாப்போம்' என்ற புதிய நிகழ்ச்சி திட்டத்தை ஆரம்பிப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா கிளிநொச்சி மாவட்டத் திற்கு வருகைதரவுள்ள நிலையிலேயே அவர் மேற் கண் டவாறு தெரிவித்துள்ளார்.

தனது மனைவியின் இறுதிச்சடங்கிற்காக சிறைச்சாலை பாதுகாப்புக்களுடன் வந்த ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் தந்தையுடன் இணைந்து சிறை வாகனத்தில் ஏறியமை உலகத்தின் கவனத்தையீர்த்தது. இதனையடுத்து ஆனந்த சுதாகரனை விடுதலை செய்து அவருடைய பிள்ளைகளுக்கு பாதுகாப்பு கொடுங்கள் என தமிழ் தேசிய கூட்டமைப்பு ஜனாதிபதியிடம் கேட்டிருந்தது. அதே போல் பல மனிதநேய அமைப்புக்களும் கேட்டிருந்தன.

ஆனாலும் அதனைக் கொஞ்சமும் கவனத்தில் கொள்ளாத ஜனாதிபதி, கிளிநொச்சியில் 4 ஆயிரம் பிள்ளைகளை வைத்து சிறுவர்களைப் பாதுகாப் போம்' நிகழ்ச்சி திட்டத்தினை ஆரம்பித்து வைப்பதற்காக கிளிநொச்சிக்கு வருவது வேடிக்கையாக உள்ளது. உண்மையில் ஜனாதிபதி சிறுவர்களை பாதுகாக்கும் நிகழ்ச்சி திட்டத்தை உள்ளார்ந்தமாக தொடங்குவதாக இருந்தால் ஆனந்த சுதாகரனை விடுதலை செய்து அவருடைய பிள்ளைகளுக்கு முதலில் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்றார். (இ)


"மனுக்குலம் உண்ணுகின்ற காய்கனிகளிற் பெரும்பங்கு மகரந்தம் காவுகின்ற தேனீக்களின் அன்பளிப்பு"

## தேனீக்கிராமம்

மகரந்தங்களைக் காவுவதன் மூலம் இயற்கைச்சூழலுக்கும் விவசாயத்துக்கும் பாரிய பங்களிப்பைச் செய்து வருகின்ற தேனீக்கள் விவசாய இரசாயனங்களினாலும் நகரமயமாக்கலினாலும் பேரழிவைச் சந்தித்து வருகின்றன.

இதனைக் கருத்திற்கொண்டு தேனீக்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தேனீ வளர்ப்பின் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தேனீக் கிராமம் என்ற திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

முதலாவது கிராமமாகக் கோண்டாவில் தெரிவு செய்யப்பட்டு, வடக்கு முதலமைச்சர் கௌரவ நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அவர்களால் தேனீக்கள் கிராமத் திட்டம் உலக சுற்றுச்சூழல் தினத்தன்று (ஜூன் 5ஆம் திகதி) ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தில் இணைந்து தேனீ வளர்ப்பை மேற்கொள்ள விரும்புகின்ற கோண்டாவிலை வசிப்பிடமாகக் கொண்ட ஆர்வலர்கள் அனைவரையும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் அலுவலகத்தில் அவர்களது விபரங்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- யாழ்மாவட்டத்தில் தேனீவளர்ப்பில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களையும் அவர்களது விபரங்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பதிவு செய்வதற்கான இறுதித் திகதி : 25-06-2018

பொ.ஐங்கரநேசன்
தலைவர்

**தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்**

இயற்கை, பண்பாட்டு மரபுவளப் பாதுகாப்பு மையம்
இல: 109, அரசடிவீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி : 0212214641
மின்னஞ்சல்: greentamils5@gmail.com

(சி-2929)


# சிமிழ் அம்மன் கோவில் தேர் J.C.B இயந்திரத்தால் இழுத்ததன் உண்மை நிலை

(வரணி)

வரணி வடக்கு சிமிழ் அம்மன் கோவில் தேர் J.C.B இயந்திரத்தால் இழுத்ததை சமூகப் பிரச்சினையாக சித்திரித்து செய்தி வெளியிட்டிருந்தமை தொடர்பில் உண்மை நிலையை பரிபாலனசபையினராகிய எமக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது.

இக்கோவில் திருவிழாக்களை இங்குள்ள எல்லாச் சமூகத்தினரும் சேர்ந்து சமஉரிமையோடு வருடாவருடம் நடத்திவருகிறோம். திருவிழாக்கள் ஒவ்வொரு சமூகத்தினருக்கும் தனித்தனி வழங்கப்பட்டிருக்கிறது. உபயகாரர் கோவிலுக்குள் தங்கள் விருப்பப்படி சென்று சகல பூஜை ஒழுங்குகளையும் தாங்கள் விரும்பிய படி நடத்தி வருகின்றனர்.

தேர்த்திருவிழாவை பொறுத்தளவில் இவ்வாண்டு புதிதாகச் செய்த தேரை அதன் வெள்ளோட்டத்தின்போது எல்லாச் சமூகத்தினரும் சேர்ந்தே இழுத்தனர். தேர்ப்பாதையில் உள்ள பெரும் குழிகள் பிரதேச செயலரின் அனுமதி பெற்று மண் ஏற்றிக்கொட்டப்பட்டிருந்தது. இக்கொட்டு மண்ணில் தேர்ச் சில்லுகள் புதைந்தமையால் தேர் சரிகின்ற அவல நிலை ஏற்பட்டது. கடும் சிரமத்தின் மத்தியில் பல தகரங்கள் கொண்டு வந்து போட்டு தேர் குடைசாயாமல் வெற்றிகரமாக இழுத்தெடுக்கப்பட்டது. அப்பொழுது தேர் கொட்டு மண்ணில் புதையாதவாறு உழவு இயந்திரம் மூலமாக இழுப்பதென்று யோசிக்கப்பட்டது. பின்பு உழவு இயந்திரம் இழுக்க மாட்டாது என்று கருதி J.C.B உபயோகப்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் ஏதாவது சமூகப்பிரச்சினை இருப்பின் அன்றே ஒரு சலசலப்பென்றாலும் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அன்று எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் ஒற்றுமையாக அன்னதான நிகழ்வு உட்பட எல்லா நிகழ்வுகளும் சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டது. பின்பு இந் நிகழ்வை பத்திரிகைகளில் சமூகப்பிரச்சினையாக தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. இவ்விடயம் எமக்கு பெரும் கவலையைத் தருகிறது என சிமிழ் அம்மன் கோவில் பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (இ)

## சிங்கள...

போது மகால் கந்த சுதந்த தேரர் ஊடகங்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

பௌத்த பிக்குகளுக்கு எதிரான நடவடிக்கைகள் முற்றாக ஒழிக்கப்படும் வரை எமது போராட்டத்தை நிறுதப்போவதில்லை. ஞானசார தேரர் கைது செய்யப்பட்டிருந்தாலும், எதிர்காலத்தில் அவர் இல்லாமல் போனாலும் அவரது குரல் என்றும் ஓயப்போவதில்லை.

ஞானசார தேரர் விரைவில் விடுதலை செய்யப்படுவார். அத ற்காக எந்த மட்டத்திலும் சென்று போராட நாம் தயாராகவுள்ளோம். எவ்வாறிருப்பினும் இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களுடைய செயற் பாடுகள் பற்றி பேசு வதை நிறுத்தப் போவது மில்லை. அதனை யாராலும் நிறுத்தவும் முடியாது எனவும் தேரர் மேலும் கூறினார். (இ)

## மேலதிக நடவடி...

நியமிக்க முடியும் என வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கு அறிவுறுத்திய யாழ். மேல் நீதிமன்றம், அவர் சார்பில் பிரதிநிதி ஒருவரை மன்றில் முன்னிலையாக நேற்று அனுமதியளித்தது.

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்கு தகுதியானவர்களை விண்ணப்பிக்குமாறு வடக்கு மாகாண பிரதம செயலாளர் அண்மையில் பத்திரிகை ஊடாக விண்ணப்பம் கோரல் விளம்பரத்தை வெளியிட்டார்.

பதில் அல்லது நிரந்தர கல்விப் பணிப்பாளராக தற்போது கடமையாற்றும் கல்வி வலயத்தில் 3 ஆண்டுகள் சேவையை நிறைவு செய்திருக்கவேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது.

இந்த நிபந்தனை சேவைப் பிரமாணக் குறிப்புக்கு முரணானதெனக் குறிப்பிட்டு யாழ்.தீவகம் வலயக் கல்விப் பணிப்பாளர் இளங்கோ, சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நீதிப் பேராணை மனுவைத் தாக்கல் செய்தார்.

எதிர் மனுதாரர்களாக முறையே வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண கல்வி அமைச்சர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்த மனு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, முதலாவது எதிர் மனுதாரரான வடக்கு மாகாண பிரதம செயலாளர் மன்றில் முன்னிலையாகவில்லை. அவர் சார்பில் உத்தியோகத்தர் ஒருவர் மன்றில் முன்னிலையாகினார். இந்த நிலையிலேயே எதிர் மனுதாரரான பிரதம செயலாளரை மன்றில் முன்னிலையாக மன்று நேற்று முன்தினம் கட்டளையிட்டிருந்தது.

அந்த வகையில் இந்த மனு நேற்று மன்றில் எடுக்கப்பட்டது. வடக்கு மாகாண பிரதம செயலாளர் மன்றில் முன்னிலையானார்.

மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் மனுவில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்படும் அதிகாரி மன்றில் தோன்றுவது அவசியம். மன்றின் அனுமதி பெற்று பிரதிநிதி ஒருவரை நியமிக்க முடியும் என்று மேல் நீதிமன்ற நீதிபதி அறிவுறுத்தினார். அத்துடன், பிரதம செயலாளர் தன் சார்பில் முன்னிலையாக நியமித்த பிரதிநிதிக்கு மன்று அனுமதியளித்தது. (இ-9)

## சட்ட சிக்கல் இல்...

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மக்களால் நிராகரிக்கப்பட்ட இரண்டு கட்சிகள் இணைந்து இன்று அரசாங்கம் அமைத்திருப்பதாகவும்,

சட்டச் சிக்கல் இல்லை என்றால் 2020-ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவது மக்கள் எதிர்பார்க்கும் தலைவரான மகிந்த ராஜபக்ஷ என்றும் அவ்வாறில்லா விட்டால் மகிந்த ராஜபக்ஷவால் கூறப்படும் நபருக்கு ஆதரவளிப்பதாகவும் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இரண்டு பக்கங்களிலும் கால் வைத்திருக்கும் நபர்கள் சம்பந்தமாக மக்கள் எதிர்காலத்தில் நல்ல தீர்மானமொன்றை எடுக்க வேண்டும் என்றும் பசில் ராஜபக்ஷ அறிவுரை கூறியுள்ளார். (இ)

## ஞானசார தேர...

கொடவின் மனைவியை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் கடந்த மே மாதம் அவர் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று தண்டனை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரகீத் எக்னெலிகொடவின் மனைவிக்கு இழப்பீட்டு தொகையாக 50 ஆயிரம் ரூபாய் வழங்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ)

## பனையிலிருந்து...

பிள்ளைகளின் தந்தையான சின்னையா அன்பரசு (வயது 58) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் நண்பகல் வீட்டிற்கு பின்புறமாக இருந்த பனை மரத்தில் ஏறி கீழே குதித்துள்ளார்.

அயலவர்கள் இவரை உடனடியாக மீட்டு மந்திகை வைத்திய சாலையில் அனுமதித்தனர், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று இரவு உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பில் யாழ் போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். (இ-9)

## தனியார் கல்வி...

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-9)

## மஸ்தான் இரா...

சின் பிரதி அமைச்சராக செயற்படுவேன் எனத் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கின் அபிவிருத்தி மற்றும் இந்து விவகார பிரதி அமைச்சராக ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இந்நிலையில் குறித்த பாராளுமன்ற உறுப்பினருக்கு இந்து விவகார பிரதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டமைக்கு எதிராக இந்து அமைப்புக்கள் உட்பட பலரும் எதிர்ப்பு வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-250-281)

## விடுதிக் கழிவ...

வளி, யூனியன்குளம் பகுதியை சேர்ந்த மயூரன் மதுபன் (வயது 14) என்ற மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று இரவு உணவு அருந்திய பின்னர் படுக்கைக்கு சென்றுள்ளார் பின்னர் 8.30 மணியளவில் விடுதியின் கழிவறையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இறப்புக்கான காரணம் கண்டறியப்படவில்லை. பொலிஸார் அவ்விடத்துக்கு சென்று சடலத்தை மீட்டதுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-9)

## யாழில் 23...

களில் 6 பேர் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய சந்தேக நபர்கள் நீதிமன்ற உத்தரவிற்கமைய தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)


சவுதி அல்மராய், கட்டாருக்கு மே மாதம் 9 பேர் தெரிவாகினர்!
ஜீன் மாத அணியில் நீங்களும் இணைய

| | | |
|---|---|---|
| இலவச விசா கட்டார் | தொழில்நுட்பவியலாளர் சிவில், இயந்திரவியல், மின்சாரவியல், மின்பிறப்பாக்கி, குழாய்பொருத்துநர் | 94,600/- |
| டுபாய் ஓமான் பாஃரேன் | தாதியர், பராமரிப்பாளர், பல் மருத்துவ தாதியர், மருத்துவ மாது, உதவியாளர் (ஆண் பெண் இருபாலாரும்) | 115,000/- தொடக்கம் 192,000/- |
| கட்டார் | மோட்டார் சைக்கிள், டாக்சி, பஸ் டிரைவர், Nissan கம்பனி பணியாளர் | 49,200/- தொடக்கம் 82,000/- |
| சவுதி அல்மராய் | விற்பனை உதவியாளர், டிரைவர், மெக்கானிக், வெல்டர், பிளம்பர், A/C தொழில்நுட்பவியலாளர் தொழிலாளர்கள் | 46,200/- தொடக்கம் 73,800/- + கமிஷன் |
| குவைத் | ஹொட்டேல் பணியாளர்கள் Dish Washer, Waiter, Manager, Kitchen Helper, Commi, Chef | 67,990/- தொடக்கம் 287,650/- + சேவைக் கட்டணம் |

குறிப்பு பணி ஒப்பந்தம் பெற்ற பின்னரே பயணக் கட்டணம்
விபரங்களுக்கு ☎ 0777 324 004, 0773 616 798
SIKARAM ACADEMY Business · Hospitality · English FAST TRACK to CAREERS
TGL SINCE 1990 Trans Gulf (Pvt) Ltd.,
221 - 1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் தொ.பே.: 021-222 90 11
90, First Floor, Chatham Street, Colombo 1 (C-2903)



விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK - 550 */=Kg
கனடா - 900 */=Kg
ஜேர்மனி - 700 */=Kg
நெதர்லாந்து - 700 */=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
(C-2882)
☎ 0768226240
V2 TRAVELs
• மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



வேலைவாய்ப்பு - 2018
எமது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் யாழ் புதிய கிளைகளிற்கு முகாமைத்துவத்துறையில் பயிற்சிக்கான நேர்முகத்தேர்வு ஆரம்பமாகவுள்ளது. (தகுதி O/L Pass) 180 நாட்கள் பயிற்சியின் பின்பு சார்வதேச ரீதியாக வணிகத்துறையில் இணைந்த எமது நிறுவனத்திலே நிரந்தரமான பதவிகளும் வழங்கப்படும். யாழ் மாவட்டத்தினைத் தவிர்ந்த வெளிமாவட்டத்தினருக்குப் பயிற்சிக்காலத்தில் தங்குமிட வசதி, பயிற்சியின் போது 15,000/= - 25,000/= வரை பெற்றுக்கொள்ள முடியும். பயிற்சியின் பின் மாதமொன்றிற்கு 45,000/= க்கு அதிகமான கொடுப்பனவும் வேறு சலுகைகளும் உண்டு.
தொடர்பு :- 077 157 1699
(C-2927)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532



அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட
நூற்றாண்டு விழா - 2019
ஸ்தாபிதம் 1919
வருடாவருடம் தமிழ் புத்தாண்டு தினத்தன்று வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டுவரும் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா எதிர்வரும் விஹாரி வருடம் (2019) நூற்றாண்டு பெருவிழாவாக வெகு கோலாகலமாக கொண்டாடப்படவுள்ள
நூற்றாண்டு விழாவையொட்டி முதலாவது போட்டியாக வட மாகாண ரீதியிலான
"மாபெரும் பட்டம் விடும் போட்டி"




| வடமாகாண ரீதியில் | | உள்ளூர் ரீதியில் | |
|---|---|---|---|
| முதலாம் இடம் | - 50,000/= | முதலாம் இடம் | - 10,000/= |
| இரண்டாம் இடம் | - 30,000/= | இரண்டாம் இடம் | - 7,000/= |
| மூன்றாம் இடம் | - 20,000/= | மூன்றாம் இடம் | - 5,000/= |

பெறுமதியான 10 ஆறுதல் பரிசில்கள் வழங்கப்படும். பெறுமதியான 10 ஆறுதல் பரிசில்கள் வழங்கப்படும்.
போட்டி நடைபெறும் இடம் - அரியாலை திறந்தவெளி மைதானம்.
நாள் - 15.07.2018ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை.
நேரம் - பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை
(4529)
அணி அணியாக திரண்டு வருவீர். பட்டம் விடும் போட்டியில் கலந்து கொள்வீர், பரிசில்களை வென்றிடுவீர்.
தொடர்புகளுக்கு : திரு.த.ஹரிஷானந் - 0771778406, திரு.நி.கவிந்தன் - 0773095745
இப்போட்டிக்கான அனுசரணையாளர்:- அரியாலையூர் ஜேர்மன்வாழ் திரு.சுப்பிரமணியம் கணேசதாஸ்.


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.